சக்தி மலர்

க 890

ராய. சொக்கலிங்கன்

3467

# இன்பம் எது

'வாழ்வு என்பது என்ன ? அறிதல்தான்' என்கிறார் ஓர் ஆங்கில ஆசிரியர். அறிதலே, அறிவுடைமையே வாழ்வு--இன்பம் எல்லாம். அறிவற்ற வாழ்வு வாழ்வல்ல; இன்பமுமல்ல. மடமையிருள்தான் துக்கத்துக்குக் காரணம். நம் நாட்டில் உலவும் பல மூடத் தனங்களை ஓட்டும் ஒளித்திரள் இக் கட்டுரைகள்.

PRESENTED BY:
V. ... M.
... CHETTIAR
3467

3467

நகர வைசிய இளைஞர் தமிழ் சங்கம்
Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

PRESENTED BY:
V. PR. PL. M.
CHETTIAR
KASIVI[illegible]
PAGANERI.

# இன்பம் எது

ராய. சொக்கலிங்கன்

சக்தி காரியாலயம்
மதுரை :: காரைக்குடி

முதற்பதிப்பு: அக்டோபர் 1942

சகல உரிமைகளும்
சக்தி காரியாலயத்தாருக்கே

சக்தி பிரஸ் லிமிடெட், காரைக்குடி

3467

## பதிப்புரை

இன்பம் என்பது மன உணர்ச்சி. அதற்கு அறிவின் துணை வேண்டும். அறிவில்லாமல் இன்ப அனுபவம் கிடையாது. பகுத்தறிவை இழந்த வாழ்வு வாழ்வதிலே இன்பம் ஏது? அறிவு பரந்து வாழ வேண்டும். பல மூடக் கருத்துக்களைத் தூரத் தள்ள வேண்டும். அந்தப் பணியை, இலக்கியச் சுவை நிறைந்த தமிழில் ஆசிரியர் திரு. ராய. சொக்கலிங்கன் இக் கட்டுரைகளில் புரிகிறார். அறிவுத் தெளிவு நிறைந்த இவை, தமிழ் மக்களுக்கு, புது வாழ்வு வாழ வழி காட்டுகின்றன. படித்துப் பயன் அடைவது அவர்கள் கடமையாகும்.

**சக்தி காரியாலயத்தார்.**

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| க. | இன்பம் எது? ... | 1 |
| உ. | ஊழியம் ... | 9 |
| ௩. | பெரு நெறி ... | 15 |
| ௪. | மதக் குறிகள் ... | 22 |
| ௫. | சாத்திரங்கள் ... | 31 |
| ௬. | புராணங்கள் ... | 39 |
| எ. | ஆராய்ச்சி அறிவு ... | 46 |
| அ. | இயற்கை இன்பம் ... | 54 |
| ௯. | அகமும் புறமும் ... | 61 |
| க0. | உயிரும் உடலும் ... | 69 |
| கக. | தமிழ்ச்சுவையும் தமிழரும் ... | 77 |
| கஉ. | அழகு எது? ... | 84 |
| க௩. | இறைக்கு வேலை என்ன? ... | 91 |
| க௪. | அன்றும் இன்றும் என்றும் ... | 98 |
| க௫. | உண்மை—வாய்மை—மெய்ம்மை ... | 105 |
| க௬. | யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் ... | 113 |

3469

# இன்பம் எது?

இப்பரந்த பேருலகில் பிறந்தவர் அனைவரும் விரும்புவது இன்பம் என்பதை எவரும் மறுக்கத் துணியார். இன்பமன்றித் துன்பத்தைப் பேதையும் கருதார். ஆனால் இன்பம் எது என்பதிலேயே பெரிய ஐயப்பாடு இருக்கின்றது. உலகத்தில் வதியும் மக்கள் பலப்பல கோடியாவர். இத்துணை கோடி மக்களில் இருவர் கருத்துக்கூட எல்லாவற்றினும் ஒவ்வுதல் அருமை. எத்துணைநெருங்கிய நண்பரும் மிகப் பெரும்பாலான கருத்துக்கள் ஒன்றுதல் பெற்றிருந்தபோதினும் சிலவற்றில் மாறுபடக் காண்கின்றோம். உளத்தின் போக்கு ஒவ்வொருவருக்கு ஒவ்வொருமாதிரி எனவே, வேண்டுவது எல்லோர்க்கும் இன்பம் என்ற ஒரு பொருளே யெனினும், ஒவ்வொருவர் ஒவ்வொன்றை இன்பமாகக் கருதுகின்றனர். இது நாள்தோறும் கண்கூடாக அனைவரும் கண்டுவருவதே.

* * *

ஒருவர் வேளை தவறாது நன்றாகச் சாப்பிட்டுக் கொண்டு காலங்கழிப்பதை இன்பமெனக் கருதுகின்றார். ஒருவருக்கு வாணாளில் பெரும்பகுதி நன்றாக உறக்கம் பிடிப்பது இன்பமாக இருக்கின்றது. ஒருவர் மக்களை நிறையப் பெற்றுக் கொண்டிருந்தாற் போதும்; அதுவே இன்பம் என அகங்கொள்கின்றார்.

ஒருவர்உளம் பெரிய மாளிகைபோன்ற வீடொன் றைக் கட்டிக்கொண்டு அதில் உறைதல் இன்பமென உணர்கின்றது. ஒருவர் இயந்திர வண்டிகளிலேறி உல்லாசமாகத் திரிவது இன்பமென எண்ணுகின்ருர். ஒருவர் உச்சிமுதல் உள்ளங்கால்வரையும் நல்ல ஆடை அணிகளைப் பூட்டிக்கொள்தலே இன்பம் என நினைக் கின்ருர். ஒருவர் பெண்ணின்பத்தைத் தவிர உலகில் வேறு இன்பம் ஏது எனப் பேசுகின்ருர். ஒருவருக்குப் பிறன்மனை நச்சுதல் இன்பமாக இருக்கின்றது. ஒரு வருக்குப் பிறன்தோள் பொருந்துதல் இன்பமாகத் தோற்றுகின்றது. ஒருவருக்குச் சீட்டாட்டத்தில் உள்ள இன்பம் வேறு எதினும் இருப்பதில்லை, ஒருவ ருக்கு மது உண்டல் இன்பம். ஒருவருக்குப் புலா லருந்துதல் இன்பம். ஒருவருக்குப் புகையிலையாதி விழுங்குதல் பேரின்பம்.

* * *

ஒருவருக்குச் சட்டசபை செல்வதில் இன்பம். ஒருவருக்கு அதனை வெட்டவெளியாக்குவதில் இன் பம். ஒருவருக்கு அங்குச் சென்று முட்டுக்கட்டை போடுவதில் இன்பம். ஒருவருக்கு அதிகாரிகட்குக் காலணிபோல் நடப்பதில் இன்பம். ஒருவருக்குப் பட்டம் வாங்குவதில் இன்பம். ஒருவருக்குப் பிறருக்கு இடையூறு செய்வதில் இன்பம். ஒருவர் தம்மைப் பிறர் புகழ்வதே இன்பமென எண்ணுகின்ருர். ஒருவருக்கு அது நாராசமாகத் தோன்றுகின்றது. ஒருவர் பிறர்வசை உரைத்தலை இன்பமாகக் கொள் கின்ருர். ஒருவர் புறங்கூறுதலை இன்பமாக ஏற்கின் ருர். ஒருவர் பொய் புகல்தல் இன்பமென நினைக்கின் ருர். ஒருவர் எவ்வாற்ருனும் பொருள் சேர்த்தல்

ஒன்றே இன்பமெனக் கருதுகின்ருர். ஒருவர் தனக்குப பலர் கீழ்ப்படிந்து நடத்தல் இன்பமென உணர்கின்ருர். ஒருவர் தன்னைப் பெரிய மனிதன் என்று பலர் சொல்லுவதுதான் இன்பமென எண்ணுகின்ருர்; அதன்பொருட்டு ஏராளமாகப் பொருளைச் செலவிடுகின்ருர்; திருவிளையாடல் பல செய்கின்ருர். ஒருவருக்குத் தெருக்கூத்து இன்பமாக இருக்கின்றது. ஒருவருக்கு நாடகம் இன்பமாக இருக்கின்றது. ஒருவருக்குப் பாட்மிண்டன் என்று கூறுகின்ற பந்து விளையாட்டு இன்பமாக விருக்கின்றது. இவை நிற்க,

*                    *                    *

ஒருவருக்குப் பத்திரிகை படிப்பது இன்பமாக விருக்கின்றது. ஒருவருக்கு அறிவு நூல்கள் படிப்பது இன்பமாக விருக்கின்றது. ஒருவருக்கு நாவல் படிப்பது இன்பமாக விருக்கின்றது. ஒருவருக்குச் சொன்மாரி பொழிவது இன்பமாகவிருக்கின்றது. ஒருவருக்கு அதனைக் கேட்பது இன்பமாக விருக்கின்றது. ஒருவருக்கு இசையில் இன்பமிருக்கிறது. ஒருவருக்கு அவைத்தலைமை வகித்தல் இன்பமாக விருக்கின்றது. ஒருவருக்கு கழுத்து நிறைய மாலை வாங்கிக்கொள்வது இன்பமாக விருக்கின்றது. ஒருவருக்கு உபசாரப் பத்திரம் பெறுவது இன்பமாக விருக்கின்றது. ஒருவருக்குப் பிறர் இகழ்ச்சி புகழ்ச்சி எதனையும் எண்ணுது செயலில் அன்பர் பணி செய்தல் ஒன்றே இன்பமாக விருக்கின்றது.

*                    *                    *

இவ்வாருக ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு பொருள் இன்பமாகத் தோற்றுகின்றது. ஒருவருக்கு

இன்பமாகத் தோன்றும் பொருள் மற்றொருவருக்குத் துன்பமாகத் தோற்றுகிறது. உதாரணம் பல கூறலாம். ஒருவருக்குப் பிறனில் விழைதல் பேரின்பம்; இன்னொருவருக்கு அதைக் கேட்பதும் பெருந்துன்பம். ஒருவருக்குப் படிப்பதில் இன்பம்; மற்றொருவருக்குப் படிப்பென்றால் எல்லையற்ற துன்பம். இப்படியே ஒவ்வொன்றினும் ஒரே பொருள் ஒருவருக்கு இன்பத்தையும் வேறொருவருக்குத் துன்பத்தையும் செய்கிறது. எனவே இன்பம் என்ற ஒன்றை எப்பொருளும் பெற்றிருக்கவில்லை. எந்தப் பொருளுக்கேனும் அதன் இயற்கைக் குணம் இன்பமாக விருக்குமானால் அது ஒரே படித்தாக எல்லார்க்கும் இன்பம் தந்து நிற்க வேண்டும். அவ்வாறு எந்தப் பொருளும் எல்லோர்க்கும் இன்பந் தந்து நிற்கமுடியாது. ஆதலின் எந்தப் பொருளுக்கும் இன்பம் தரும் குணமில்லை. மாம்பழத்திற்கு ருசி, இனிப்பு என்றால் அது எல்லோர்க்கும் இனிக்குமே யன்றி எவருக்கேனும் பிறிதாக விருக்குமோ? இன்பத்தில் அவ்வாறில்லை. நூல்கள் விதித்தன சிலருக்கு இன்பமாக விருக்கின்றன. நூல்கள் விலக்கியவற்றை இன்பமெனக் கொள்வாரும் எண்ணற்று ரிருக்கின்றனரென்பதை முன் கூறியவை கொண்டே அறிதலாகும். ஆக இன்பம் யாண்டிருக்கின்றது? அது எப்பொருளினும் இல்லை. உள்ளத்திலேயே இருக்கின்றது. எவர் உள்ளம் எப்பொருளை இன்பமெனக் கருதிற்றோ ஆண்டு அப்பொருளிடத்து அவர் இன்பம் நுகர்கின்றார். எனவே இன்பம் என்பது உளத்தில் தோன்றும் உணர்ச்சி யென்பது தேற்றம்.

*　　　*　　　*

பொருளில் இன்பம் இருப்பதாகக் கருதுதல் அறியாமை. கூர்ந்து ஆராயும் எவரும் பொருளில் இன்பம் இல்லை யென்பதை ஏற்பர். இவ்வுண்மை ஓராமையினாலேயே மக்கள் இன்பம் இன்பம் என எண்ணித் தீச்செயல் பல செய்தழிகின்றார். இன்பம் எப்பொருளினும் இல்லை; உளத்தின் உணர்ச்சியே இன்பம் என்பது; இன்பமென எண்ணித் தீமை செய்தலாகாது என்பதை நன்றாக உணர்த்துதற்காக இக்கட்டுரையில் அது விரித்துக் கூறப்பெறுகிறது. இன்பம் உள்ள உணர்ச்சியே என்பதை உளம் பொருந்த உணர்ந்து விடுவார்களானால் பின்னர் இன்பம் என எண்ணிச் செய்யும் தீமைகளையெல் லாம் போக்கிவிடுதல் கூடுமன்றோ? இன்பம் பொரு ளிலில்லை யென்பதற்கு ஈண்டுக் காட்டியதைவிட இன்னும் விளக்கமாகக் காட்டவேண்டியதில்லை யன்றோ?

* * *

மக்கள் செய்ய வேண்டுவதென்னை? நூல்கள் விதித்த நற்கடமையாகிய அறனே. பிறிது செய்யக் கனவினுங் கருதலாகாது. அறன் ஒன்றே இன்ப மெனக் கருதப் பழகிவிட்டால், அதன் பாற்பட்ட நற்செயல்கள் தவிரப் பிறயாவும் துன்பமாகவும் அவையே இன்பமாகவும் தோன்று மென்பதிற் சிறிதும் ஐயமில்லை. அப்பழக்கமே - அறமே இன்ப மெனக் கருதும் அறிவே, மக்கள் பெறுதல் வேண்டும். அவ்வறிவு படைத்தாலன்றி மக்கள் யாக்கைபெற்ற பயன் இல்லை; இல்லை; முக்காலும் இல்லை. மக்கள் அறத்தையே இன்பமாகக் கருதும் அறிவு பெற வேண்டுமென்று கருதியே யன்றோ இன்பம் நுகர

இவ்வுலகிற் பிறந்த மக்கட்கு முதலில் கற்க அமைந்து ஔவைப் பிராட்டி யருளிய அருஞ் செற்றொடர் "அறஞ் செயவிரும்பு" எனப் பணித்தது?

* * *

"எப்பொருளும் அவரவர் எண்ணத்தின் வழி இன்பமாகத் தோற்றுங்கால் அவரவர்க்கு இன்பமாகத் தோன்றுவனவற்றை அவ்வவர் செய்யலாமே" என்ற கேள்விவருமோ என்றஞ்சுகிறேன். அவரவர்க்குத் தோன்றியதை அவரவர் செய்வதென்ருல் உலகில் நூல்கள் வேண்டுவதில்லை; ஒழுங்குகள் வேண்டுவதில்லை; ஒன்றுமே வேண்டுவதில்லை யென்ருகிவிடும். அதனை எண்ணியே "மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்ற மூதுரை எழுந்தது. இதனுல் எவர் எண்ணத்தின் உரிமையையும் நான் பிடுங்குகின்றே னென்று எவரும் கருதுதலாகாது. உலகில் எல்லோரும் பேரறிவு படைத்தவர்களாக விருந்து செய்வன தவிர்வன உணர்ந்தவர்களாக விருப்பாராஞல் அவரவர் எண்ணத்தின் வழி நடப்பதில் தடையொன்று மிராது. உலகில் பேரறிவு படைத்தவர் ஒரு சிலரே இருத்தல் இயல்பு. இது என்றுங்கண்ட உண்மை. இதனை ஆதாரத்தோடு மறுக்க முடியாது. இதனுல் யாரும் தங்களை அறியாமையுடையவர்கள் என்று கூறுவதாகக் கோபங்கொள்ளலாகாது. உண்மையுணரும் ஆற்றல் வாய்ந்த பேரறிஞர் ஒரு பகுதியார் பண்டும் இருந்தனர். இன்றும் இருக்கின்றனர். பண்டிருந்த பல்லோர் செய்யத் தக்கன இன்ன நீக்கத்தக்கன இன்னதென உலகத்து மக்கள் உய்யும்பொருட்டு அறநூல்கள் எழுதிவைத்துள்ளார். இன்றுள்ள ஒரு பகுதியாரும் அவைகளை

விளக்குவதோடு தாங் காணும் உண்மைகளையும் உலகிற்கு உணர்த்திவருகின்றார். அவைகளை நன்கு ஓர்தல் வேண்டும். அவையனைத்தையும் அப்படியே கொள்ளவேண்டுமென்றும் நான் கூறவில்லை. அம் மூடக் கொள்கைகட் கெல்லாம் ஈண்டு இடமில்லை. ஒவ்வொருவரும் கடவுள் கொடுத்த அறிவுகொண்டு எல்லாப் பொருள்களையும் எல்லோர் கருத்தையும் அலசியாராயலாம். தாங்கள் தெளிந்து கொள்ள முடியாதவற்றை நெருங்கிய அன்பர்கள் துணை கொண்டு தெளியலாம். அதினின்றும் தாங்கள் உண்மைதேறி அவ்வழி யொழுகுதலே மாண் புடைத்து.

* * *

எவரேனும் தான் சொல்லுவதுதான் சரி அதை எல்லோரும் ஆராயாமலே ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று கூறுவாரானல் அவரே பேரறியாமை யுடையவர் என்பது நிச்சயம். அறம் வகுத்த பேரறிஞர்களுள் வள்ளுவரை நிகர்த்தார் எவருமிலர் என்பது பல அறிஞர்களின் கருத்து. அப்புலவர் பெருமானுர், 'நான் சொல்வதே மறை; அதனை ஏற்றுக்கொள்க' என்று கூறினுரல்லர். அவ்வாறு கூறியிருந்தால் அவர் உலகம் போற்றும் அறிவு பெற் றிருக்க முடியாது. "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு" "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என் னும் இரண்டு அருங்குறட்களை அருளினர் அப் பெருந்தகை.

* * *

எனவே அறிஞர்கள் கருத்துவழித் தம் அறிவைச் செலுத்தி மெய்ப்பொருள் காண்டல் வேண்டும். அது கண்டு ஒழுகிய அன்றுதான் பிறவிப் பயன் உண்டு. அம்மேலான நிலையையே இன்பம் எனக் கருதல் வேண்டும். கடமையே இன்பமெனக் கருதும் உளம் பெற்ருல் பிறஎதுவும் இன்பமாக ஆண்டுத் தோன்ருது. கடமை என்ன என்பதை ஈண்டு விளக்கவேண்டுவதில்லை. "கடனென்ப நல்லவையெல்லாம் கடனறிந்துன் சாருண்மை மேற்கொள்பவர்க்கு" என்ருர் தெய்வப் புலவர். ஆகவே, அந்நல்லவை செய்தலையே இன்பமெனக் கருதி மக்கள் ஆற்றுவாருக. அன்பர் பணி செய்தாலன்றி இன்பநிலை யெய்தாதென்று தாயுமானப் பெரியார் சாற்றுகின்ருர். அவர் கண்ட இன்பம் அது. அப் பெரியார் இன்பமெனக் கண்ட பெரும் பொருளையே மக்களெல்லாரும் இன்பமெனக் காண வேண்டுமென்பதே எனது பெரு விருப்பம். அப் பெரியார் பணித்த ஒரு பாவைக் கூறி இக் கட்டுரையை முடிப்பேன்.

"அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கி விட்டு விட்டால், இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே."

## உ. ஊழியம்

**ஊ**ழியம், தொண்டு, பணி என்பன ஒரு பொருட் சொற்கள். இம்மூன்றும் தனித் தமிழ்ச் சொற்கள். இம்மூன்று சொற்களும் குறிக்கும் ஒரே பொருளாகிய ஊழியத்தை - தொண்டை - பணியை ஆற்றுபவன், ஊழியன் - தொண்டன் - பணியாளன் என அழைக்கப் பெறுவான். இப்பரந்த பேருலகில் பிறந்த எவர்க்கும் உறுகடன் இவ் வூழியமேயாம். இதுபற்றியே "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்றார் பெரியார்.

* * *

ஊழியம் இன்றேல் உலகம் இயங்காது. உலகிற் றோன்றிய உயிர்களனைத்தும் ஊழியம் புரிந்து கொண்டுதான் இருக்கின்றன. மாக்களும் ஊழியம் புரிகின்றன; மக்களும் ஊழியம் செய்கின்றார். உலகில் ஊழியமாற்றா மக்களுமில்லை; மாக்களுமில்லை. அவ்வாறாயினால், பின்னை யூழியம் ஏன் உயர்வுடையதாகக் கொள்ளப்பெறுகிறது என்ற வினா வெழலாம்.

* * *

ஊழியம் என்ற அளவில் ஒன்றாகக் காணப்படினும் ஊழியத்திற் பாகுபாடுளது. ஊழியத்தை இரு கூறாகப் பிரிக்கலாம். ஒன்று தன் பொருட்டாற்று மூழியம்; மற்றொன்று பிறர் பொருட் டியற்று மூழியம். இவற்றில் முன்னையதாற்றுவோர் பற்பலர்; பின்னையதியற்றுவோர் சிற்சிலர். முன்னையதேயாற்று

வார் சிறியர்; பின்னையதுமியற்றுவார் பெரியர். முன்னையது செய்தல் எளிது; பின்னையது புரிதல் அரிது. முன்னையதால் விளைவது கண்கண்ட இன்பமாகத் தோன்றும்; பின்னையதின் விளைவு பெருந் துன்பமாகவே பிறங்கும். முன்னவர் பற்பலராகவும் பின்னவர் சிற்சிலராகவும் இருத்தற்குக் காரணம் இன்னோரன்னவைகளேயாம்.

*   *   *

ஊழியம் புரிதலே, தன்னுயிருக்கு உறையுள்ளாக இலங்கும் உடலுக்கு ஊழியம் புரிதல், தன் வாழ்க்கைக்குத் துணையாகவிருந்து கடனாற்றும் மனைவி மக்கட்கு ஊழியஞ் செய்தல், தனக்குத் தொடர்புடையராகிய சுற்றத்தாருக்கும் நண்பர்கட்கு மூழியமாற்றல், பன்னாளுன்பற்றுள்ள தனது வகுப்புக்கு ஊழியமியற்றல், தான் பயில் மொழி வழங்குவோர்க்கு ஊழியமிறுத்தல், தான் கொண்ட சமயஞ் சார்ந்தாருக்கு ஊழியம் புரிதல், தன் பெரு நாட்டார்க்கு ஊழியமாற்றல், மாபெரும் உலக மன்னுயிர்க்கெலா மூழியம் செய்தல் எனப் பலவாக விரிக்கலாம். இதில் முதலிற் கூறிய உடலுக்குப் புரியு மூழியத்தை மாக்களும் ஆற்றுகின்றன. தன்னுடல் வளர்தற்கு நன்கு வாழ்தற்கு ஏற்ற உணவுகளைச் சேர்க்கவும் உடல் இன்புற்றுறைய ஏற்றன செய்யவும் புரியு மூழியமே உடலின் பொருட்டுச் செய்யு மூழியம். இது செய்யார் யாருமிலர். இதுதான் தன் பொருட்டுச் செய்யு மூழியம். எஞ்சிய யாவும் ஒருவாருகப் பிறர் பொருட்டுச் செய்யப்பெறு மூழியமேயாம். தன்னுடலையும் தன்னின் வேருக்கி அதுவும் பிறர் பொருட்டுச் செய்யப்பெறு மூழியமே எனக்

கூறிவிடலாம். அதுதான் உண்மை. அவ்வுண்மை கைவரப்பெற்றவர்க்குத் தனக்காகப் புரியு மூழியமே ஒன்றும் இராது. எல்லாப் பொருளேயும் ஒன்ருகப் பார்த்துச் செய்யவேண்டிய தலேயாய வூழியம் எதுவோ அதனேச் செய்யத் தொடங்கிவிடுவார்கள். ஈண்டுப் பெரிதும் உடல் வயப்பட்ட மக்களேயே நோக்கிக் கூறுவதாகலின், அதனேத் தன் பொருட் டாற்று மூழியமென்றே வைத்துப் பேசுவோம்.

* * *

இரண்டாவதாகக் கூறிய மனேவி மக்கள் பொருட்டுச் செய்யு மூழியம், தானல்லாத பிற உரு வங்கட்குச் செய்யப்படுவதால் அது பிறர்க்குப் புரி யூழியமெனக் கொண்டாலும், மக்கள் அதனேயும் தனக்குச் செய்யு மூழியமாகவே கருதிக் கடனுற்று கின்றனர். மனேவி மக்கட்குச் செய்யு மூழியத்தைப் பிறர் பொருட்டான ஊழியந்தானென்று அறுதி யிட்டு அவ்வகையாகப் பார்ப்போமானல், மக்கள் யாக்கை பெற்ற அனேவருமே இது செய்வாராகவே காண்கின்றனராகலின், எல்லோரும் பிறர்க்குரியாள ராகவே ஆகின்றனர். அவ்வாருங்கால், "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்" என்ற உயர் சொற் ருெடர்க்கு இன்னுரெல்லாம் இலக்காகின்ருர். ஆத லின், பிறராகவிருந்த போழ்தினும், பெரிதும் தொடர் புடைய தமராக வெண்ணியே சற்றேறக்குறையத் தனக்குச் செய்து கொள்வதை ஒத்த ஊழியஞ்செய் யப்படும் இதுவும் தனக்குச் செய்துகொள்ளு மூழி யத்தின்பாற் சேர்த்துக்கொள்ள வேண்டுவதாகவே ஆகிறது. இவர்கள் தந்நல ஊழியர்களே.

* * *

உடலுக்கும் உயிருக்கும் என்று மழியாத் தொடர்பொன்று அறவே யில்லை என்பதையும், மனைவி மக்களும் அத்தகையனவே என்பதையும், மக்கள் உணராமையாலேயே இவற்றைத் தன் பொருட்டுச் செய்யப்படு மூழியமென எண்ணி மயங்கி, இவற்றையே புரிந்து பயனின்றி அழிந்துவிடு கின்றார். இவற்றிற்கும் ஏனையோர்க்குச் செய்யு மூழியத்திற்கும் வேறுபாடு ஏது? இவற்றை மக்கள் உணராமையினாலேயே தன்னலம் பிறர் நலம் - தன் பொருட்டுச் செய்யு மூழியம் பிறர் பொருட்டுச் செய்யு மூழியம் எனப் பிரிக்கவேண்டியதாயிற்று. உடலைத் தானெனவும் மனைவி மக்களையே தொடர் புடையராகவும் எண்ணிக் கடனாற்றும் மக்கள் கொள்கை வழிச்சென்றுதான் "பிறர்க்கென வாழ் தலே பெரியவர் கடமை" யாதியன அருளினர் அறிஞர்.

* * *

இக்கூற்றுப்படி நாம் மேலே மூன்றாவதூழிய மாகக் குறித்தது முதல் திட்டமாகப் பிறர் பொருட் டாற்று மூழியமாகவே கூறலாம். ஆனாலும் அதினும் பாகுபாடில்லாமலில்லை. ஒன்றுக்கொன்று தொடர் புச் சேய்மையும் ஏற்றத்தாழ்வும் உள. தன்னல வூழியமாகக் கருதிக்கொள்ளும், தான், மனைவி, மக் கள், தாய், தந்தை, துணைவர் ஆதிய ஒரு சிலருக்குச் செய்யு மூழியத்தினின்றும் தாண்டிப் பிறர் பொருட் டாகச் செய்வதாகக் கருதியாற்று மூழியத்தில், முத லாவது சுற்றத்தார்க்கும் நண்பர்கட்கும் ஆற்றுவ தாகும். இவ்வூழியத்தின் பயனடைவோரும் ஓரள வுடைய சிலராகவேயிருப்பர். இதின் மேம்பட்டது

ஒரு வகுப்புக்கு ஊழியம் புரிவது. இவ்வூழியத்தின் பயனை நுகர்வோர் சில பல ஆயிரவராகவே யிருப்பர். இதனின் உயர்ந்தது ஒரு மொழியாளர் நலங்கருதி யூழியம் புரிதல் ; இதனின்றும் சிறந்தது ஒரு நற்சமய ஆக்கங்கருதி யூழியம் ஆற்றுதல் ; இவற்றின் பயனைச் சிலகோடி மக்கள் பெறுவர். இவற்றினும் மிகச் சிறந்தது ஒரு பெரு நாட்டார் உயர்வு நாடி யூழிய மிறுப்பது. இது பலகோடி மக்களின் பெரு நலன் குறிப்பது. எல்லாவற்றினுந் தலை சிறந்தது, உல கெலாம் ஓங்கப் பேரூழியம் புரிவதே. இதனால் அவனியுயிர் அனைத்து மூழியத்தின் பேறடைந் துயரும். எனவே உலக வூழியமே சிறந்த ஊழியம் இதனால் மற்றவை தள்ளத்தக்கன வென்பது கருத் தன்று. குறித்தவற்றில் ஒன்றுக்கொன்று அதிகமான எண் கொண்டவர்க்கு நலம்பயத்தலாலேயே முறை யாக உயர்வு கூறப்பெற்றது. எல்லோரும் உலக முழுமைக்குமே யூழியஞ் செய்தல் வேண்டுமென்ற விரிந்த உளம் பெற்றுவிட்டால் இடையிலுள்ள ஊழியங்கள் தாமேயமைந்து கிடக்கும்.

* * *

பிறவிப்பேறு ஊழியம் புரிதலே என்பது அப்பர் முதலிய பெரியோர் கருத்து. அது பிறப்பறுத்து அசைவற்றுக் கிடத்தலே என்ற கருத்துளாரும் உளர். முன்னவர்தாம் பிறர்பொருட்டு ஊழியம் புரிவோர் ; உண்மையில் தம் பொருட்டு ஊழியம் புரிவோர் பின்னவரே. முற் கூறிய உடலுக்கும் பிறவற்றிற்கு மூழியம் புரிவோர் உண்மையில் தமக்கு ஊழியம் புரிந்தோராக மாட்டார். தமது வீடு பேற் றைக்கருதி யூழியம் புரியும் இவர்கள் தாம் மெய்யாகத்

தம்பொருட்டு ஊழியம் புரிவோராவர். இவர்கள் பிறப்பறுத்து அசைவற்று யாண்டோ கிடப்பதால் உலகம் என்ன நலனடையப்போகிறது? இவர்களைக் காட்டிலும் தொண்டு செய்தலே - பணியாற்றலே - ஊழியம் புரிதலே கடனாகக் கொண்டோரே சிறந்தோர் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? எனவே ஊழியமே சிறந்தது. ஊழியம் புரிதலே மக்கள் கடன்.

# ௫. பெருநெறி

"பெருநெறி பிடித் தொழுக வேண்டும்" என்றருளினர் இன்றைக்குச் சின்னாட்கள் முன்னர் இந்நில உலகில் உடலெடுத்து மறைந்த தண்டமிழ்த்தீந்தேன் பொழியும் செந்நா வமைந்த இராமலிங்கப் பெரியார். பெருநெறியாவது என்னை ? பெருநெறி என்ற சொற்றொடர், பெரிய வழி - உயர்ந்த கொள்கை - சிறந்த பாட்டை எனப் பொருள் படும். இந்நெறியே பெரியோர் - உயர்ந்தோர் - சிறந்தோர் கொள்ள வேண்டுவது. இதனின் மாறுபட்ட சிறு நெறி - சிறிய வழி - தாழ்ந்த கொள்கை - இழிந்த பாட்டையைக் கொள்வோர் அந்நீர்மையாளரே.

* * *

பெருநெறி கொள்வோரே பேரறிஞர். பேரறிவு கைவரப் பெற்றாலன்றிப் பெருநெறி அறிதலும் அந்நெறி கொள்தலும் அருமை. பெருநெறி கொள்ளும் அறிவாற்றல் ஒருமிகச் சிலருக்கே வாய்த்திருக்கின்றது. சிறு நெறிகள் பரந்து பெருகிக்கிடக்கின்றன. அவற்றிற்கு ஆட்பட்ட பழக்கத்தால் மக்கள் உள்ளத்தில் அறிவுநெறி அரும்புதல் அரிதாக உளது. பெருநெறி காணவிடாமல் சிறு நெறிகள் பெரிதும் தகைகின்றன. எண்ணிலாப் பல சிறு நெறிக் கடல்களின் கரையேற ஒவ்வொருவருக்கும் தனித்தனியே அறிவு என்ற தோணியொவ்வொன்று இறையால்

தரப்பட்டிருக்கின்றன. தங்கள்பால் அத்தோணி உண்மையை அறியாமல் ஒரு பகுதியாரும் அத்தோணி பயிலமாட்டாமல் ஒரு சாராரும் சிறுநெறிக் கடல்களுள் கிடந்துழலகின்றார். அஃதுளவாந் தன்மையைத் தமது உளக்கண்களால் இயல்பாகவே அறிந்த சிலர் அதை அறிவைத் துணையாக்கொண்டு பயின்றறிந்து சிறு நெறிக் கரையேறிப் பெருநெறியிற் புகுகின்றார்.

* * *

உலகத்தில் சிறு நெறிகளே பெருக்கமாதலின் பெரும்பாலாக அனைவரும் தொடக்கத்தில் சிறு நெறியில் வீழ்ந்துதான் கரையேறுகின்றார். எளிதில் அறியும் மிகப் பேரறிவு படைத்தோர் சில நாட்களுள் அறிந்துவிடுகிறார். வேறு சிலர் சிறிது அதிகநாட் சென்று அறிகிறார். வாழ் நாள் முழுமையும் அறிந்து கொள்ளாமலே அக்கடலுள் மூழ்கியே மாண்டுபடுவார் எண்ணற்றார். சிறு நெறி நிற்கும் எல்லோரையும் பெரு நெறிப்படுத்த முயலவேண்டுவது பெரு நெறியாளர் கடன். தாம் இன்புறுதல் உலகு இன்புறக்கண்டு காமுறுதலே கற்றதன் பயனன்றோ? சிறு நெறியாளர் தந்நெறியாளரை அவர் வழிவிடாததோடுகூட அவரையும் தம் வழிப்படுத்த முந்துவதும் இயற்கையே. பெரு நெறியாளர் சிறு நெறியாளர் வலைப்படார் என்பது நிச்சயம். அவருள் இயன்றாரையெல்லாம் தந்நெறிப்படுத்த வேண்டுவதே. அவரனைவரும் தந்நெறிப்பட்டுவிடுவரா என்பது வினாவன்று. எல்லோரும் பெரு நெறிப்பட்டுவிடுதல் என்பது என்றுமில்லை. முயற்சி சிறிதும் தாழாதாற்ற வேண்டுவதே. நடப்பன நடக்க.

* * *

பெருநெறியின்பாற்படும் பொருள் எவை எவை என்பவற்றை ஈண்டு அறுதியிட்டுரைக்க முடியா. அவை எத்துணையோபல. அறிவுகொண்டுதான் காண்டல் வேண்டும். எல்லாவற்றிற்கும் கருவியாக நிற்பது அறிவே. அறிவை அழுத்தமாக எதனினும் கையாண்டுகொண்டே வந்தால் இறுதியில் அவர் பெருநெறிபற்றியே தீர்வர் என்பது துணிபு. அறிவுக்கு மேற்பட்ட பொருளொன்று இல்லை. எல்லா உலகத்தையும் இயக்கும் கடவுள் என்ற ஒரு சக்தியுண்டு என்று காண்பதும் அறிவேயன்றோ? அறிவு எல்லோருக்கும் உண்டு. அறிவில்லாதவர் ஒருவர் கூட இல்லை. அறிவு இன்றேல் இயங்கமுடியாது. ஆனால் ஒருவனைப் பார்த்து அறிவில்லாதவன் என்பது சாதாரணமரபாக யாண்டும் இருக்கிறது. இதற்கு அறிவு குறைந்தவன் என்பதே பொருள். அடியோடு அறிவு இல்லாதது பிணமே. மேலும் அறிவில்லாதவன் என்பதற்குப் பகுத்தறிவு இல்லாதவன் என்றுங் கூறலாம். அறிவுகளுள் சிறந்த அறிவு பகுத்தறிவாகிய ஆராய்ச்சியறிவே யன்றோ? அவ்வறிவு மக்கட் பிறப்பினர்க்கு இயல்பாகவே கடவுளால் அமைக்கப்பட்டுளது. அதனைப் பயிற்சி செய்து சிறு நெறி தள்ளிப் பெருநெறி பிடித்தொழுகவேண்டும்.

* * *

பெரு நெறிக்கும் ஆராய்ச்சிக்கும் பெரிதும் தொடர்புண்டு. ஆராய்ச்சியில்லார் பெருநெறியை ஒருபோதும் காணமாட்டார். பெரு நெறி சிறு நெறி அறிவது ஆராய்ச்சியினாலேயன்றோ? அவர் சொன்னார் இவர் சொன்னார் என்பதை அப்படியப்படியே நம்பிக்கொண்டு வாழ்வோர் பெரு நெறி பிடித்தல்

இல்லை. அவரவர் அப்பொழுதப்பொழுது இருந்த நிலைமையைப் பொறுத்து அறங்கள் கூறியிருப்பர். இன்றைய உலக நிலைமையையும் ஆற்றவேண்டிய அறத்தையும் நோக்கி ஆராய்ச்சியறிவால் ஆற்றுவதே பெருநெறிக்கிலக்கு. பெரு நெறிபற்ற எண்ணுவோர் எவ்வொரு கொள்கையையும் ஆராயாமல் முடிவாகக் கொள்தல் ஆகாது. திடீரென்று ஒன்றை முடிவு கட்டி விடுவதால் தவறு பல நேரும். எனவே எதனையும் துருவியாய்ந்தே முடிவுக்கு வரல்வேண்டும். ஒரு முடிவுக்கு வந்த பிறகுங்கூடப் பின்னாளில் தக்க காரணங்களினால் அது தவறெனப்படுமானால் அக்கொள்கையை மாற்றிக்கொள்ளச் சிறிதும் பின்னடைய வேண்டுவதில்லை. ஆராய்ச்சியில் நாளடைவில் புதைந்துகிடக்கும் உண்மைகள் புலனாவதுண்டு. நான் முடிந்த கொள்கைகொண்டுவிட்டேனாகலின் இனி அதை மாற்றிக்கொள்ளமாட்டேன் என்று நவிலுதல் மதியீனம். அவர் பெரு நெறியே காணார்.

* * *

பற்பலர் தமக்கும் ஆராயும் அறிவைக் கடவுள் கொடுத்திருக்கிறார் என்பதை அறவே மறந்து முன்பே சிலர் கோலிய சிறு சிறு எல்லைக்குள் நின்று, தாம், தம்மவரெனக்கொள்ளும் சிலர் கூறியது சரியோ தவறோவென்ற சிந்தனையே சிறிதுமின்றி வினையாற்றி வருகின்றார்; பிறர் கூறுவது என்ன என்பதைச் செவிமடுக்கவும் அஞ்சுகின்றார்; தாம் சில பரம்பரைவழியே பற்றிநிற்கும் கொள்கையின் நீர்மையை ஆராயவும் ஒருப்படுகின்றாரில்லர்; ஆராய்தல் பெரும் பிழையெனவும் எண்ணுகின்றார், பேசுகின்றார், எழுதுகின்றார்; தாம் செய்யும் காரியங்கட்கெல்லாம் காரணங்

கள் அறிந்துகொள்கின்றாரில்லை; அறிந்து கொள்ள முயல்கின்றாருமில்லை; அறிவித்தாலும் கேட்கின்றாரில்லை; அறிந்துகொள்ளுதலும் அதற்கு முயல்தலுங் கூடப் பாபம் என்று கருதுகின்றார் என்றால், அவர்கள் பொருட்டு என் செய்வது? அவர் பகுத்தறிவு படைத்த பயனை இழந்து, காலத்திற்கேற்ற அறத்தைத் துறந்து, பெருநெறி பிடிக்கும் பெருமை இழந்து, சிறுநெறிக்கிடந்து தீதுறவேண்டுவதே. இப்படியே பலர் மாண்டுபட்டுக்கொண்டே வருகின்றார்.

* * *

இக்கொள்கையாளரால் தான் சமய அறிவு நாட்டிற் குறுகியது; மூடக்கொள்கை பெருகியது; சமய உண்மையை அறிவார் தொகை அருகியது. அவர்கள் சமய அபிமானத்தால் ஆராய்ச்சியை ஒதுக்கிய போதினும் அதன் விளைவு மாறுபட்டதாகவே முடிகின்றது. சமய உண்மைகள் அறியாது மக்கள் ஒரு வழியாக ஒழுகிக்கொண்டே வருவார்களானால், காலஞ்செல்லச் செல்ல, சமயத்திற்கு உயிர் இருக்காது; உயிரற்ற உடல்மட்டும் நின்று, உயிர்போய உடலின் நிலையை ஈற்றில் எய்திவிடும். இந்நாள் நம் நாட்டில் சமய உண்மைகளை அறிவார் எண் மிகச் சுருக்கம். சமய அடையாளங்களில் ஆவேசங் கொள்வார் கணக்குப் பெருக்கம்.

* * *

புறச்சின்னங்களிலேயே கருத்துச் செல்கின்றது. அக ஆராய்ச்சி இல்லை; இல்லை அந்தோ! இது நம் நாட்டின் அரிய சமயங்கட்கு இந்நாள் ஏற்பட்ட பெருங்குறை. இக்குறையை இன்னே தொலைக்க முந்தவேண்டுவது அறிஞர் பெருங்கடன். சமயங்கள்

நிலைபெறவேண்டும் என்ற கருத்துடைப் பெரியோர்கள் இதில் ஒதுங்கி நிற்றல் தகாது. "ஹிந்து மக்கள் சமயத்தில் தத்துவம் இல்லை; அவர்கள் மூடநம்பிக்கையாக எதையேனும் செய்துகொண்டு செல்பவர்கள்" என்ற பேச்சுப் பெருக விடுதல் நலமன்று. இத்தகைய திருத்தங்களிற் புகுவோர்க்குப் பேரிடர் பல நேர்வது இயல்பு. அந்தந்தச் சமயத்தைத் தாங்களே தாங்குவதாக எண்ணிக்கொள்ளும் பலர் தங்கள் நலனென எண்ணவறியாது அலர் தூற்றுவர். அதனைப் பொருட்படுத்துதல் அறிஞர்க்கழகன்று. இடர் தாங்குவது மக்கட்கு இயல்பே என்பதை அறிஞர்க்கு அறையவும் வேண்டுமோ?

* * *

சமய உண்மைகளை ஓர்ந்து உணர்ந்து உரைக்காது கருமமாற்றுவார் சமயங்கட்குத் தீங்கு புரிபவரே ஆவர். அவர்களாற்றான் மூட நம்பிக்கை வளர்கின்றது. ஆனால் அவர்களைச் சினந்துகொள்வதிற் பயனில்லை. அவர்கள் அதுதான் சமயத்தைப் பெருக்குவதென மனமாரக் கருதுகின்றார்கள். இதற்கு யாரை நொந்துகொள்வது? இது சமயப் பேய் பிடித்ததனாலேயன்றி வேறன்று. இதற்கஞ்சியே இராமலிங்க அடிகள் "பெரு நெறி பிடித்தொழுக வேண்டும்; மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்" என்று விளம்பினர். மதப் பேய் பிடித்தோர் பெரு நெறி பிடித்தல் அரிதே.

* * *

உலகத்துள்ள பெருமதங்கள் அனைத்தையும் அனைவரும் நன்றாகப் பயிலல் வேண்டும். வீணே பாடஞ்செய்து செல்வதில் பயனில்லை. கருத்தொடு

படித்தல் வேண்டும். பல முறை ஒரு நூலைப் படித்தும் அதன் கருத்தறியாதார் இல்லாமல் இல்லை. அம்முறையில் படித்தல் ஆகாது. ஒரு மதத்திற் பிறந்தார் வேறு சமயங்களைப் படித்தலாகாது என்ற விரும்பத் தகாத எண்ணம் மாண்டுபடுதல் வேண்டும். எந்தப் பெருமதமாயினும் சரி அம்மதத்திலில்லாத உயர்கொள்கை வேறு சமயத்தில் இருத்தல் கூடும். அக்கொள்கையை எடுத்துக்கொள்ளச் சிறிதும் பின்னடைய வேண்டுவதில்லை. ஒவ்வொருவருக்கும் இயல்பாகவேயுள்ள காலத்திற்கேற்ற புதுக் கருத்துக்கள் அவற்றைப் படித்த பயனாக மிகுதியும் உரம்பெறலாம். எந்நெறி செந்நெறியாகிய பெருநெறியோ அந்நெறி பற்றி ஒழுகுதலே மேலோர் செயல். திருவள்ளுவர் என்மதம் என்மதம் என அநேகர் அடித்துக் கொள்கிறார். அவர் புற மதத்தை எல்லாம் தள்ளி ஒரே ஒரு மதத்தை அப்படியே தாங்கிக் கொண்டவரல்லர். அவர் பெரு நெறி பிடித்தொழுகிய பெரியார். இராமலிங்க அடிகளும் அப்பெருநெறியையே வேண்டுகின்றார். மக்கள் அனைவரும் வேண்டத்தக்கது பெருநெறியே.

## ச. மதக் குறிகள்

மதக் குறிகள் எனினும் சமய அடையாளங்கள் என்று இயம்பினும் ஒக்கும். மதம் - சமயம் என்பவற்றிற்குக் கொள்கை - கோட்பாடு என்பன பொருளன்றிப் பிறவன்று. மக்கள் எத்துணை வகையான கொள்கை யுடையாரென்று அறுதியிட்டுரைக்க வொண்ணு. ஆராயுமிடத்து ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு கொள்கையுடையார் என்று உரைத்தல் தகும். எல்லாவற்றினும் ஒத்த கொள்கையுடைய இருவர் இருத்தலும் அரிது. ஒவ்வொருவருக்கும் தனித்தனி உளம். இரண்டு உளங்கள் முற்றும் ஒன்றுபட்டிருக்கக் காண்கிறேமில்லை.

* * *

உலகத்தில் பலகோடி மக்கள் உறைகின்றனர். சுமார் நூற்றைம்பதுகோடிக்கு அதிகமான மக்கள் இவ்வுலகில் இருப்பதாகக் கணக்கு வல்லுநர் கழறுகின்றனர். ஒவ்வொரு கொள்கை யென்பதற்கியைய அத்தனைகோடி சமயங்கள் பூவில் இருத்தல் வேண்டும். அவ்வாறு இருக்கின்றனவோ? இல்லை. இருக்கவும் முடியாது. அவ்வாருமேல் ஒருவரோடொருவர் கூட்டுறவு கொள்ள முடியாது. எல்லாவற்றினும் ஒன்றுபடும் இருவர் இல்லையேனும் பலவற்றிலோ அன்றிச் சிலவற்றிலோ ஒன்று படும் இருவரோ அல்லது பலரோ இருத்தல் கூடும். எல்லாவற்றினும்

என்னுளத்தோடு அவர் பொருந்திஞலன்றி அவ ரோடு நான் இணையமாட்டேன் என்று இயம்புதல் அறிஞர் கூற்றன்று. அது உலக இயல்புமல்ல. எந்தெந்த வரைப் பிறருள்ளங்க ளொத்திருக்கின்ற னவோ அந்தந்தவரை அவரோடு கூட்டுறவுகொள்ள வேண்டுவதே. உலகம் அப்படியே நடைபெறுகிறது. உலகில் இருவர் அன்றிப் பலர் பெரு நண்பரென் ருல், அவர் உள்ளங்கள் பெரும்பான்மையும் ஒத்திருக் கும். உள்ள உணர்வே கொள்கையாகலின், அதுவும் பொருந்தியிருக்கும் என்று புகல வேண்டுவதின்று.

* * *

உலகத்தில் எந்நாளினும் பேரறிஞர் சிலராகவும் பிறர் பலராகவுமே இருக்கின்ருராகலின், எல்லோரை யும் அறிவு வழியாகிய நல்வழிப்படுத்த அவ்வறிஞர் சிலர் முயன்றே வந்திருக்கின்ருர். அவர் பெருங் கொள்கையை இயல்பாகப் பற்ற ஆற்றலற்ற சிற்றறி ஞர் உளங்களைச் சீரிய நெறியிற்றிருப்பித் தம் பெருங் கொள்கையை வகுத்து அதைப்பற்றுமாறு செய்து வந்திருக்கிருர். எல்லோர்க்கும் பொதுவாழ்விற்கு இன்றியமையாது வேண்டப்படுவனவற்றையெல்லாம் ஒருசேரத் திரட்டி யமைத்துவைத்தார். இவ்வாறு சேர்க்கப்பட்டதுதான் மதம் - சமயம் எனப்படுவது.

* * *

தொடக்கத்தில் மதம் என்ற ஒன்றே இல்லாமல் தான் இருந்திருக்க வேண்டும். மக்கள் நாகரிகம் பற்றிய காலத்து, கூட்டுறவு கருதியே மதம் காணப் பட்டிருக்கவேண்டும். முதலில் ஒரே ஒரு மதமே இருந்திருக்கமுடியும். மதம் என்று ஒன்றை வகுக்கும் பொழுது சில அறிஞர் சேர்ந்து ஒரு கொள்கையை

வகுத்திருப்பர். நாளடைவில் பின் வந்தார் தங்கள் தங்கள் அறிவுகளைக் கையாண்டு, அக்கொள்கையிற் றங்கட்கு உடன்பாடு நிகழாதொழியவே அதை ஆய்ந்து அதில் மாற்றங்களோடு அவ்வக் காலங் கட்கும் தங்கள் அறிவுக்கும் ஏற்றவாறு மதங்கள் கண்டனர். மதங்கள் பலவாயின. உலக மக்கள் எந்த மதம் பிடிக்கின்றதோ அந்த மதம் பற்றினர். ஆனால் எந்த மதம் முதலிற்றோன்றியது என்பதை யறிய அன்பர்கள் விழையலாம். அதைப்பற்றி நான் கூறத் தயாராகவில்லை. அது எந்த மதமென்று திட்டமாகக் கூறமுடியாது. அம்மதம் இந்நாள் உலகில் இருக்கின்றதோ இல்லையோ அதுவும் தெரியாது. அதைப்பற்றிய கவலை இப்பொழுது வேண்டாம்.

* * *

யாருக்கு எந்தெந்தச் சமயம் பிடிக்கின்றதோ அந்தந்தச் சமயத்தையே தழுவிவந்திருக்கவேண்டும் பண்டு. பிற்காலத்தில் பிறப்புப்பற்றி வகுப்புக் கொள்கை பரவியதுபோலவே, சமயமும், பிறப்புப் பற்றியதாகிவிட்டது. ஒரு மதத்தில் பிறந்தவனுக்குத் தான் பிறந்த மதம் பிடிக்கவில்லையென்றால், பிற மதம் தழுவ அவனுக்கு உரிமையுண்டு. எக்கொள்கையில் உளம் ஈடுபடுகின்றதோ அக்கொள்கை பற்றுதலே ஒழுங்கு, என்றும் எவரும் ஏதேனும் உளம்பற்றா ஒன்றைச் செய்தல் ஆகாது.

* * *

ஈண்டெடுத்துக் கொண்ட மதக்குறிகளை விடுத்து வேறு பொருளிற் புகுந்துவிட்டதாக எவரும் எண்ணி விட வேண்டாம். மதக்குறிகளை விளக்குவதற்காக மதங்களைப் பற்றிச் சொல்ல நேர்ந்தது. மதக்குறிகள்

என்பன இன்ன மதம் என்பதை உணர்த்தும் புற அடையாளங்கள். அறிஞர்களால் மதங்கள் காணப் பெற்றது புற அடையாளங்கட்காக அல்ல. அக வொழுக்கத்தை நிலை நிறுத்துவதற்காகவே சமயங்கள் வகுக்கப்பட்டன. ஒவ்வொரு சமயத்தாரும் நமது கூட்டத்தைச் சார்ந்தவர்கள் இவர் என்பதை அறிந்து கொள்வதற்காக இன்ன கொள்கை வழி யொழுகு வோர் இவ்வடையாளங்களைக் கொண்டிருக்கவேண் டும் என்று விதித்தனர்.

* * *

மதங்களின் உட்கருத்து இவ்வடையாளங்கள் அன்று. இந் நாள் மதங்கள் என்பவை இவ்வடை யாளங்கட்குள்ளேயே பொருந்தியிருப்பனவாகப் பல ருடைய உள்ள உணர்வு இருப்பதால் இதை நன்கு விளக்கவேண்டும் என்பதற்காகவே இது எடுத்துக் கொள்ளப்பட்டது. மதங் கூறுமாறு ஒழுகுதலை உயி ராகவும் சின்னத்தை உடலாகவும் கூட உவமிக்க முடியாது. உயிருக்கும் உடலுக்கும் வேறுபாடு பலவுள. உயிர் அழிவில்லாதது; உடல் அழிதகை யது. என்றாலும் உடலின் துணையின்றி உயிர் தனித் தியங்காது. கொள்கைக்கும் குறிக்கும் இன்னும் அதிகமான வேறுபாடு உள. குறியின்றிக் கொள்கை இயங்கும் தகுதியுடையது.

* * *

ஒழுக்கம் அகவொழுக்கம் புறவொழுக்கம் எனப் பிரிக்கப்படுகிறது. இதில் அகவொழுக்கம் உளத்தால் ஒழுகும் ஒழுக்கம். புறவொழுக்கம் உடம்பால் ஒழு கும் ஒழுக்கம். அகவொழுக்கமே இவ்விரண்டொழுக் கத்தினும் மேம்பட்டது என்று செப்பவேண்டுவ

தின்று. ஆனால் புறவொழுக்கம் வேண்டுவதே. இம் மதக்குறிகள் புறவொழுக்கத்தினும் அடங்கிய தல்ல. புறவொழுக்கம் இல்லாமல் மக்கள் நல்வாழ்வு வாழமுடியாது. மதக்குறி இல்லாமல் வாழமுடியும். மதக்குறி இன்னதென்பதை நன்ருகச் சிந்திக்குமாறு அன்பர்களே வேண்டுகிறேன். இதனுல் உயர் கொள்கையின்றி நல்வாழ்வு வாழலாம் என நான் கூறுவதாக எவரும் பொருள்கொள்தல் கூடாது. வெளிச் சின்னங்களேயே நான் கூறுகின்றேன். இது கேட்டவுடன் பலர் சீறிவிழுவா ரென்பது எனக்குத் தெரியும். அவ்வன்பர்கள் ஆராய்ச்சியறிவு பெறு வாராஞல் சீற்றந்தீர்வர். மதக்குறிகளே இழிவு படுத்த வேண்டுமென்பது எனது கருத்தல்ல. அவ் வுண்மையை உள்ள வாறு உரைத்தலே கருத்து.

எந்தக் குறிப்பிட்ட ஒரு மதத்தாரும் சிறப்பாகத் தனிக்கோபங்கொள்ள வேண்டுவதில்லே. ஹிந்து மத மென்று கூறப்படும் ஒரு பெரும் மதத்திற்குக் கிளே யாகவிருக்கும் மதங்களும் ஹிந்து மதத்திற்குப் புறம் பான வெளிமதங்களும் ஆகிய எல்லா மதங்களும் சில வெளி அடையாளங்களேக்கொண்டுதான் இருக் கின்றன. எல்லா மதங்களேயும் சேர்த்தே எல்லா மதங்களின் குறிகளின் இயல்பையுமே இயம்புகின் றேன். இவர் இன்ன கொள்கை பற்றியவர் என்ப தைக் கேட்டோ பிறவாயிலாகவோ அறிந்துகொள் ளாமல் கண்டவுடன் தெரிந்துகொள்தற்கு ஏற்ற விளம்பரங்களே குறிகளன்றி வேறன்று.

* * *

இக்குறிகள் பொருளில்லாமலே ஏற்படுத்தப் பட்டனவோ என்ற வினு வெழலாம். இது இன்றி

யமையாத கேள்வியே. "இவர் இன்ன சமயத்தார் என்பதை அறிந்துகொள்ளச் சில அடையாளங்களை வைத்திருக்கலாம்; ஆனால் அவ்வடையாளங்கட்கு எப்பொருளுமின்றிக் குருட்டுத்தனமாகவா வைத்தார்கள்?" என்பது நல்ல கேள்விதான். அறிஞர்களால் காணப்பெற்ற பல அடையாளங்கட்குப் பொருளிருக்கவே வேண்டும். சில சில சிதைக்கப்பட்டுக் காலப்போக்கில் பொருள்பெறாமலும் இருக்கலாம். சிற்றறிஞர்கள் பொருளற்ற சிலவற்றைப் புகுத்தியும் இருக்கலாம். இப்பொழுது எல்லாம் கலந்துவிட்டது. சிலவற்றிற்குப் பொருள் காண்கிறோம். உடல் நலங் கருதிச் சில அடையாளங்கள் அமைந்து கிடக்கின்றன. உடல் அழகென வெண்ணிச் சில அடையாளங்கள் காணப் பெற்றிருக்கின்றன, அம்மதம்பற்றிய வீரர்களின் நினைவுக்குறியாக அவர்கள் காதை நிகழ்ச்சிபற்றிச் சில குறிகள் செப்பனிடப் பட்டிருக்கின்றன. இன்னும் பொருள் தெரியாதவற்றையும் ஆராய்ந்து இவ்வடையாளம் இம் மதத்தாரால் ஏன் கொள்ளப்படுகிறது என்ற உண்மையை அறிதல் வேண்டும். எப்பொருளையும் காய்தல் உவத்தல் இன்றி உள்ளவாறு அதன் நீர்மையை உணர்தல் வேண்டும். அதன்பொருட்டே இன்னோரன்ன பொருள்களை எழுதுகின்றேனன்றி எவர்மீதும் காழ்ப்புக்கொண்டன்று. இம்முறை, ஒரு பழைய பாதையிற் சென்றுகொண்டிருக்கும் அன்பர்கட்குக் காதினாற் கேட்காத - உளத்தால் உணராத ஒரு புது வழியாக விருக்குமாதலின் அவர்கள் வெருளாமல் இப் பெரும்பாட்டை

யில் நுழையவேண்டு மென்பதற்காக இத்துணை கூறுவது.

*　　*　　*

இக்கூற்றினால் மதக்குறிகள் கொண்டோரை யெல்லாம் இகழ்ந்துரைப்பதாகப் பொருள் கொள்தல் வேண்டாம். மதக்குறிகள் ஏதேனும் ஒரு வகையில் இருந்தே தீரும். அக்குறிகளை ஆய்ந்து ஆய்ந்து காலத் திற்கேற்றவாறு கொள்தல் வேண்டும். இக்குறி களுள் கால வேறுபாடு கருதியனவும் இருக்கலாம். ஒரு காலத்திற்கு ஒன்று செய்திருக்கலாம். அது இனி வேண்டாததாக விருக்கும். ஒவ்வொன்றையும் ஆராய்ந்தறிந்தாலன்றிக் கொள்ளத் தக்கன, தள்ளத் தக்கன காண முடியா. குறிகளைப்பற்றிச் சமய குரவர் பலர் பெருமைப்படுத்திக் கூறியிருப்பதை நானறி யாமல் இல்லை. சாதாரணமாக வெளி அடையாளங் களாக ஏற்படுத்தப்பட்டனவற்றை அவ்வளவு உயர்த்திக் கூறியது தவறு என்று திட்டமாக நான் கூறமாட்டேன். அந்த நேரத்திற்கு அது கூற வேண் டிய இன்றியமையாமை வாய்ந்ததாக இருந்திருக்கவும் கூடும். அப்பொழுது அதனை வலியுறுத்திப் பெரு மைப்படுத்திக் கூறியிருக்கவேண்டுவதுதானே. அதற் காக இன்று அதன் நீர்மையை ஆராய்ந்தறிய வேண் டாமென்று கூறுவது அறிவீனமே. சான்றாக இந் நாள் கண்கூடாகக் காணும் ஒன்றை நோக்கலாம்.

*　　*　　*

கதர் அணிதலை எடுத்துக்கொள்வோம். பிறவற் றைக்காட்டிலும் இதைக் கொள்தல் மிகப் பொருத் தம். ஏன்? இது நம்மால் பெரிதும் மதிக்கப்படுவது; நாம் ஒப்பாரும் மிக்காரும் இல்லா ஒரு தனிப்பெரியா

ரெனக் கொள்ளும் எம்பெருமான் காந்தியடிகள் உயிருக்குயிராய்ப் போற்றுவது. ஆகலின் இக்கதரைச் சான்று காட்டுதலே நடு நிலைமையாகும். கதர் என்பது நாட்டு நூலால் நாட்டில் நெய்யப்பட்ட ஆடையென்ற பொருளில் வழங்கப்பட்டுவருவதை உலகம் அறியும். இவ்வாடை வீடுபேற்றிற்குரிய பொருளா? இதையேன் அவ்வளவு முக்கியமாக வற்புறுத்தல் வேண்டும்? இவ்வாடை முன்னே இல்லையா? முன்னே வெளிநாட்டிலிருந்தா நம் நாட்டிற்கு ஆடை வந்தது? முன்னே இருந்தார்களுள் எப்பெரியாரேனும் இவ்வாடையே கட்டவேண்டுமென்று ஒரு சொல்லேனும் சொன்னதுண்டா? இவ்வாடை கட்டாமை பொதுவாகத் தவறென்று சாற்றமுடியுமா?

* * *

இந்நாள் இவ் ஆடைபற்றிக் கூறவேண்டுவது இன்றியமையாததாக விருக்கின்றது என்பதை எவர் மறுக்க முடியும்? கதர் ஆடை ஒரு தேசீய அடையாளமாக இப்பொழுது இலங்குகின்றது. கதராடை கட்டிய ஒருவரைக் கண்டால் அவர் தேசீய உணர்ச்சியுள்ளவர் எனக் கண்டுகொள்ளுகின்றோம். இதற்கு மாறுபடவும் சிலர் இருக்கலாம். பெரும்பான்மை பற்றியே பேச்சு. இந்நாள் தேசீயக் கொள்கை பற்றியவர்க்குக் கதர் ஒரு குறியாக இருக்கின்றது. இவ்வடையாளம் ஏற்படுத்தியதற்குத் தக்க காரணமுண்டு. அதை ஈண்டுக் கூறின் விரியும். தேசீய மதத்தை உண்மையிற் பற்றியவர் கதரணியாமலிரார். ஏன்? கதரினால் தேசத்திற்குப் பெரு நலன் விளைவதை இந்நாள் கண்கூடாகக் காண்கிறோம். இது உலகமுள்ளளவும் தேசீயக் கொள்கைக்கு ஒரு குறி

யாக நிற்கும் என்று நினைக்கமுடியாது. இங்நாள் இது இன்றியமையாத தென்பது கொண்டுதான் இதனை வற்புறுத்துவது.

*　　　*　　　*

ஒவ்வொரு பொருளையும் அவைகளின் நீர்மையை உள்ளவாறுணர வேண்டுமென்பதே எனது விருப்பம். அவ்வாராய்ச்சியில் அன்பர்கள் தலைப்பட்டு உண்மை காண்பாராக.

## ரு. சாத்திரங்கள்

**சா**த்திரங்கள் என்பதன் பொருள் என்னை என்பதைக்கூட இந்நாள் நமது நாட்டில் பலர் அறியவில்லை. ஆனால் சாத்திரங்கள் சாத்திரங்கள் என்ற பேச்சுக்குக் குறைவில்லை. எங்கு பார்த்தாலும் சாத்திரங்கள் என்று சாற்றப்படுகிறது. எல்லாவற்றிற்கும் சாத்திரங்கள் என இயம்பப்படுகிறது. சாத்திரங்கள் என்பவை எவை, அவை சாற்றுவன யா, என்பவற்றை ஆராய்வார் அரியர். சாத்திரங்கள் கூறும் உண்மைகளை உள்ளவாறுணரும் நல்லறிவு வாய்க்கப் பெற்றார் மிக அரியர். பரம்பரைப் பழக்கத்தால் எடுத்தவற்றிற்கெல்லாம் சாத்திரங்கள் சாத்திரங்கள் எனச் சொல்லித் தொலைக்கிறார். நல்லவற்றிற்கும் சாத்திரங்கள் என்கிறார்; அல்லாதவற்றிற்கும் சாத்திரங்கள் என்கிறார். கற்ற வகுப்பாரென்று எண்ணத்தக்காரும் சாத்திரங்கள் என்று சொல்லுகிறார்; மற்றவரும் அப்பெயரைச் சொல்லாது விடுவதில்லை. ஒன்றும் கல்லாப் பாமரரும் புத்தகங்களைக் கையில் எடுக்க அறியாப் பேதைகளுங்கூடச் சாத்திரங்கள் என்று சாற்றப் பின் வாங்குவதில்லை.

*　　　　*　　　　*

எனவே சாத்திரங்களின் பொருளையறியாமலேயே சாத்திரங்கள் என்ற சொல்லை நம்மவர் வாய்கள் நன்கு பயின்று விட்டன. சாத்திரங்கள் என்று

சொல்பவரைப் பார்த்து 'சாத்திரங்கள் என்ருல் என்ன?' என்று கேட்பின் விடையிறுக்க அறியாமல் விழிப்போர் பலருளர், சாத்திரங்களின் பெயரைச் சொல்லுவோருள் என்பது நிரூபிக்கத்தக்கது. இது கொண்டு சாத்திரங்கள் என்பதன் பொருளேச் சாத் திரங்கள் என்று சாற்றும் எல்லோருமே அறியவில்லே என்று கூறுவதாக எவரும் எண்ணற்க. அங்ஙனம் கூறுவோருள் அதன் பொருளறிந்தோருமுண்டு. சாத் திரங்கள் என்பதன் பொருள் எளிதில் அறிந்து கொள்ளக்கூடியதே. அதில் பெரிய சங்கடம் ஒன்று மில்லே. சாத்திரங்கள் என்ற பதப்பொருளே அறிந்து சான்று காட்டுவோருள்ளும் சாத்திரங்களின் நீர்மை அறிந்தோர் பேரறிவு படைத்த ஒருமிகச் சிலரே.

* * *

நம் இந்திய மக்கள் இந்நாள் எல்லாவற்றிற்கும் அடிமைப்பட்டுக் கிடப்பதுபோலவே சாத்திரங்கட் கும் அடிமைப்பட்டுவிட்டார். சாத்திரங்கள் என்ருல் என்னவோ பயங்கரமான பொருள்கள் என எண்ணி அஞ்சிச் சாகின்ருர். இவர் அச்சத்தைத் துணேக் கொண்டு படிற்றெழுக்கம் பூண்டொழுகும் கதியில் மாக்கள், சாத்திரங்கள் என்ற பூச்சாண்டியைக் காட்டி இவரை மருட்டுகின்ருர்.

* * *

சாத்திரங்கள் என்பதன் பொருளே மிக எளிதாக எல்லோரும் அறிந்துகொள்ளுமாறு உணர்த்துவேன். சாத்திரம் என்பது ஒருமை. அதன் பன்மை சாத்திரங் கள் என்பது. இது வடமொழியினின்றும் சிதைந்து வந்த சொல். சாஸ்திரம் என்ற வட சொல், தென் சொல்லில் சாத்திரம் என்று எடுத்தாளப்பட்டது.

சாத்திரம் என்பது நூல் என்று பொருள்படும். இவ்வளவே. சாத்திரங்கள் என்ருல் நூல்கள் என்பது பொருள்.

*   *   *

பொருளை ஓராது பிறமொழிச் சொல்லைப் புகலும் பொழுது அது ஆராய்ச்சிக்கு எட்டாத - அணுக முடியாத - மிகப் பருப் பொருளாகத் தோன்றும். உணர்வு பெற்ருல் எல்லாம் எளிதாகிவிடும். எல்லாவற்றையும் உலகம் எளிதில் உணருமாறு செய்ய வேண்டுவது அறிஞர் பெருங்கடனன்றி ஒன்றையும் மக்கட்கு உணர்த்தாது பொதிந்து மூடிவைத்தல் அன்று. "அதை நீ படித்தலாகாது; இதை நீ படித்தல் ஆகாது" என்று அழுது தொலைத்தமையாலேயே மக்கள் அறியாமைப் படுகுழியில் வீழ்ந்தார். நாட்டில் மடமை மல்கியதற்கு மந்திரம் மந்திரம் என்று வழுத்திப் பொருளறியாமலே பிற மொழிகளை முண்டமாகப் புகன்று வந்ததே முதற்பெருங்காரணம்.

*   *   *

இந்தியநாட்டில் ஏறக்குறைய எல்லாமொழியாளரும் தங்கள் தாய் மொழிகளைக் கருவியாகக் கொண்டு நல்லறக் கடமை செய்யாமல், தாய்மொழிகளில் அவை ஆற்றுதல் தவறெனக்கொண்டு, தாங்கள் பொருளறியா ஒரு மொழிக்கு மதிப்புவைத்து அம்மொழியிலுள்ள மிகச் சாதாரணமான பொருள்தரும் சொற்களையும் பிரமாதமாக்கி அம்மொழியிலிருந்து கூறப்படும் சில பொருள்கள் தேவலோகமென்று எங்கோ ஆகாயத்தில் தொங்கும் ஒரு அற்புத லோகத்திலிருந்து குதித்ததாக எண்ணுகின்றனர். அவை பற்றிப் பெருக்க மஞ்சி விடுக்கின்றேன்.

அவற்றை மற்ருெரு அமயம் பார்க்கலாம். அவ்வா னத்தினின்றும் குதித்த பொருள்களுள் சாத்திரங் களும் ஒன்றென்பது அவர்கள் கருத்து.

* * *

சாத்திரங்கள் என்றவுடன் மிகப் பலமான உணர்ச்சி கொள்தல் அச்சொற் பொருளறியாமையா லேயே என்பதிற் சிறிதும் தடையில்லை. இதற்குச் சான்ருகச் சில காட்டுதும். நீண்டகாலப் பழக்கத்தால் தங்கள் தங்கள் தாய் மொழிகளைவிட வடமொழி சிறப்பு வாய்ந்தது என்ற உணர்ச்சியை மக்கள் பெற்றுவிட்டார். அதற்குக் காரணம் என்ன என் பதை ஈண்டு ஆய்தல் வேண்டாம். அவ்வுணர்ச்சி நல்லுணர்ச்சியன்று என்பது தேற்றம். மொழியென் பது உள்ளக்கருத்தை வெளியிடுதற்குக் கருவியாக அமைந்துள்ள ஒன்றேயன்றி வேறன்று. இன்ன மொழியிற் சொன்ஞற்ருன் கருத்து நிறைவேறுமென் பது மூடத்தனம். அது உலகை ஏமாற்றச்செய்யும் சூழ்ச்சி. அதில் ஏமாற்றம் என்ன என்று கேட்கலாம். பலவுண்டு. செய்யும் எல்லாவற்றிற்கும் பொரு ளுணர்ந்து கொண்டால் உண்மை தேர்ந்தவுடன் நிலை வேருகிவிடும். பின்னர் இத்துறையையே நம்பி உயிர் வாழும் கூட்டத்தாருக்கு வாழ்வு போய்விடும். அது பற்றியும் பிறபற்றியுமே மக்கள் பொருளறியா நிலை யிலுள்ள ஒரு மொழியை - உலக வழக்கொழிந்த மொழியை மதிக்கவேண்டு மென்றும் அம்மொழியே சிறப்புடையதெனக் கருதவேண்டுமென்றும் அக்குழு வினர் அறைந்து வருகிருர். ஆராய்ச்சியறிவு பெற் ருேர் அவர் கூற்றைச் சிறிதும் மதிக்கமாட்டார்.

* * *

அன்னார் கூற்றை நன்மக்கள் பலரும் கொண்டொழுகுவதும் அதனைக் கொள்ளுமாறு கூறுவதும் வருந்தத்தக்கது. எவர் கூறியபோதினும் அது ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. இத்தள்ளத்தக்க கொள்கையால் விளையும் சங்கடங்கள் பல. பொருளறியாமல் தீச்செயலுக்குக் காரணமான காரியங்களையெல்லாம் புண்ணியம் என எண்ணிச் செய்வதனைத்தும் இக்கொள்கையாலேயே. நம்மவர் முன்னேற்றமடையாதிருப்பதும் இதனாலேயே. இக்கொள்கையாளர் கூற்றுக்குச் சிறிதும் பொருளில்லை.

* * *

சத்தியமாக என்று சாற்றத் தயங்குகிறார். உண்மையாக - மெய்யாக - வாய்மையாக என்றெல்லாம் தாராளமாகப் பொய்யைக் கூறுகிறார். இவற்றிற்கும் அதற்கும் வேற்றுமை சிறிதேனும் உண்டோ? சாத்திரம் என்ற சொல்லுக்குப் பயப்படுவதுபோல் நூல் என்ற சொல்லுக்குப் பயப்படக் காண்கின்றோமில்லை. இதற்குக் காரணம் அறியாமை தவிர வேறென்? அஃதிருக்கட்டும்.

* * *

சாத்திரங்கட்கு - அதாவது நூல்கட்கு அஞ்ச வேண்டுவது அவசியமா என்று ஆராயலாம். சாத்திரங்கள் - அன்றி நூல்கள் என்ற பெயரைக் கேட்ட அளவில் பயப்படவேண்டிய அவசியமே சிறிதும் இல்லை. சாத்திரங்கள் தோன்றிய நீர்மையை அறிந்த அறிவாளர், பெயரைக் கேட்ட அளவில் அச்சங் கொள்ளமாட்டார் என்பது ஒருதலை. சாத்திரங்கள் என்று சாற்றப்படும் நூல்கள் அனைத்தும் நல்லன என்று கூறமுடியுமோ? "ஆம்" என்று யாரும்

கூறுவாராஞல் அடுத்த கணத்தில் அவர் தோற்றழி வார் என்பதில் ஐயம் என்னே? அவர்கொள்ளும் சாத்திரங்களுள் எவ்வளவு மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன! ஒன்று ஒன்றை வேண்டுமென்கிறது; மற்ருென்று அதனையே வேண்டாமென்கிறது. மாறு பட்ட கருத்துடை இரண்டு சாத்திரங்களுள் எந்தச் சாத்திரத்தை நம்புவது? எதைத் தள்ளுவது? சாத் திரங்களைத் தள்ளலாகா என்ற பொதுக் கொள்கை வழிபார்க்கின் ஒன்றையும் அகற்ற லாகாது. ஒன்றுக்கொன்று முரண்பட்ட கொள்கை கொண்ட தாயின் ஒன்றை அகற்ருமல் எப்படி முடியும்? அங்ஙனமின்றிச் சாத்திரங்கள் என்று மனிதர் சாற்றுகின்ற அனைத்தும் ஒரே முடிந்த கொள்கைகளையே கூறுகின்றன வென்று சாத்திரப் பேய் பிடித்த எவருங் கூறுவாரேல் அவரை விடப் பொய்யரும் அறிவீனரும் யாரே உளர்? சாத்திரங்களில் மாறுபாடு தோன்றுங்கால் ஒவ் வொருவருக்கும் இயற்கையில் உள்ள அறிவைத் துணைக்கொண்டே முடிவுகாண்டல் வேண்டும் எனச் சிலர் செப்பலாம். அது உண்மையே. இவ்விடத்து அறிவைக் கையாளும் உரிமை பெற்ருேர் சாத் திரங்க ளனைத்தையும் அலசும் உரிமையை ஏன் இழத்தல் வேண்டும்? சாத்திரத்தோடு சாத்திரம் மாறுபடுங்கால்மட்டும் ஒன்றில் துணிபுபெற்று ஒரு சாத்திரத்தைத் தள்ள உரிமையுண்டென்றும் சொந்த அறிவுகொண்டு சாத்திரங்கள் பிழைபடு மாஞல் விலக்குதல் தவறு என்றும் கூறும் உரை பொருளற்ற வெற்றுரை என்க.

*　　　*　　　*

சாத்திரங்களானுலென்? வேதமேயானுலென்? அவை கூறுவனவற்றிற் தவறுகாணுமேல், உடனே அவற்றைத் தள்ளித் தொலைப்பதில் என்ன பிழை? அறிஞர் அதிற் சிறிதும் பின்வாங்கமாட்டார். சாத்திரங்கள் - அல்லது நூல்கள் என்முல் என்ன? எல்லாம் நம்மைப்போன்ற மக்கள் செய்தவையே. தேவலோகத்திலிருந்து குதித்தவையாகவும் இறைவன் நம்மைப்போல் உருவெடுத்துப் பிறந்து திருவாய் மலர்ந்தருளியதாகவும் பிறவும் கூறும் அனைத்தும் பொய்! பொய்!! பெரும் பொய்!!!

* * *

மனிதர்களால் ஆக்கப் பெற்றதை ஆயவும் தள்ளவும் கொள்ளவும் மனிதர்கட்கு ஏன் உரிமையில்லை? அதற்கு உரிமையில்லை யென்று உரைப்போர் மனிதத் தன்மை பெருதவரேயாவர்.

* * *

சாத்திரங்கள் கூறுவன அனைத்தும் கொள்ளத் தக்கனவுமன்று. அவைகூரு அனைத்தும் தள்ளத்தக்கனவும் அன்று. சாத்திரங்கள் கூறுவனவற்றுள் தள்ளத்தக்கனவும் உண்டு. அவை கூருதவற்றுள் கொள்ளத்தக்கனவும் உண்டு. சாத்திரங்கள் என்ற சொல்லைக் கேட்டு யாரும் அஞ்சவேண்டுவதில்லை. மயங்க வேண்டுவதில்லை; மருள வேண்டுவதில்லை; அவை கூறும் தீச்செயல்களையும் செய்தழிய வேண்டுவதில்லை, சாத்திரங்கள் எல்லாவற்றையும் நன்முக ஆராயலாம். தக்கனகொள்ளலாம்; தகாதன தள்ளலாம். நோக்கவேண்டுவது நன்மையா, தீமையா, என்பதே. ஆற்றத்தக்கது அறம்! தூற்றத்தக்கது மறம்! அறங்கூறும் அளவில் சாத்திரங்களைக்

கொள்ளலாம். மற்றவற்றில் அவை - சாத்திரங்கள் தள்ளித் தொலைத்துத் தலையை முழுகத்தக்கனவே. எனவே அன்பர்கள், சாத்திரங்கள் சாத்திரங்கள் என்று பைத்தியம் பிடித்தலையாமல் அறம் அறம் என்று ஓயாது அறைந்துகொண்டு அறங்கொண்டொழுகுவாராக!

---

## கூ. புராணங்கள்

நம்மிந்தியநாட்டிடை உலவும் புராணங்கள் இத்துணை யென்று வரைப்படுத்திக் கூறமுடியா நிலையில் புராணங்கள் பெருகிக்கிடக்கின்றன. நமது இந்திய மக்களுள் பெரும்பாலார் இப்புராணங்களின் நீர்மையறியாது மயக்கங்கொண்டவராகவே வாழ்கின்றார். அவர் எல்லாப் புராணங்களும் கூறும் எல்லாம் மெய் என்று திட்டமாக நம்புகின்றார். அன்னார் மக்கட்கு இன்றியமையாத ஆராய்ச்சியறிவை அறவே மறந்து புராணங்கட்கே அடிமையாகிவிட்டார். அக்கொள்கையால் கேடுகள் பல விளைகின்றன. அக்கொள்கையை இன்னும் பெருகவிட்டுக்கொண்டிருந்தால் அறிவுக்கு உறையுளாகவிருந்த இந்நாடு அறியாமைக்கு நிலைக்களனாகிவிடுமென்பதிற் சிறிதும் ஐயமில்லை. எனவே புராணங்களின் நீர்மையை உள்ளவாறுரைத்து மக்கட்கு மெய்யறிவு தரவேண்டுவது, நம் நாடு முன்னேற்றமடைய வேண்டுமென்று உண்மையாகக் கருதும் ஒவ்வொருவருக்கும் பெருங்கடனாகிறது. ஆகவே, புராணங்களைப்பற்றி நான் கண்ட உண்மையைக் கூறுகிறேன்.

*  *  *

நான் கூறப்போகும் கருத்துக்கள் இந்நாள் அறிஞர் பலர் ஏற்றுக்கொள்வனவேயாகும்; மெய்யும்

அவையேயாம்; ஆராயும் எவரும் தக்க காரணங்களோடு இக் கொள்கையை மறுக்கமுடியா. ஆனால் ஆராய்ச்சி இத்துணைகாலம் செய்யா தொழிந்ததும் போக இனிமேலும் ஆராயும் மக்களறிவுபெற விருப்பமில்லாதுறையும், "புராணங்களிற் கூறும் அத்துணையும் மெய்; அவற்றில் இம்மியும் பொய் யில்லை; அவைகளைப்பற்றி யார் என்ன மாறாகக் கூறியபோதினும் செவிகொடுக்கலாகா" என்ற கொள்கையையுடைய ஒருசாரார், இக் கொள்கையை ஏற்றல் அருமை. அவர்கள்பொருட்டு இரங்கி அவர்கட்கும் ஆராய்ச்சியறிவைத் தந்து உண்மை மக்களாக்க வேண்டுமென்று இறைவனைக் கேட்டுக்கொள்வதைத் தவிர, அவர்கள் பொருட்டு ஈண்டு வேறு ஒன்றும் செய்வதற்கில்லை. அப்புராண மதத்தினர் கூட்டுறவால் ஆராயும் எண்ணங்கொள்ளாது புராணங்கள் மெய்ச் சரிதங்கள் எனத் தவறாக வுணர்ந்த மக்கள் எனது கூற்றை ஆராய்ந்து மெய்கண்டு விளங்குவார்கள் என நம்ப இடமுண்டு. பன்னெடு நாட்கள் புராண உலகத்தில் உழன்ற பழக்கத்தால் புராணங்களைப் பொய்யென்று புகலலாமாவென என்மீது சினங்கொள்வாரும் இருக்கலாம். அதனைப் பொருட்படுத்துதற்கில்லை. நான் கண்ட மெய்யைக் கூறித்தான் ஆகவேண்டியதிருக்கிறது. இந்நாள் இவ்வுண்மையை உணர்த்தாவிட்டால், நாடு அறியாமைப் படுகுழியில் நின்றும் எழும்புதல் அருமை.

* * *

புராணங்கள் மெய்யென நான் நம்பியிருந்த காலமுமுண்டு. அறியாமையால் மெய்யெனக் கொண்ட ஒன்றைப் பொய்யென ஆராய்ச்சியறிவாற்

கண்டால் அன்றே அதனைத் திருத்திக்கொள்ள முயலவேண்டுவதே. இதில் ஒன்றும் தவறில்லை. இதுகாறும் மெய்யெனக்கொண்ட ஒன்றை இன்று பொய்யெனக் கொள்தல் ஆகாதென்று யாரும் கருத வேண்டுவதில்லை. நான் கூறும் பொருள்களை நன்றாக நுணுகி நுணுகி யாரும் ஆராயலாம். அதற்கு மக்களெவர்க்கும் உரிமையுண்டு. மெய்யெனப்பட்டால் கொள்ளலாம். இப்பொழுது புராணங்களைப்பற்றி நான் கூறும் கருத்துக்கள் எவர்மீதும் வெறுப்புக் கொண்டல்ல. புராணம் பாடியவரெல்லாம் எனக்குப் பகைஞரல்லர். இக்கொள்கை பலருக்குப் புதுமையாகத் தோன்றுமாகலின் அதுபற்றிப் பலபட விரித்துக் கூறினன். அன்பர்கள் நான் கூறுவனவற்றை ஒல்லுமாறு திறம்பட ஆராயுங் கடமையை மேற்கொண்டு மெய்கண்டாராவாரென நம்புகிறேன்.

* * *

இந்நாள் இலக்கிய உலகத்தில் சிறந்தவைகளாக எடுத்துக்கொள்ளப்பெறும் புராணங்கள் உள்பட எல்லாப் புராணங்களும் நடந்த காதையை உள்ளவாறே கூறுவனவல்ல. இதிகாசமென்று கூறப்படும் சில நூல்களையும் புராணங்கள் என்பவற்றுள் உட்படுத்தியே கூறுகின்றேன். உண்மையில் நடந்த காதையை அப்படியே கூறும் புராணம் ஒரு சில வேனும் உளவோ என்னவோ? தக்க சான்றோடு காட்டப்பட்டாலன்றி எப்புராணத்தையும் அங்ஙனம் கொள்வதற்கில்லை. மக்கள் பெரிதும் கொண்டாடும் உலகில் விளக்கம் பெற்ற புராணங்கள் எல்லாம் கட்டுக்கதைகள்தாம். என்பதை வேண்டுமானால் ஒவ்வொரு புராணத்தையும் தனித்தனியே எடுத்துக்

கொண்டு சான்றுடன் அவ்வப் புராணங்கள் கொண்டே மெய்ப்பிக்க முடியும்.

*　　　　*　　　　*

இராமாயணத்தை எடுத்துக்கொள்வோம். இராமன் என ஒருவன் இருந்தானா இல்லையா என்ற வினா வேண்டுவதின்று. இருந்துமிருக்கலாம்; இல்லாமலுமிருக்கலாம். இராமன் காதை இராமாயணங் கூறுமாறு நடந்ததா இல்லையா வென்பதே வினா? அவ்வாறு நடந்ததென்று எவர் கூற முடியும்? தசரதன் அறுபதினாயிரம் ஆண்டு ஆண்டானென்றும் அது போன்ற பிற ஆராய்ச்சிக்கு எட்டாப் பொருள்களும் ஒருபாலிருக்க, இராமாயணங்கொண்டே அது கூறுமாறு இராமாயணம் நடந்ததா இல்லையா என்று ஆராய இடமிருக்கிறது. இராமன் காதை நவிலும் பலவகைப்பட்ட இராமாயணங்களையும் ஒன்று திரட்டிப் பார்த்தால் இராமாயணம் நடக்கவில்லையென்பது திட்டமாக ஏற்பட்டுவிடுகிறது. இராமன் காதை இராமாயணங் கூறுமாறு நடந்ததென்றால் எந்த இராமாயணங் கூறுமாறு நடந்தது? ஆனந்த இராமாயணம், அத்யாத்ம இராமாயணம், வான்மீகி இராமாயணம், கம்ப இராமாயணம் முதலிய பல இராமாயணங்கள் இருக்கின்றன. எல்லாம் இராமன் காதைதான் இயம்புகின்றன. ஒவ்வொன்றுக்கும் மாறுபாடு பலவுள. ஒன்று கூறுமாறு ஒன்று கூறவில்லை. எனவே நடந்தது எது? இராமாயணம் நடந்ததென்றால் ஒன்றுதான் நடந்திருக்க முடியும்; மற்ற யாவும் புனைகதை என ஏற்படும். அவ்வாறானால் நடந்தது எது என்பதை எவ்வாறு காண்பது? ஒன்று நடந்திருக்குமானால் அக்கதை கூறும் வேறு பலர்

அதனைத் திருத்தித் தங்கருத்துப்படி எழுத முற்படு வரோ? அவ்வாறு செய்திருப்பரேல் அது பெரும் பிழையன்றோ?

*　　*　　*

அது நிற்க, திருவிளையாடற் புராணத்தையும் பெரிய புராணத்தையும் எடுத்துக்கொள்வோம். திருவிளையாடல் இரண்டு இருக்கின்றன. ஒன்று பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல். மற்றொன்று பெரும்பற்றப்புலியூர் நம்பி திருவிளையாடல். பரஞ் சோதி முனிவர் செய்த திருவிளையாடலுக்கும் பெரும் பற்றப்புலியூர் நம்பி செய்த திருவிளையாடலுக்கும் வேற்றுமைக் கதைகள் உள. இரண்டும் மதுரையின் பெருமைபற்றிக் கூறும் நூல்களே. மதுரையில் எழுந்தருளியிருக்கும் இறைசிவன் நடத்தியதாகக் கொள்ளப்பெறும் அறுபத்துநான்கு திருவிளையாடல் களையுமே இரண்டும் கூறுகின்றன. இரண்டுக்கும் கதைப்போக்கு மாறுபாடுகளிருக்கின்றன; படலங் கள் மாறுபட்டிருக்கின்றன. ஒவ்வொன்றையும் எடுத் துக் கூறுவதானால் கரைகடந்து விரியும். அவை வேண்டப்படுமானால் பின்னர் வராநிற்கும். கதை மெய்யாக நடந்ததாமானால் பரஞ்சோதி முனிவர்க்கு ஒருவிதமாகவும் பெரும்பற்றப்புலியூர் நம்பிக்கு வேறு விதமாகவும் நடந்திருக்க முடியுமோ? இவற்றினு லேயே திருவிளையாடற் புராணக்கதை நடந்ததல்ல வென்பது கிடைக்கின்றது. அல்லாமலும்,

*　　*　　*

பெரியபுராணக் கதைக்கும் திருவிளையாடற் புராணக் கதைக்கும் தொடர்பு சில இருக்கின்றன. ஆண்டும் வேறுபாடு மிகுதியும் காணப்படுகின்றன.

பெரியபுராணங் கூறும் சில காதைகளைத் திருவிளை யாடல்களும் கூறுகின்றன. திருஞானசம்பந்தமூர்த்தி கள் செயல் பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடலில் பாண்டியன் சுரந்தீர்த்த படலம், சமணரைக் கழு வேற்றிய படலம், வன்னியுங்கிணறும் இலிங்கமும் அழைத்த படலம் என்ற படலங்களில் கூறப்படுகின் றன. பெரும்பற்றப்புலியூர் நம்பி திருவிளையாடலில் இக்கதைகளையே வெப்புத்தீர்த்த திருவிளையாடல், கழுவேற்றின திருவிளையாடல், சான்றழைத்த திரு விளையாடல் என்னும் தலைப்பின்கீழ்க் கூறப்பட் டிருக்கின்றன. பெரியபுராணத்திலும் இக் கதைகள் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணத்தில் கூறப்படுகின்றன. இக்கதைகளை யெல்லாம் மூன்றும் ஒரே படித்தாகக் கூறவில்லை. இதில் இறந்தவனை எழுப்பிய காதை ஒன்று. அக்காதையில் திருவிளை யாடல்கட்கும் பெரியபுராணத்திற்கும் மிகப்பெரும் மாற்றங்கள் காணப்படுகின்றன. அவ்விபரங்களை எடுத்துவிளக்க விரிவஞ்சி விடுகின்றேன். அவ்விவ ரங்களை அந்நூல்களிற் காண்க. நான் கூறுவது அப் புராணப்படி கண்டிக்கப்படுமேல் விளக்கக் காத்துக் கொண்டிருக்கின்றேன்.

* * *

புராணங்கள் கட்டுக்கதைகள் என்பதைப் பல வழிகளால் பகரமுடியும். வேறு வழிகளைக் காட்டி லும் புராணங்கள் மெய்யென நம்பியிருப்போர்க்கு அப்புராண வாயிலாகவே புகல்தல் நலம் எனக் கொண்டே இவ்வழியிற் கூறப்பட்டது. இதனால் புராணங்களை அடியோடு தள்ளிவிட வேண்டுமென் றும் அவைகளை ஒருவரும் படிக்கலாகாதென்றும்

நான் கூறவில்லை. புராணங்களின் இலக்கியச் சுவை நுகர்வதில் எனக்கு அளவற்ற ஆசையுண்டு. இலக்கியப் பயிற்சியின் பொருட்டுப் புராணங்கள் படிக்க வேண்டுவதே. அவைகளை மெய்யென நம்புதல் கூடா. உபயோகமற்ற வீண் தல புராணங்கள் பலவுள. அவைகளை யெல்லாம் படித்துணர வேண்டுமென்ற அவசியமில்லை. நல்ல உயர்ந்தவகையான புராணங்களைப் படிக்கலாம். சரித்திர வாயிலாக உலகிற்கு நீதியைப் புகட்டும் நோக்கத்தோடு ஆக்கப்பட்ட புராணங்களைக் கட்டாயம் படிக்கவேண்டும். பக்திச் சுவை நுகரவும் புராணங்கள் பெருங் கருவியாகும். அப்புராணங்களினும் தள்ளத்தக்க - அருவருக்கத் தக்க - ஒழுக்கங்கொல்லும் கதைகள் இருப்பவற்றைச் சான்றாகக் கொள்தல் ஆகா. நல்ல அரிய நீதிகள் பல புராணங்களில் இருக்கின்றன. அவைகளை எடுத்துக் கொள்ளலாம். எல்லாவற்றினும் நல்லவை கொள்ளும் இயல்புப்படி இவற்றினும் அவ்வாறு கொள்வதில் பிசகொன்றுமில்லை. புராணங்களின் தன்மை ஓராது மூடக்கொள்கையாகப் புராணங்களை முற்றும் நம்புதல் ஆகா.

---

## எ. ஆராய்ச்சி அறிவு

ஏதையும் ஆராய்ச்சி செய்து மெய்யறிதல் வேண்டும். ஆராய்ச்சி யறிவு மக்கட் பிறப்பினர்க்கு மிகவும் இன்றியமையாதது. ஆசிரியர் தொல்காப்பியனுர் கருத்துவழி பார்க்கின் ஆராய்ச்சி அறிவு இல்லாதார் மக்கள் யாக்கை பெற்றிருந்த போதினும் மக்கட் பகுப்பில் சேர்த்துக்கொள்ளத் தகாதார் என்று ஏற்படும். "மக்கள் தாமே ஆறறிவுயிரே... மாவும் மாக்களும் ஐயறிவினவே..........." என்பது தொல்காப்பியம். ஆருவதாகிய அறிவுதான் பகுத்தறிவு என்பது. இப்பகுத்தறிவு தவிர ஏனை அறிவில், மாப்பிறப்பிற்கும் மக்கட் பிறப்பிற்கும் வேற்றுமையின்று. மக்கட்டன்மையினரிவரென்று பிரித்துக் காட்டுவது அப்பகுத்தறிவே. மக்கட் பிறப் பெய்தியும் பகுத்தறிவு பெருமல் மாவறிவோடு வாழ் வாரை உருவங்கொண்டு யாரும் மக்களாகச் சேர்த் துக்கொண்டு விடுதல் கூடுமென்று கருதியே, அவர் பிறப்பிற்காக மட்டும் அவ்வாறு கொள்ளத்தகாரென் பதை வலியுறுத்தி மக்கட் பிறப்போடு கூட மக்கட் குரிய சிறப்பான அறிவைப் பெருதுறைவோருக்கு மாக்களெனப் பெயர் தந்து மாவினங்களோடு சேர்த் தெண்ணினுர் தமிழ் மொழிக்கு இலக்கணங்கொடுத்த தக்காராகிய தொல்காப்பியனுர். நிற்க.

*         *         *

வடிவத்தில் மாறுபாடிருந்த போதினும் எந்தப் பிறப்பையும் தன்மைகொண்டு அதற்கேற்றபடியாக எண்ணிக் கொள்ளப்படும் என்று "பிறவும் உளவே அக்கிளைப்பிறப்பே" என்ற தொல்காப்பியர் மொழி சொல்கின்றது. இதனையே, கல்வியிற் பெரிய கம்பர் "தக்கவின்ன தகாதன வின்னவென் றொக்க வுன்னல ராயின் உயர்ந்துள மக்களும் விலங்கேமநு வின்னெறி புக்கவேல் அவ்விலங்கும் புத்தேளிரே" என்ற அரும் பாவினுற் சொற்ருர். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க் கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்" என்ற திருவள்ளுவனுர் சீரிய குறளும் வேறுபாடு செயலினுலேயே என்பதை வலியுறுத்துகின்றது. மக்களாகப் பிறந்தவர்கட்குள்ளே பிறப்பினுலே ஒக் கும் என்ற அளவை மட்டும் இத்திருக்குறள் கொண் டிருக்கவில்லை. அங்ஙனமானுல் "பிறப்பொக்கும் மக்களெவர்க்கும்" என்று கூறிவிடலாம். அவ்வாறு கூருது பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று கூறினுர். எனவே, எவ்வடிவங்கொள்ளினும் வடிவங் கொண்டு வேறுபாடு கருதலாகாதென்பதும், மக்க ளுடலிலே உறையும் உயிரே எனினும் செயல் மாவினதாமானுல் அது மாவினங்களோடு கூட்டத் தக்க தென்பதுமே தெய்வப் புலவர் கருத்தும். தமிழ் மொழிப் புலவருள் தகைசான்ற இம் முப்பெரும் புலவர் கொள்கையும் வேறு பல அறிஞர் உள்ளக் கிடக்கையும் இதுவே. ஆராய்ச்சியில் இக்கருத்துப் பிழையெனக் கண்டால் கண்ட ஞான்றே தள்ளிவிட லாம். அதற்கு மக்கட்டன்மை வாய்ந்த எவர்க்கும் உரிமையுண்டு.

* * *

பகுத்தறிவு என்பதுதான் ஆராய்ச்சி யறிவு. பகுத்து அறிவு என்ருல் பிரித்தறியும் அறிவு என்பது பொருள். பகுத்தல் பிரித்தல்—ஒவ்வொரு பொருளேயும் பிரித்துப்பிரித்து மெய்காண்டல்.ஆராய்தலும் அதுவே. இது செய்வார்தாம் மக்கள் என்பதையும், பிற இன்ன என்பதையும் மேலே வலியுறுத்தினன். பண்டு நமது இந்தியப் பெருநாட்டில் வாழ்ந்த மக்களிற் பல்லோர், மக்கள் யாக்கை பெற்றதனேடு அமைந்து காலங்கழித்து மாண்டுபோகாமல், மக்கள் அறிவு பெற்று மெய்கண்டார்கள். இந்நாள் நமது புண்ணிய நாட்டில் மக்கள் அறிவை ஆண்டு வாழ்வார் மிகச் சிலரே இருக்கின்றனர். பெரும்பாலான மக்கள் யாக்கை பெற்ரேர் மாக்கள் அறிவோடுதான் வாழ்கின்ருர்கள். பகுத்தறிவை—அதாவது ஆராய்ச்சி யறிவை ஆள்வதில் இந்நாள் மேற்கு நாட்டார் பெரிதும் வல்லவராக விருக்கின்றனர். அவர் எதனேயும் மூடத்தனமாகப் பின்பற்றி நடப்பதில்லே யென்பதையும் அவர் செய்வனவெல்லாம் காரணமின்றி இராவென்பனவற்றையும் உலக அறிவு படைத்த எவரும் மறுக்கமாட்டார். "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற நமது வள்ளுவர் பாக்கள் நம் நாட்டில் பெரும்பாலாரிடம் நடைமுறையில் இல்லே. நம் நாட்டாருள் இந்நாள் பெரும்பாலார் பண்டைக் காலத்தில் மெய்கண்டுரைத்த - என்றும் எக்காலத்திலும் மறுக்கமுடியாத நமது முன்ேனோர் கருத்தை யறிந்து மெய்யுணர்ந்து நடக்கின்ருரில்லே; ஆராய்ச்சி

யறிவை அறவே விட்டுவிட்டார்; இடைக்காலத்து வந்த புராணக் கொள்கைகளையே முற்றும் மெய் யென நம்பி அவ்வழியே செல்கின்றார்; தள்ளத்தக்க பலவற்றைப் பழக்க வழக்கமாகக் கொண்டுவிட் டார்; அப்புராணக் கொள்கையையே பேராதார மாகக் கொண்டு வாழ்க்கை நடத்துகின்றார்; மக்கட் குரிய பகுத்தறிவைக் கையாள்கின்றாரல்லர்; செய் யுங் காரியங்கட்கு என்ன காரணமென்று எவரும் கேட்டால் சொல்லத் தெரியவில்லை; மேலும் இவற் றிற்கெல்லாம் காரணங் கேட்டால் ஆகாதென்றும் இவைகளை ஆராய்தல் பெரும்பாபம் என்றும் கூறு கின்றார். அந்தோ! என்னே அறிவு பிறந்த இந்திய நாட்டின் மக்கட் பிறப்பினர் நிலையிருந்தவாறு!!

* * *

நம் நாட்டினர்க்கு அறிவு இல்லையென்று கூற முடியுமா? முடியாது. அறிவு உண்டு. அது ஆராய்ச்சி யில் திரும்புகின்றதில்லை. புராண உலகத்திற் பன் னெடுநாட்கள் பழகிய தன்மையினால் அவற்றை விட்டு விலகுகின்றதில்லை. இக்காரணத்தால் மற்ற நாட்டார் "இந்தியர்கள் மூட நம்பிக்கை கொண்ட வர்கள்; அவர்கள் எதையும் ஆராய்வதில்லை" என்று எளிதிற் கூறிவிடுகின்றனர். அவர்கள் கூறுவது உண்மைதானே. உண்மையைக் கூறும் பிறரை நாம் குறை கூறுவதில் பயனில்லை. நம்மவர்களுள் நூற் றுக்கணக்கான புத்தகங்களைப் படித்துத் தொலைத்த வர்கள் எத்துணை பேர் அறிவு உலகம் ஏற்றாத கருத்துக் கொண்டிருக்கின்றனர்! சான்றாக எத்துணையோ பல காட்டலாம். "மறையை எல்லோரும் ஓதக்கூடாது; அது பாபம்" என்று ஒரு பகுதியார் கூறுகின்றார்.

ஏனவ்வாறு செப்பக்கூடாது என்று சிறிது ஆராய்வாரானுல் அங்ஙனம் கூறத்துணிவாரா? அவ்வளவு பாபமான நூலா அது? அக்கூற்றுக்குத் தக்கோர் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணம் எவரும் கூறு இன்றனரோ? "திருவாசகத்திற்கு உரையெழுதக் கூடாது; தேவாரத்திற்குப் பொருள் விரிக்கக் கூடாது" என்று ஒரு கூட்டத்தார் கூறுகின்ருர். ஆராய்ச்சி சிறிதேனும் இருந்தால் இவ்வாறு கூறுவாரோ? ஏன் அவ்வுயர் நூல்கட்குப் பொருள் கூறக்கூடாது? பொருள் கூறக்கூடாத ஒன்றை அவ்வாசிரியர்கள் ஏன் ஆக்கினர்? உலகமெல்லாம் தங்கொள்கை பரவவேண்டுமென்ற பெருங்கருத்துக் கொண்டு கருணைப் பெருக்கினுலல்லவா அந்நூல்களை உலகிற்கு உதவினர். அவற்றை ஞாலமெலாம் அறையுமாறு பல்வகையினும் பரப்புதல் அந்நூலாசிரியர்களை மதிப்பதாகுமா? அவற்றைப் பிறரறியா வண்ணம் பாதுகாத்துவைத்தல் அதுவாகுமா? என்பதை ஆராய்ச்சிச் சாணையிற் கொடுத்துத் தீட்டினுலன்ருே விளங்கும்.

*        *        *

தங்கட்குக் காரணந் தெரியாது செய்யுங் காரியங்களைப்பற்றி யாரும் கேட்டால், அதைப்பற்றிக் கேட்டல் பாபம் என்று பகர்ந்து விடுதல் ஒரு சாமர்த்தியம். இம்மூடக் கொள்கைகளையெல்லாம் ஆராய்ச்சியாளருள் யாரே ஏற்றுக்கொள்வர்? தாங்கள் செய்யுங் காரியங்களுள் எதைப்பற்றி யார் கேட்டாலும் காரணம் சொல்லவேண்டும். பொதுவான எதைப் பற்றியும் கேட்கப்படாதென்று கூறுதல் ஆகாது. செய்கின்ற எல்லாவற்றிற்கும் காரணம் கண்டு

 3467

பிடித்தல் வேண்டும். தக்கவற்றைச் செய்தல் வேண்டும்; தகாதவற்றை உடனே தள்ளுதல் வேண்டும். தகாத ஒன்றை எவர் கூறியிருந்தபோதினும் பொருட்படுத்த வேண்டுவதின்று. காரியத்தில் குறியே தவிர ஆளைப்பற்றிக் கேள்வியில்லை. "பெரிய புராணத்தில் அவர் சரிதத்தில் அப்படிச் சொல்லி இருக்கிறதே அது சரியா" என்று ஒருவர் கேட்டால் "சிவ சிவ! பெரியவாள் பாடினது" என்று காதைப் பொத்திக் கொள்தல் விடை யன்று. அவருக்கு விளங்குமாறு உண்மைக் காரணத்தைக்கூறுதல்தான் அறிவுடைமை. தனக்குத் தெரியவில்லையானால் தெரியவில்லை என்று கூறிவிடவேண்டும். உண்மையில் குற்றமுடையதானால் ஒப்புக்கொண்டு தீரவேண்டும். இதனால் பெரிய புராணத்தை இழித்ததாகப் பொருள் கொண்டால் அவர் மயக்கத்திற்கு நம்மால் மருந்து கொடுக்கமுடியாது. அது சான்றாகக் காட்டப்பட்டது. அப்படியே ஒவ்வொரு நூலிலும்.

*　　*　　*

திருநீறு ஏன் இட்டுக்கொள்கின்றீர் என்று ஒருவர் கேட்டால் நாங்கள் தலைமுறை தலைமுறையாக வழக்கமாக இட்டுக்கொள்கின்றோமென்றாவது "மந்திரமாவது நீறு" என்று எங்கள் திருஞான சம்பந்தப் பெருமானார் கூறியிருக்கின்றாரென்றாவது கூறுதல் விடையாகாது. திருமண் ஏன் இட்டுகின்றீர் என ஒருவர் கேட்டால் எங்கேனும் மூலையில் இருக்கும் திருமண்பதிகத்தை எடுத்தோதப்படாது. இவற்றைச் சமாதானமாக எதிரி ஏற்றுக்கொள்ளார். நமது மதத்திற்குப் புறம்பான மதத்தினரும் ஏற்றுக் கொள்ளுமாறு காரணங் கூறுதல் வேண்டும். கார

ணம் உளவா என ஆராய்ந்து தெரிந்துகொள்ளல் வேண்டும். தம் மதத்தைத் தாமறிந்து உணர்த்தாதார் சமயம் பெருக வழியில்லாது போய்விடும். சமயத்தின் உட்கருத்து எதையும் அறியாது குருட்டுத் தனமான எதையேனும் செய்துகொண்டிருப்பவர் மல்கிய சமயம் பன்னாள் நிலவுதல் அருமை.

* * *

நம்மவருள் இன்னும் வேடிக்கையான கொள்கையுடையோர் பலரிருக்கின்றனர். பரமசிவன் என்ற ஒரு கடவுள் விடைவாகனத்தில் மனைவியோடு ஏறிக்கொண்டு வெள்ளிமலை யென்ற ஒரு மலையில் நம்மைப் போல மனித ரூபமாக வீற்றிருக்கின்றாரென்றும் அதுபோலவே திருமால் என்ற கடவுள் மனைவியுடன் வைகுந்தத்தில் இருக்கின்றாரென்றும் இப்படியே இன்னும் கணபதி முருகக்கடவுள் முதலிய பலர் இருக்கின்றாரென்றும் இவைகளைப் பார்த்தே ரவி வர்மா படம் இறக்கிக்கொண்டு வந்திருக்கிறாரெனவும் உண்மையாக உறுதிகொண்டிருப்போர் பலப்பலர் இருக்கின்றனர். எங்கும் நிறைந்த உருவமற்ற கடவுளைப் புராணமதத்தார் உருவங்களாக அமைத்து வணங்கினர் என்பதைக்கூடத் தெரிந்துகொள்ள முடியாமலன்றோ வாழ்கின்றனர்.

* * *

இப்பொழுது மெய்ச்சமயம் அறிந்தார் மிகக் குறைவு. புராணங்களையே பொருளாகக்கொண்டு அவற்றின் வழியான மதத்தையே பற்றி நிற்கின்றார். நமது மக்கள் இவ்வழியிலேயே சென்றுகொண்டிருந்தால் அதிவிரைவில் நமது நாடு இப்பொழுதிருக்கின்ற நீர்மையைக் காட்டினும் மிகவும் தாழ்ந்து

தன்மை யடைந்து விடுமென்பதிற் சிறிதும் ஐயமின்று. எனவே நம்மவர் ஒவ்வொருவரும் ஆராய்ச்சி அறிவைப் பெறவேண்டும். தொல்காப்பியர் முதலான பேராசிரியர்கள் மக்கட்டன்மையினர்தாம் என்று ஒப்பத்தக்க நிலையில் நடத்தல் வேண்டும்.

## அ. இயற்கை இன்பம்

இயற்கை இன்பம் என்பது எது என்று அறிந்து கொள்வோர் தொகை மிகக் குறைவு. இந்நாள் நமது நாட்டில், பொதுவாக இன்பத்தையே இதுகாலை நமது நாட்டார் மறந்துவிட்டார் என்று வழுத்துதல் தவருகாது. இன்பம் நுகர்ந்துகொண்டிருந்தாலன்ரே அதனை மறவாதிருப்பர். நாடு துறந்த அன்றே இன்பத்தை முற்றும் துறந்தாய்விட்டது. உண்டியும் உடையும் உறையுள்ளுங் கூட ஒல்லுமாறு பெரு நிலையில் இன்பம் துய்த்தல் யாங்ஙனம்? செல்வமும் பிறவும் குறைவின்றிப் பெற்ருர்க்கன்றிப் பிறர்க்கு இன்பப் பேறு கிட்டுவதில்லை. இது பொது விதி. மாறுபாடும் உண்டு.

* * *

இயற்கை இன்பம், செயற்கை இன்பம் என இன்பத்தை இரண்டாகப் பிரிக்கலாம். இன்பம் கொள்ளத்தக்க ஒரு பொருள் என்பதை எவரும் மறுக்க மாட்டார். அவ் இரண்டு இன்பங்களுள் ஈண்டெடுத்துக்கொள்ளப்பட்டது முன்னையதாகிய இயற்கை இன்பத்தையே. இரண்டு இன்பங்களும் வேண்டற்பாலனவே யெனினும், இரண்டனுள்ளும் சிறப்புப் பொருந்தியது இயற்கை இன்பமேயாம். பேரறிஞர்க்கு இயற்கை இன்பமே பெரு விருந்தளிப்பது. இயற்கை இன்பத்தைக் கண்டன்ரே கவிகளாகிய அறிஞர்கள் தாங்கள் திளைத்த அந்நல் இன்பத்தைச் சொற்களால்

தொகுத்து அழகுபடத் தொகுத்திருக்கின்றனர்? அன்றியும் இயற்கை இன்பம் எல்லோரும் நுகரத் தக்கவாறு இயல்பாகவே அமைந்துகிடப்பது. மக்கட்கும் பிற உயிர்கட்கும் இன்பம் தருவதற்கென்று எவராலும் ஆக்கப்பட்டதன்று இயற்கை இன்பம்.

* * *

இயற்கை இன்பம் செல்வர்க்கும் வறிஞர்க்கும் மாறுபட்ட இன்பம் தருவதன்று. எத்துணைப் பெருஞ் செல்வராயினும் எவ்வளவு வறிஞராயினும் அவர் செல்வத்திற்கேற்ற அளவு இன்பப் பெருக்கமும் மற்றவர் நல்கூர்வுக்கேற்றபடியாக இன்பச் சுருக்கமும் இயற்கை இன்பத்தில் இல்லை. இயற்கை இன்பம் அப்பொருளைப் பொறுத்தவரையில் எவர் பொருட்டாகவும் எவ்விதச் சிறு மாறுபாட்டோடும் தோன்றும் இயல்பினதன்று. ஆனால் அவ் இன்பம் துய்ப்பதில் மக்கள் மாறுபட்டு நிற்பதுண்டு. அதற்குக் காரணம் கருத்து மாற்றமின்றி, இயற்கை இன்பத்தில் மாற்றமின்று என்பது ஒருதலை.

* * *

இயற்கை இன்பம் யாண்டிருக்கின்றது? அது எல்லா இடத்தும் உண்டு. ஆனால் அவ் இன்பம் மிகுதியாக இடம்பெற்று நிற்பது மலையினும் கடலினும் காட்டினும் யாற்றினும் அன்ன பிற இடங்களினுமேயாகும். இயற்கை இல்லாத இடம் கிடையாது. செயற்கையில்லாத இடம் உண்டு, இயற்கையினின்றும் செயற்கை தோன்றவேண்டுமேயன்றி இயற்கை இன்றிச் செயற்கை உண்டாதல் இல்லை. இயற்கை யாண்டுமிருந்தபோதினும் இயற்கை இன்பம் திறம்பட யாண்டும் அமைவதில்லை. இயற்கையில்

இன்பம் தரும் பொருள்கள் குறித்த சில்லிடத்திலேயே உள. செயற்கை இன்பம் செல்வத்திற்கும் பிற சாதனங்கட்கும் தக்கவாறு அமைத்துக்கொள்ளும் தகுதி வாய்ந்தது. அது எங்கிருந்தும் நுகரத்தக்கது. இயற்கை இன்பம் அவ்வாறல்ல. இயற்கை இன்பத்தை விலைக்கு வாங்கமுடியாது. எத்துணைப் பெரும் பொருள் செலவிடினும் இயற்கை இன்பத்தை நாம் இருக்கும் இடங்கொணர்ந்து திளைக்க வொண்ணுது. இயற்கை இன்பம் வேண்டுமானுல் கடலையும் மலையையும் காட்டையும் யாற்றையும் பிறவற்றையும் நாடி அவை இருக்குமிடம் தேடி ஓடவேண்டுவதே.

* * *

இயற்கை இன்பத்தைத் தம்முள் அடக்கிக்கொண்டிருக்கும் இப்பொருள்கள், தம்மை நாடி இன்பந் திளைக்க வரும் எவர்க்கும் ஒளியாமல் தம்மிடமுள்ளவற்றை நடுநிலையிற் சிறிதும் பிறழாது தருவன கண்கூடு. ஆனுல் மக்கள் அவ் இன்ப நீர்மையை அறிந்து நுகர்வதில் மாறுபடுகின்ருர். பொழுது விடிகின்றது. விடியும் அளவில் வேறுபாடு இல்லை. செல்வர்க்கு முன்னும் வறிஞர்க்குப் பின்னும் விடிகின்றதோ? அறிஞர்க்கு முன்னும் ஏழையர்க்குப் பின்னும் புலர்கின்றதோ? இல்லை; இல்லை. பொழுது விடிவில் வேறுபாடு இம்மியும் இல்லை. அதனை நுகர்வார் பலபடியாக இருக்கின்றனர். இருள் கிழித்து, ஒளி நல்க விடியும் பொழுதை அதற்கு முன்னே அன்போடு வரவேற்று விடிபொழுதின் இயற்கை இன்பம் கண்டு திளைத்து மகிழ்கின்ருர் ஒரு சாரார். அவ்வின்பம் நுகர அறியாது கண்மூடிப் பாயலிற்கிடந்து வெய்யோன் தனது ஒளியை நிரப்பி முதுகில் அடித்த பின்

னர் விழித்துப் பார்க்கின்றூர் வேறெரு சாரார். விடிவது ஒரே சமயத்திலேனும் அவ்விடிவு காண்பது பல சமயத்தில் இருக்கிறது. அவ்விடி பொழுதாகிய இயற்கை நடுநிலை தவறவில்லை. அது எல்லோர்க்கும் ஒரே படித்தாகவே இன்பம் ஈகின்றது. சூரியன் உதிக்கும் இயற்கையும் சந்திரன் முளைக்கும் இயற்கையும் எல்லோர்க்கும் ஒரே அளவான இன்பம் ஈவனவே.

* * *

இயற்கை இன்பம் ஈயும் எவ்வியற்கைப் பொருளையும் எடுத்துப் பார்க்கலாம். அவையாவும் தத்தம் நீர்மைகளில் எல்லோர்க்கும் ஒரே தன்மையான நிறைவையே நல்குவதன்றி, முறை பிறழ்ந்து இவ்வுலகப் பேதையர்போல் - செயற்கை இன்பம்போல் - செல்வம் படைத்தார்க்குப் பேரின்பத்தையும் அது படையாதார்க்குச் சிற்றின்பத்தையும் தரும் சிறிய தன்மை பொருந்தியன வன்று. ஆனல், இயற்கைப்பொருள்கள் நடுநிலையோடு இன்பம் தருகின்றன வெனினும், அப்பொருள்களால் நுகரும் இன்பத்தை நுகர ஏழைகட்கு வாய்ப்பதில்லை. அப்பொருள்கள் இருக்குமிடந்தேடி அவ்வின்பம் நுகரப் பொருள் வேண்டியதாகவே இருக்கின்றது. சுற்றிச் சுற்றி இறுதியில் எல்லாம், பொருளிலேயே வந்து முடிகிறது. ஆகையினுற்றுன் "பொருளிலார்க் கிவ்வுலகமில்லை" என ஆசிரியர் வள்ளுவனுர் அறைந்தார் போலும்! நாம் மேலே குறித்தவாறு இன்பம்தரும் நல்இயற்கை யாண்டும் அமைந்திருப்பதில்லை. அது மேவி வனத்திலும் குன்றிலும் ஆழியிலும் ஆற்றிலுமே மண்டிக்கிடக்கின்றது. குறித்த இப்பொருள்கள் எல்லாவிடத்தும்

இருக்கின்றனவோ? இவை எங்கும் இருப்பின் எல்லோரும் இவை தரும் இன்பம் திளைக்க முடியும். இவை இருப்பது சில இடத்திலேயே. எனவே இவ் இயற்கைப் பேரின்பம் நுகர விழைவோர் ஆண்டுச் செல்ல வேண்டியவராகிறார். தம் இருக்கை விடுத்து - வேலைவிடுத்து, வேற்றிடஞ் சென்று இவ் வின்பம் நுகர ஏழையர்க்கு யாங்ஙனம் சாலும்? நம் இந்திய நாட்டில் வயிற்றுக்குப் போட்டுத் தொலைக்கத் தொழில் புரிந்து விட்டுச் செத்துத் தொலைவோரன்றோ எண்ணற்றோராக விருக்கின்றனர்? அதற்கும் வகையின்றித் தவிப்பார் பலர். அந் நிலையில் எவ்வாறு இன்பம் நுகர வேற்றிடம் நண்ணுவது?

*　　　　*　　　　*

இயற்கை இன்பம் பொதுவாக யாவரும் நுகரும் நிலையிலிருப்பினும் நுகரும் தகுதி சிலருக்கே அமைந்து கிடக்கின்றது. அது செல்வத்தைப்பற்றி நிற்கவில்லையேல் நன்றாக விருக்கும். அவ்வுலகை எப்பொழுது காணப்போகிறோம்? அது ஒரு சில அறிஞரின் பேச்சளவில் எழுத்தளவில் காணக்கிடக்கின்றதன்றிச் செயலளவில் யாண்டும் கிடைக்கவில்லை. அவ்வாறு எல்லோரும் இவ்வின்பத்தைத் துய்க்கச் செய்ய வழியுந் தெரியவில்லை. உலகை நன்றாகச் சீர்தூக்கி அகத்தால் நிர்வகித்துப் பார்க்கும் எவரும் சட்டென்று இதில் ஒரு முடிவுக்கு வரமுடியாது. எனவே, எல்லாருக்கும் பொதுவில் எல்லா வழியும் தானே திறக்கின்றதில்லை. ஒவ்வொருவரும் எதற்கும் ஆற்றல் கொண்டுதான் போட்டிபோட்டு முன்னேறவேண்டிய திருக்கின்றது. ஆகலின் அவ்வழியில் கட்டுரையை

நீட்டிக்கொண்டு செல்லாது, இயற்கை இன்பத்தில் சிறிது நுழைந்து கட்டுரையை முடிக்கலாம்.

* * *

இயற்கை இன்பத்திற்கு இணை எதுவுமில்லை. எத்துணை கோடி கோடி செலவிட்டு ஆக்கப்பெறும் செயற்கையிற்றோன்றும் இன்பமும் இயற்கை இன்பத்திற்கு ஈடாகாது. இயற்கை இன்பத்தை நோக்கும் பொழுது செயற்கை இன்பம் எம்மாத்திரம்? இயற்கை இன்பம் அகவொழுக்கம் போன்றது. செயற்கை இன்பம் புறவொழுக்கம் போன்றது. புறவொழுக்கத்திற்கும் அகவொழுக்கத்திற்கும் எத்துணை வேறுபாடுண்டோ, அவ்வளவு வேற்றுமையுண்டு செயற்கை இன்பத்திற்கும், இயற்கை இன்பத்திற்கும். ஆ! ஹா! இயற்கை தரும் இன்பம் என்னே! என்னே!! பெண் இன்பம் இயற்கை இன்பம் எனச் சிலர் கூறுவர். நான் அவ்வாறு அறைந்து அமைய விரும்பவில்லை. பெண்ணின்பம் இயற்கை இன்பம் எனப் பேசி முடித்துவிட்டால் பெண் ஆணுக்கு இன்பம் நுகரப்படைக்கப்பட்ட ஒரு பொருள் என்று ஆகிவிடுகிறது. அது தவறு. மற்றப் பொருள்களின் இன்பத்தை நுகர ஆணுக்கு எவ்வளவு உரிமை உண்டோ, அவ்வளவு உரிமை பெண்ணுக்கும் உண்டு. மற்றப் பொருள்களின் இன்பத்தை நுகர வேண்டிய பெண்ணைத் தாழ்த்தி, தான் பிறர்க்கு ஓர் இன்பப் பொருளெனக் கூறுதல் பேதமை. ஆகையிஞலே பெண்ணின்பம் இயற்கை இன்பம் என்பதை நான் மறுக்கின்றேனென்று கருதற்க. பெண்ணின்பம் ஆணுக்கு இயற்கை இன்பமே. அதுபோலப் பெண்ணுக்கு ஆணின்பம் இயற்கை இன்பமாகும். பெண்

ணுக்கு ஆணின்பமும் ஆணுக்குப் பெண்ணின்பமும் இயற்கை இன்பம் என்று இயம்புதல் பொருந்தும். பெண் இன்பம் ஒன்றுமட்டும் பேசுதல், "மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை" என்று பெண்ணைமட்டும் சேர்த்துக் கூறிய பிழைபட்ட கொள்கையோடு சேர்த்தெண்ணத் தக்கது. இன்ன கொள்கைகள் பெண்மையிற் பொருமை கொண்டு பெண்மைக்குத் தாழ்வுகற்பித்த பேதைகளுடையன.

*　　　　*　　　　*

இயற்கை இன்பத்துள் பெண்ணுக்கு ஆணும் ஆணுக்குப் பெண்ணும் நல்கும் இன்பம் தலைமை வகிப்பதோடு, பிற பொருள்களிடத்து நுகரும் இயற்கை இன்பத்தையும் பெண்ணும் ஆணும் சேர்ந்து காதல்படத் துய்த்தலே சிறப்புடைத்தாக லின் காதலர் கூடி நுகரும் இன்பமே யாண்டும் சிறப் புடைத்தாகின்றது. இயற்கை இன்பத்தை இருபால ரும் கலந்து நுகர்தல் வேண்டும். இயற்கை என்பது எவராலும் ஆக்கப்படாது தானே இருப்பது. அது தரும் இன்பமே இயற்கை இன்பம்.

## ௬. அகமும் புறமும்

அகமென்பது உள். புறமென்பது வெளி. அகமும் புறமும் என்றால் உள்ளும் வெளியும் என்பது பொருள். உள்ளும் வெளியும் என்றால் என்ன என்ற விணுப் பிறக்கலாம். இதில் ஐயப்படவே வேண்டுவ தில்லை. உள்ளும் வெளியும் என்றால் உள்ளொழுக்க மும் வெளியொழுக்கமுமே ஈண்டுப் பேசப்படப் போகின்றனவென்று கொள்ளவேண்டுவதைத் தவிர வேறென்னிருக்கிறது?

*　　　　*　　　　*

உளத்தால் ஒழுகும் ஒழுக்கம் உள்ளொழுக்கம்; அதாவது அக வொழுக்கம். உடலால் ஒழுகும் ஒழுக் கம் வெளியொழுக்கம்; அதாவது புறவொழுக்கம். இவ்விரண்டு ஒழுக்கங்களுள் எது கொள்ளத்தக்கது எது தள்ளத்தக்கது என ஆயின் இரண்டும் கொள்ளத்தக்கனவே யன்றித் தள்ளத்தக்கனவன்று. இரண்டொழுக்கங்களும் இன்றியமையாது மக்கள் கொண்டுதீர வேண்டுவனவே. எனினும் இரண் டினும் சிறந்தது அகவொழுக்கமே. புறவொழுக்கத் தில் வழுவினாலும் அகவொழுக்கத்திற் சிறிதும் தவறுதலாகாது. ஆனால் உலகம் பெரிதும் அக வொழுக்கத்தை நெகிழவிட்டுவிட்டது. புறவொழுக் கத்தையே பற்றி நிற்கின்றது. அகவொழுக்கத்தோடு கூடிய புறவொழுக்கத்திற்கு மதிப்புண்டேயன்றி

வெறும் புறவொழுக்கத்தால் ஒரு பயனுமில்லை. அகத்தே மாசைவைத்துப் புறத்தே அழகுபடுத்துவதால் யாது பயன்? அகவொழுக்கம் இல்லாத புறவொழுக்கம் உயிரற்ற உடல்போலாகின்றது. ஆனால் வெளி யுலகத்திற்குக் கட்புலனாவது புறமேயாதலால் மக்களிடை மதிப்புப் பெற விரும்பும் பலர் புறவொழுக்கத்திலேயே நாட்டஞ் செலுத்துகின்றனர். அகவொழுக்கம் அகக்கண் கொண்டு பார்ப்பவர்க்கே தெரியும். அவ்வாறு மக்களை அளப்போர் சிலரே. ஆனதுபற்றியே பலரும் அதில் நாட்டத்தைச் செலுத்தாது புறத்தை அழகு செய்து கொள்கின்றனர். இதனால் புறவொழுக்கத்தை நான் அவமதிக்கின்றேனென்று யாருங் கருதுவார்களாயின் அது பெருந் தவறாகும். அகவொழுக்கத்தோடு கூடிய புறவொழுக்கத்தை நான் பெரிதும் மதிப்பேன். அகவொழுக்கம் மட்டும் உடையாரைக் காட்டினும் அகவொழுக்கத்தோடு புறவொழுக்கமும் உடையார் சாலச் சிறந்தவரென்பது என் கூற்று.

* * *

புற வொழுக்கம் மட்டும் உடையார் புவிப் பொறை யானவர்களேயன்றிப் பிறவிப்பயனை ஒரு நாளும் அடையார்; அவர் இழிதகையாளரேயன்றித் தக்காருள் வைத்து எண்ணப்படார். அகவொழுக்கம் நிரம்பப் பெற்றவர் புற வொழுக்கத்தில் தவறமாட்டாரென்று பெரும்பாலும் நம்பலாம். இதனால் புறவொழுக்கமுடையார் அகவொழுக்கம் பெற்றிருப்பார் என்று கூற முடியாது. அவற்றிற்குக் காரணம் உள. அகவொழுக்கமென்பது ஒழுகு முறையை உளத்தினால் உணர்ந்து செய்யும் ஒழுக்கம். உளத்தி

ணுல் ஒழுகும் முறையை உணரும் பேறு பெற்றவர் புறத்திஞல் ஒழுக வேண்டுவனவற்றை விடமாட்டார். பிறந்த பயனை நல்கும் அகவொழுக்கந் தலைப்படாது பிறர் தம்மைப் புகழ வேண்டு மென்பது கொண்டு வெளிவேடமாகிய புறவொழுக்கம் பூண்டோர், புறவொழுக்கமுடைமை காரணமாக அகவொழுக்கமும் பெற்றிருப்பாரென்று கூறுதல் அறியாமையேயாகும். "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுலநீரே பிற" என்றருளிஞர் பொய்யில் புலவர். மனத்துக்கண்ணே குற்றமற்று விளங்கும் ஒன்றேயமையும்; பிற யாவும் ஆரவார நீர்மையன, அதாவது வீண் ஆடம்பரங்கள் என்பது இவ்வருங்குறட் கருத்து. மனத்துக்கண்மாசிலன் ஆதல்தான் அகவொழுக்க முடைமை பெறுதல். பிற என்றது தான் புற வொழுக்கத்தை, இதஞல் வள்ளுவஞர் புறவொழுக்கம் வேண்டாமெனக் கூறிஞரென்று கொள்தல் கூடுமோ? அகவொழுக்கம் பெற்ருல் புறவொழுக்கம் பெற்று விடுவான் என்பதே அப்பெரியார் கருத்தாதல் வேண்டும்.

* * *

ஒழுக்கம் என்ருல் என்ன? ஒழுகிச் செல்லும் முறை. ஒழுக்கமுடையவன் என்று ஒருவன் கூறப்படுவாஞஞல் ஒழுகவேண்டிய முறைப்படி அவன் ஒழுகிச் செல்கின்ருனென்பது கருத்து. ஒழுக வேண்டிய முறை என்னவென்று கேட்டால் அவையனைத்தையும் ஈண்டுக் கூறிவிட முடியாது. ஒழுகவேண்டுவன அனந்தம் உள. பெரியோர்கள் அறநூல்கள் வாயிலாகப் பணித்துள்ளார்கள். அவைகளைத் தம்மதி கொண்டு அளந்து, செய்வன தவிர்வன

தெளிந்து ஒழுகுதல் வேண்டும். அவ்வொழுக்கம் பிறர் தம்மைப் பாராட்ட வேண்டுமென்ற ஒன்றையே நோக்கமாகக் கொண்டதாக இல்லாமல் மனம் பொருந்தியதாக விருத்தல் வேண்டும். அவ்வாறு ஒழுகும் ஒழுக்கந்தான் அகவொழுக்கமாகும். அதோடு கூடப் புறத்தையும் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். ஒழுக்கமனைத்தையும் தொகுத்துரைத்த ஒப்பில் புலவராகிய வள்ளுவர் பெருமானார் ஓரிடத்து அகத்தூய்மைக்கும் புறத்தூய்மைக்கும் பொறுக்கி ஒவ்வொன்றைச் சான்ருகக் காட்டினர். "புறந் தூய்மை நீரானமையும் அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும்" என்பது குறள். வெளியே தூய்மை வேண்டுமானால் அது நீரினால் அமையும். இதை யாரும் மறுக்கமுடியாது. இது எல்லோரும் சாதாரணமாக அறியும் ஒன்று. உடல் பரிசுத்தமாக விருப்பதற்கு நீராடவேண்டுமென்பது எல்லார்க்கும் அனுபவம். உள்ளே தூய்மை வேண்டுமானால் அதற்கு வேண்டுவது வாய்மை. உளத்தின் தன்மையே உண்மைதானே. அஃதின்றேல் பிற எது இருந்தபோதினும் அவன் உளத்தூய்மை யுடையவனல்லன். இவ்வாய்மைத் தூய்மை கொண்டார் இதுகாலை எத்துணை பேரிருக்கின்றன ரென்பது அனைவரும் அறிந்ததே. எது செய்தாலும் பொய் சொல்லாதிருக்க முடியாதென்று சர்வ சாதாரணமாகக் கருதுவார் மல்கி விட்டனர். அதுமட்டுமல்ல.

* * *

அகத்தைத் துருவப் புகுந்தோமானால் யாண்டும் அக வொழுக்கம் காண்பதரிதாகவே இருக்கின்றது. ஆனால் அதற்குப் பதிலாக வெளி வேடதாரிகள்

மிகப் பலராகப் பெருகிவிட்டனர். காரணம் உள்ளே எவ்வளவு மாசு படிந்திருந்தபோதினும் வெளியுலகில் மதிப்புப் பெற வேண்டுமென்ற ஒரே எண்ணம் மிகுந்தமையே யாகும். உலகில் வாழ்வோரைப் பல பகுப்பினராகச் செயல்கொண்டு பிரிக்கலாம். அவ்வாறு பிரித்துப் பார்க்குங்கால் எவரேனும் ஒரு பகுப்பினராவது அகம்பற்றி நிற்கின்றனராவென்றுல் ஆம் என்று கூற முடியவில்லை. எல்லாத்துறையினரும் புறத்தையே பற்றி நிற்கின்ருர். அக வொழுக்கம் பூண்டோர் அரியரினும் அரியராக ஆங்காங்கு மிகச் சிலரே காணப்படுகின்ருர். ஆடம்பரத்தில் சிறிதும் விருப்பின்றி அக வொழுக்கத்தையே உயிராகக் கொண்டுள்ள சிலர் இவ்வுலகில் அருமையாக இருப்பதை நாமறிவோம். அவர்கள் எல்லோராலும் வழிபடத் தக்கவர்களே. உலகில் மிகப்பெரும்பாலர் புற வொழுக்கம்பற்றியவர்களே யாதலின் அதையே பேச வேண்டுவதாகிறது.

* * *

ஒவ்வொரு துறையினராகப் பார்க்கலாம். சிறு கூட்டத்தாரை யெல்லாம் விட்டுவிடுவோம். எல்லோரையும் எடுத்தால் இடம்போதாது. பெரிய சில கூட்டத்தாரை நோக்குவோம். ஆசாரச் சீர் திருத்தம் ஆசாரச் சீர் திருத்தம் என்று ஒரு பகுதியார் அறை கூவுகின்ருர். அவ்வாறு கூறுவோரில் அக வொழுக்கத்தை வலியுறுத்துபவர் எத்துணை பேர் இருக்கின்றனர்? இக்கொள்கையை வலியுறுத்தும் அவர்களேனும் அக வொழுக்கத்தில் நிற்கின்றனரோ? இல்லை, அக வொழுக்கத்தைப்பற்றிய கவலை அவர்களுக்கிருப்பதில்லை. புறத்தே சில ஆசாரத்தைச் சீர்

திருத்தவே அவர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்கின்றனர்.

*                    *                    *

சமயம் பேசும் கூட்டத்தாரை எடுத்துக்கொள்ளுவோம். அப்பிரசாரக் கூட்டத்தாருள்ளேயே பெரும்பாலர் அக வொழுக்கமற்றவராகவே காணப்படுகின்றார். அக வொழுக்க மற்றவரைப்பற்றி அவருக்குக் கவலையில்லை. புறத்தே தங்கள் மதத்தை அனுஷ்டித்தால் போதும். அக வொழுக்கமுள்ள பிறமதத்தினருக்கு அவர் மதிப்புக் கொடுப்பதில்லை. தங்கள் சமய உண்மைகளை யெல்லாம் எல்லோரும் அறியவேண்டுமென்பதும் சமய நூல்களைக் கற்று உண்மை தெளிய வேண்டுமென்பதும் பின்னால். அவைகளை இறுதிவரையும் அறிந்தாலும் சரி அறியாமலே போயினும் அதைப்பற்றிக் கவலையில்லை. தங்கள் தங்கள் சமயங்களை உணர்த்தும் அடையாளங்களை அணிந்து கொள்ள வேண்டுவது. இப்புற வொழுக்கத்தைத் தான் மதம் பற்றிய கூட்டத்தார் கையாண்டுவருகின்றார். சைவசமயப் பிரசாரஞ் செய்வோர் விபூதி பூசிக்கொள் என்றும் அக்கமணி அணிந்துகொள் என்றும் இவைபோன்ற பிற செய் என்றும் வலியுறுத்தும் அளவு அகவொழுக்கத்தைக் கூறக்காண்கின்றேமில்லை. வைணவசமயப் பிரசாரகர் திருமண் இட்டுக் கொள்ளவும் துளசிமணி அணிந்துகொள்ளவும் இவைபோன்ற பிற புரியவும் பணிப்பதையே முக்கியமாகக் கொண்டுள்ளார். வேறு கூட்டத்தார் அது இல்லை இது இல்லை நானே பெரியவன் முதலிய போதனை ஏதேதோ செய்துவருகின்றனரேயன்றி அக வொழுக்கம் போதிக்கின்றாரல்லர். சைவ

சமயம் என்ருல் விபூதி என்றும், வைணவ சமயம் என்ருல் திருமண் என்றும் மட்டும் எண்ணிக் கொண் டிருப்பவர் பலர் இருக்கின்ருர் இக்கூட்டத்தாருள். "விபூதி பூசாதவன் நெற்றியைச் சுடு" என்று கூறு பவரும் "திருமண் இடாதவன் முகத்தில் விழியாதே" என்று விளம்புபவரும் இருப்பாராளுல் புற வொழுக்க மென்று கூடப் பலரால் அங்கீகரிக்கப் படாத வற்றில் தோன்றிய பித்தைப்பற்றி என் னென்று கூறுவது? இதில் சிறிதேனும் அகவொழுக கத்தில் உறுதிகொண்டால் மக்கள் எவ்வளவு மேம் பாடடைவர்? இவர் நிற்க,

* * *

சாதி சாதி என்று கதறும் வியாதிபிடித்த கூட்டத்தாரை நோக்கலாம். "என் சாதி பெரிது என் சாதி பெரிது" என்று பறையடிக்கின்ருர் பலர். அவரும் அகவொழுக்கத்தைச் சிறிதும் எண்ணுகின் ருரில்லை. ஒழுக்கத்தைப்பற்றிய கவலை அவர்கட்கு இல்லை. பிறப்பு ஒன்றுதான் அவர்கள் கூறுவது. "நான் இன்னசாதிப் பெண் வயிற்றில் பிறந்தேன், ஆகையால் நான் பெரியவன்" என்று வேண்டுமாளுல் கொள்ளும் நிலையில் ஒழுக்கம் கெட்ட பின்னரும் சாதி உயர்வு என்று கூறிக்கொள்தல் எவ்வளவு பேதைமை! இவ்வளவு கேடான நிலையில் அக வொழுக்கத்தை விட்டுவிட்டுப் புறவொழுக்கத்தைக் கொண்டே பெருமை பேசுகிருர் சாதிப் பேயாற் பீடிக்கப்பட்டவரும்.

* * *

இங்ஙனமாக யாண்டும் அக வொழுக்கத்தைக் காணமுடியவில்லை. புறவேடம் போற்றப்படுகிறது.

இத்தீமையை யொழித்து எம்மதத்தினராயினும் எச்சாதியினராயினும் எந்நாட்டவராயினும் ஒழுக்கங் கொண்டவர், புற வொழுக்க மட்டு மன்று, அக வொழுக்கமும் கொண்டவர் எவரோ அவரே சிறந்தோர் என்ற உண்மையை நம் நாட்டு மக்கள் தேறி உயர்வடைய இறையருள்வதாக.

---

## ௧0. உயிரும் உடலும்

இப்பூவுலகில் மக்கள் பலர் வாழ்கின்றனர். மாக்களும் வாழ்கின்றன; புட்களும், புழுக்களும், புல்பூண்டுகளும் வாழ்கின்றன. மரஞ் செடிகள் தொட்டு மக்கள் ஈருகவுள்ள அனைத்திற்கும் உயிரொன்று உண்டு; உடலொன்று உண்டு. உயிரிலாத உடலும், உடலிலாத உயிரும் இந்நில உலகில் வாழ முடியாது. உடலைவிட்டு உயிர் நீங்குமானால் உடல் உபயோக மற்று உடனே அழிந்தொழிந்து விடுகிறது; நீங்கிய உயிருக்குத் தனித்தியங்கி விளக்கம்பெறும் ஆற்றல் கிடையாது. உயிர் மற்றொரு உடலோடு கூடியே தோற்றம் பெறமுடியும்.

* * *

புல்லாதி எல்லாவற்றிற்கும் உடலுண்டு என்பது பல்லோர்க்கும் தெரியும். "அவைகள் நாமறியுமாறு பேசவில்லை; இயங்கவில்லை யாதலின் உயிரேது?" என்று பலர் ஐயுறலாம். உயிர் அவற்றிற்கும் நன்றாக உண்டு என நமது நூல்கள் நவில்கின்றன. நூல்களில் நம்பிக்கை கொள்ளா மக்கள் இருக்கலாம். அவர்களின் பொருட்டாகவே போலும் நேரில் அறியுமாறு காட்டுதற்கு நம்முடைய இப்புண்ணிய நிலத்தில் கடவுள் ஒரு பெரியாரை அனுப்பியுள்ளார். அவர்தான் அறிஞர் ஜகதீசச் சந்திரவசு என்பவர்; இப்பெரியார் வங்கநாட்டில்

தோன்றியவர். இன்றும் அவர் நம்நாட்டில் உலவு கின்ருர்; கண்கூடாகக் காட்டுகின்ருர் தாவரங் களின் தன்மைகளை யெல்லாம்; "மரஞ் செடிகொடி முதலாயின வெல்லாம் பேசுகின்றன; உண்கின்றன; உறங்குகின்றன; இன்ப துன்பங்களை அறிகின்றன" என்று இயம்புகின்ருர்; கூடியவரைப் பிறர் அறியு மாறு நிரூபித்துக் காட்டுகின்ருர்; அதுபற்றிப் பலப்பல இடங்களில் உரையாடி வருகின்ருர்; நூல் கள் பல எழுதியிருக்கின்ருர். அறிஞர்கள் அவரைப் பெரிதும் மதிக்கின்றனர். உலகத்தில் இந்நாள் உள்ள பேரறிஞர்களுள் நமது வசு ஒருவர். அவரை உலகம் நன்கு அறியும், அவர் ஆராய்ச்சித் திறத்தைக் கண்டு வியவாதார் அறிஞருள் எவரும் இலர் என்று இயம்ப லாம். எனவே இதுபற்றிய ஐயப்பாடு எவர்க்கும் வேண்டுவதின்று. உயிர் எல்லாவற்றிற்கும் உண்டு. அவ் உயிரை ஒன்று முதல் ஆறுவரைப் படிப்படி யாகக் கூறும் நமது பநுவல்கள்.

* * *

நமது பழந்தமிழ் இலக்கணமாகிய தொல்காப் பியம் இவற்றைக் கீழ்வரும் சூத்திரங்களான் முறைப் படுத்திக் கூறுகின்றது.

**"புல்லும் மரனும் ஓரறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே**
**நந்தும் முரளும் ஈரறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே**
**சிதலும் எறும்பும் மூவறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே**
**நண்டுந் தும்பியும் நான்கறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே**

**மாவும் மாக்களும் ஐயறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே**
**மக்கள் தாமே ஆறறி வுயிரே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."**

என்பது தொல்காப்பியச் சூத்திரங்கள். புல்லும் மரமும் அவைபோன்ற பிறவும் ஓரறிவுயிரென்பதும், நந்தும் (சங்கு) முரளும் (சிப்பி) இவைபோன்ற பிறவும் ஈரறிவுயிரென்பதும், சிதலும் (கறையான்) எறும்பும் இவைபோன்ற பிறவும் மூவறிவுயிரென்பதும், நண்டும் தும்பியும் இவைபோன்ற பிறவும் நான்கு அறிவுயிரென்பதும், மாவும் (விலங்கு) மாக்களும் (மாக்குணம் படைத்த மக்கள்) இவைபோன்ற பிறவும் ஐயறிவுயிரென்பதும், மக்களும் இவர்போன்ற பிறரும் இவர் போன்ற அறிவுடைய பிறவும் ஆறறிவுயிரென்பதும் இவற்றின் பொருள். குறித்தவற்றில் ஓரறிவாகக் குறித்தன உணர்ச்சி மட்டும் உடையன எனவும், ஈரறி வென்றவை அவ்வுணர்வோடு சுவையறிவும் உடையன வெனவும், மூன்றறிவாகக் கூறியன அவற்றோடு நாற்றங் காணும் அறிவும் உடையனவெனவும் நான்கறிவாக்கூறியன அம்மூன்றனோடு கண்ணறிவும் பெற்றனவாகவும், ஐயறிவென்றவை அவற்றோடு செவியறிவும் பெற்றனவாகவும் மக்கள் முதலியோர் ஆறுவதாகிய பகுத்தறிவும் பெற்றோராகவும் கொள்ளப்படுகின்றன.

*  *  *

உயிரைத் தாங்கி நிற்பது உடல். உயிரும் உடலும் வெளித்தோற்றத்திற்கு ஒன்றாகவே காணப்படும். உயிர் வேறு; உடல் வேறு. உடல்தான் கண்முன் தோன்றும். உயிரைக் கண்ணாற் காண

முடியாது. உடலினுள்ளே இருக்கும் உயிர். அதைப் பகுத்தறிவு என்ற கருவிகொண்டே காண்டல் வேண்டும். இதனைக் காணும் அறிவு மக்கள் உலகத்திற்கே உண்டு. அவருள்ளும் ஒரு சிலருக்கே உடல் வேறு உயிர் வேறு என்று காணும் அறிவு இருக்கிறது. இவ் உண்மையை மக்கள் அனைவரும் கண்டார்களானால் உலகில் தீமையே நிகழாதென்று திண்ணமாகக் கூறலாம்.

* * *

இதனை உணரவேண்டுவது மக்கட்கு இன்றியமையாக் கடன். இதன் பொருட்டே மக்கட்கு ஆறுவது அறிவு தரப்பட்டது. 'இவ்வறிவு பெறார் மக்கள் யாக்கை பெற்றிருந்தாலும் மக்களல்லர்; மாக்களே' என்று ஆசிரியர் தொல்காப்பியனார் சொல்லுகின்றார். உடல் வேறு உயிர் வேறு என்று மக்கள் அறிய வேண்டிய இப்பொருளை அறிந்தார்களானால்...... அறிந்தபடி ஒழுக முந்துவார்களானால் உலகில் தீமைகளே நிகழா.

* * *

உடலைத் தானென எண்ணியே மக்கள் தீமை புரிகின்றனர். உடலின் பொருட்டாகவே இவ்வுலகில் எல்லாம் நிகழ்த்துகின்றனர். உயிரைத் தானென எண்ணுவாரானால் அதற்குரிய செயல் புரிவரன்றோ? உயிர்க்குறுதி நாடுங்கால் தீயன நிகழா. ஒரு மகன் தன்னுடலைக் காத்தற்காக......தன் மனைவி மக்கள் உடல்களை ஓம்புவதற்காக......தாங்கள் நன்றாக வாழ்தற்காக, உலகத்திலுள்ள பிறரையெல்லாம் தன்னால் ஆனமட்டும் துன்புறுத்திப் பொருளைச் சேகரிக்கின்றான்; பிறவற்றைச் செய்கின்றான். அங்ஙனமே

ஒரு மகளும் தன்னுடலையும் தன் கணவன் மக்கள் முதலானோர் உடலையும் வளர்ப்பதற்காக எவ்வளவோ காரியங்களை ஆற்றுகின்றாள். இவர்கள் உண்மையில் உயிரளவில் யாருக்கு யார் மனைவி மக்கள்? உயிருல கில் கணவன் ஏது? மனைவி ஏது? மக்க ளேது? தாய் ஏது? தந்தை ஏது? சுற்ற மேது? ஆண் ஏது? பெண் ஏது? உயிரில் கணவனுயிர் மனைவியுயிர் உண்டோ? ஆண் உயிர் பெண் உயிர் உண்டோ? இல்லை! இல்லை!! இல்லை!!!

*　　　*　　　*

உயிரெல்லாம் ஒன்றே. உயிரில் வேறுபாடே யில்லை. புல்லினுள்ளிருப்பதும் மாக்களுள்ளிருப்பதும் மக்க ளுள்ளிருப்பதும் ஆணுள் ளிருப்பதும் பெண் ணுள்ளிருப்பதும் எல்லாம் ஒருதன்மைத்தாய உயிரே. இன்று புல் யாக்கைபெற்ற ஒருஉயிர் பின்னர் மக்கள் யாக்கை பெறுதலும், இன்று விலங்கு உடல்பெற்ற ஒருயிர் நாளை மக்கள் உடலையோ அன்றித் தாழ்ந்த தேகத்தையோ தாங்குதலும், இன்று மக்கள் யாக்கை பெற்ற உயிர் பிற்றை மிகவும் தாழ்ந்த உடம்பு பெறு தலும் உண்டு. பிறவி செய்வினைக் கேற்றது. உடல் அழியுந் தன்மை வாய்ந்தது. உயிர் அழியாத் தன்மை பெற்றது.

*　　　*　　　*

மக்கள் கூர்ந்து கவனிக்கவேண்டும் இப்பொருளை. உடலை என்றென்றும் நிலைத்திருக்கச் செய்ய ஒருவ ராலும் இயலாது. உயிரை அழிக்கவும் எவராலும் கூடாது. இவ்வுண்மை உணர்வோர் உறு கடனாற்ற விரைந்து விடுவர். இவர்களே சிறந்த மக்கள். இவர் கள் எல்லா உயிரையும் பாகுபாடின்றி ஒன்றாகப்

பார்ப்பார். உயிரில் பேதமில்லை யென்பதை உணர்ந்தார் உடல் பேதத்தைப் பாராட்டமாட்டார். ஏன் நெறி கடந்து பலப்பல காரியங்கள் செய்தல் வேண்டும்? இவ் உடலோடுகூட உயிர் எவ்வளவு காலம் சேர்ந்திருக்கப் போகிறது? இவ்வளவு காலமென்று வரையறுத்துக் கூறமுடியுமோ! இன்று பிரிந்தாலும் பிரிந்துவிடும். நாளைப் போனாலும் போய்விடும். பிறகு மற்றொரு உடலைச்சாரும். இந்த மனைவி மக்களை எத்துணை நாட்கள் இவ்வுயிர், பெற்று வாழப் போகிறது? இவ்வுடல் உள்ளவரைதான். உடலோ எந்தக் கணத்தில் அழியுமென்று நிச்சயமாகக் கூறக் கூடாததாக விருக்கிறது.

* * *

உயிர் இதைப்போல எத்தனையோ உடல்களை எடுத்திருக்கிறது; எத்தனையோ மனைவியை-மக்களை-தாயை-தந்தையைப் பெற்றிருக்கிறது. நாள்தோறும் புதிய ஆடை அணிந்து பழைய உடை களைதல் போன்றது உயிர்கள் உடல்விடுத்து உடல்கொள்தல். இதற்குள் இந்த உடற்பற்றுக்கொண்டு ஏன் தீமைகள் புரிதல் வேண்டும்?

* * *

உலகம் ஒரு நாடகமேடை. அம்மேடையில் உயிர்கள் ஆண் பெண் என்று வேடம் பூணுதலாகிய உடல் தாங்கி நடிக்கின்றன. நாடகக்காட்சி முடிந்தவுடன் உடலாகிய வேடத்தைக் களைந்துவிட்டுச் சென்றுவிடுகின்றன. நாடக மேடையில் ஒருவர் ஆண் வேடம் பூண்டு வருகிறார்; மற்றொருவர் பெண் வேடம் தரித்து வருகிறார். உண்மையில் கணவனைப் போலவும் மனைவியைப் போலவும் ஆண்டு நடிக்கின்

றனர். அவ்வரங்கத்தை விட்டிறங்கிஞல் கணவஞக வும் மனைவியாகவும் கருதுகின்ருர்களோ? அவ்வரங் கத்திஞும் இவர்கள் நடிக்கின்ருர்களே தவிர, உள் ளத்தில் அவ்வாறு கருதிக்கொள்தல் உண்டோ? இல்லையே. அவ்வாறுதான் இதுவும். யாருக்கும் யாரும் உறவில்லை. எல்லாம் இறைவனின் திருவிளை யாடலே. இவ்வுண்மை ஓர்ந்தார் எவ்வுயிர் மாட்டும் ஒரே படித்தாக அன்பு செலுத்துவர்.

*　　　*　　　*

அந்தோ! உடலையே உயிரெனவும் அது அழி விலாததுபோலவும் மயங்கியே மக்கள் வினையாற்று கின்றனர். இது பெரும்பிழை! பெரும்பிழை!! மக்க ளாய்ப் பிறந்தும் உண்மை உணராமையால் அநேகர் பிறவிப்பயனை யிழந்து, இழிந்த பிறவியை எய்துகின்ற னர். இந்தப் பாழும் உடல் மிகவும் கெட்டது. அத னிடத்துப் பெரிய தீக்குணம் ஒன்றிருக்கிறது. அது உயிர் தன்னேடு கூடி வாழும்வரை உயிரைத் தனக்கு வேண்டிய எல்லாம் செய்யச் சொல்லும்; தன் பொருட்டுப் பிற உயிர்களை யெல்லாம் துன்புறுத்தச் சொல்லும்; தன் வாழ்வில்தான் அதற்குக் கவலை; மற்றவர் எவ்வாறு போஞலும் அது பொருட் படுத் தாது. இவ்வளவையும் தனக்காகத் தன்னேடு சேர்ந்த உயிரைச் செய்யச் செய்துவிட்டு, இறுதியில் தான் தன் தன்மைக் கேற்ப மாளும்பொழுது, தன் பொருட் டுத் தான் செய்யுமாறு தூண்டியதால் அவ்வுயிர் செய்த பாபங்களைத் தான் வாங்கிக் கொள்வதில்லை. மாண்டு தொலைகின்ற அது, தான் மாளும்பொழுது இவற்றையும் கொண்டு சென்ருல் என்ன? அது அவ் வாறு செய்வதில்லை. என்றும் அழிவிலாதிருக்கிற

அந்த உயிர் உடலைவிட்டுச் செல்லும்பொழுது, தான் உடலோடு கூடிவாழ்ந்த காலத்திற் செய்த பாவ புண்ணியங்களைத் தூக்கிக்கொண்டு செல்கிறது. அவற்றின் பயனை உயிர் அனுபவித்துத் தீரவேண்டும். உயிருக்குப் புண்ணியத்தைத் தேடிக் கொடுக்கும் நல்லுடலும் உண்டு. அது மிகச் சிலவே. எனவே பாபமாயினும் புண்ணியமாயினும் அவ்விரண்டும் உயிரைச்சேர்ந்தவை. "பற்றித்தொடரும் இருவினைப் புண்ணிய பாபமுமே" என்பது பட்டினத்தடிகள் திருவாக்கு.

*　　　*　　　*

புண்ணியம் செய்யத்தக்கது; பாபம் செய்யத் தகாதது. பாப காரியத்தை ஏன் செய்கின்றோமென்று ஆராயும் பொழுது, உடலின் பொருட்டாகவே என்பது கிடைக்கும். உடல் அழியுந்தன்மை வாய்ந்தது; உயிர் அழிவில்லாதது; உடலின் பொருட்டுச் செய்யப்பட்ட பாபத்தை இறுதியில் உயிர் ஏற்றுக் கொள்ள வேண்டுவதாகிறது. இந்நிலையில் பாப காரியத்தை ஏன் செய்து அல்லலுறவேண்டும்?

*　　　*　　　*

உயிரின் பொருட்டு மறஞ் செய்யநேராது. மறஞ் செய்வதெல்லாம் உடலின் பொருட்டே. எனவே உடல் வேறு உயிர் வேறு என்பதை உணர்ந்து, அழியுந் தன்மை வாய்ந்த உடலின் பொருட்டு மறத்தைச் செய்து அழிவிலா உயிரையும் இன்னலுக்குள்ளாக் காமல் உயிருக்கு உறு துணையாகிய நல்லற மாற்றி மக்கள் உய்வாராக!

---

## கக. தமிழ்ச்சுவையும் தமிழரும்

தமிழ் மொழி தொன்மை வாய்ந்தது என்பதை ஆராய்ச்சியாளர் எவர்க்கும் நான் கூறவேண்டுவ தின்று. தமிழ்மொழி சுவையுடைத்து என்பதும் அவ்வாறே. ஆனால் தமிழருள் பலர் இவற்றை உணர வில்லை. இந்நாள் உலகில் உலவும் தமிழரென்போரில் தமிழ்ச்சுவையறியா மக்களே பலப்பலர். தமிழர் என்பதன் பொருள் தமிழைச் சிதைவுபடுத்திக் கொச்சையாக வாயாற் பேசும் பலர் நிறைந்த ஒரு கூட்டத்தார் என்றே கொள்ளவேண்டியதிருக்கிறது. தமிழருள் தமிழ்ச்சுவை யறிந்தார் மிகச்சிலர். தாய் மொழியின் சுவையறியாமல் வாழும் மக்களில் தலைசிறந்தவர் தமிழர் என்பதை எவரும் மறுக்கமுடியாது. "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோ லினிதாவ தெங்குங் காணோம்" என்று உயர்பெரும்புலவர் உரைத்தவாறு, மொழியில் இனியது தமிழ்மொழி. தமிழென்பதன் பொருளே 'இனிமை'யாமானால், அதன் இனிமையைப்பற்றி இயம்பவா வேண்டும்? இன்ன தங்கள் சொந்த மொழியின் இனிமையை......அதன் நற்சுவையை, தமிழர் அறியவில்லை. இனியமொழி அகத்தே யிருக்க ஏனோ பிறமொழி பயில இன்னுற்று அலைகின்றனர்? கனியிருப்ப ஏன் காய் கவர்கின்றனர்? கரும்பை விடுத்து ஏன் இரும்பை மெல்கின்றனர்?

*    *    *

தமிழனாகப் பிறக்கத் தவமன்றோ செய்தல் வேண்டும்? தமிழிலுள்ள சுவை, பிற எம்மொழியினும் இல்லையென்று தமிழும் பிறவும் நன்கு பயின்ற அறிஞர் பலர் சாற்றுகின்றனர். அவ்வினிய தமிழைத் தாய்மொழியாப் பெறும் பேறு பெற்றும் அதன் சுவை நுகராதொழிதல், "அங்கைகொண்ட சீதளவான் அமுதேய்ப்பத் தித்திக்கத் தேம்பெய்து செய்த தீம்பால் ஓதனத்தைக் கைவிட்டுப்" பேதுறுதலை ஒக்குமன்றோ? தமிழ் மொழியில் எவ்வளவு உயர்வு இருக்கின்றது! அதை அறியவில்லையேல் தமிழராய்ப் பிறந்து பயனென்? எண்ணிறந்த உயர் நூல்கள் தமிழ் மொழியில் இருக்கின்றன. அப்பெரும் அரதனக் குவியல்களுள் தலையாய சிலவற்றையேனும் பயிலாதவர் - தமிழ்ச்சுவையின் ஒரு சிறு துளியேனும் பருகாதவர், தமிழர் என்று கூறிக்கொள்தல் யாங்ஙனம் பொருந்தும்? இந்நாள் தமிழரெல்லாம் பேச்சுத் தமிழராகவும் எழுத்துத் தமிழராகவுமே யிருக்கின்றனர். தமிழர் என்ற பெருங்குழுவில் பாதியினராகிய பெண்களில் ஒரு சிலர் தவிர மிகப் பெரும்பாலார், ஏதோ ஒரு வகையாகக் குடும்பக் காரியங்கட்கு வேண்டிய சில பல சொற்களைக் கொச்சையாகப் பேசும் அளவில் தமிழராக இருக்கின்றனர். மற்றொரு பாதியினராகிய ஆண்மக்களுள் பெரும்பாலார் இப்பெண்களைப் போலவே பேசுவதோடுகூட அப்பேச்சுக்களை எழுதவுந் தெரிந்த தமிழராக இருக்கின்றனர். இற்றைத் தமிழர் நிலை இவ்வாறாகவே காணப்படுகின்றது.

* * *

தமிழ் நூல்களுள் உள்ள தமிழ்ச் சொற்களெல்லாம் தமிழரிற் பல்லோர் காதாற் கேட்காதனவாகவே யிருக்கின்றன. தமிழ்ச் சொற்களை, ஆங்கிலச் சொற்களென்றும் பிற சொற்களென்றும் எண்ணுவார் எண்ணற்றோர் தமிழரில் இருக்கின்றனரென்றால், தமிழின் இற்றைத் தன்மையை எவ்வாறு சகிப்பது? தமிழ்ப் பழ நூல்களைப் பயின்றாலன்றோ அவை தெரியும்; தமிழ்ச் சுவை மாந்தி யுயரலாம். தற்கால நாகரிகத்திலுழன்று ஆங்கிலங் கற்ற தமிழறியாத் தமிழ் நண்பர்கள், சில நல்ல தமிழ்க் கருத்துக்களை எடுத்துச் சொன்னால், "தமிழிலும் இவ்வாறு இருக்கின்றதா?" என்று வியப்படைகின்றனர். ஒரு ஆங்கில மகன் தமிழ்க்குறளையோ பிற அரிய தமிழ் நூலையோ ஆங்கிலத்தில் மொழிபெயர்த் தெழுதுவதைப் பார்த்த பிறகு அந்நூலின் மாண்புணர்வோர் தமிழரில் பலர் இருக்கின்றனர்.

*　　　*　　　*

தமிழ்ச் சுவையைத் தமிழர் அறியாமைக்குக் காரணம் பலப்பல. ஒரு பகுதியாராகிய பெண் மக்களைப் படிக்கவொட்டாது அடிமைகளாக்கிவிட்டனர். ஆண் மக்களுள் வறுமை வாய்ப்பட்டு வயிற்றுக்கு அலைந்து வாடுவார் தமிழைப்பற்றியே எண்ண அவகாசமிலராய் இருக்கின்றனர். செல்வமும் பிற நலன்களும் உள்ள தமிழருள் ஒரு பகுப்பார் தற்கால உலகத்தில் ஆங்கிலம் பயில்தலே பெருமதிப்பு என எண்ணி அதிலேயே கருத்தைச் செலுத்திவிட்டனர்; மற்றொரு பகுப்பார், தங்கட்கு நிறைந்த பொருட் செல்வ மிருக்குங்கால் ஏன் சிரமப்பட்டுக் கல்வி பயில வேண்டுமெனக் கருதி, தமிழ்க் கல்வியும் பெறாது,

வேறு எக்கல்வியும் பெறாது வாழ்கின்றனர். என்ன இருப்பினும் பிறந்த மொழியிலுள்ள பெருஞ்சுவை யறிய வேண்டாவோ?

*   *   *

தாய்மொழி கற்றல் இன்னாருக்கு அவசியம இன்னாருக்கு அவசியமில்லை யென உண்டா? செல்வருங் கற்றல் வேண்டும்; வறியருங் கற்றல் வேண்டும்; ஆண்களும் கற்றல் வேண்டும்; பெண்களும் கற்றல் வேண்டும்; தொழிலாளர், வியாபாரிகள் பிறர் ஆதிய எவரும் கற்றல் வேண்டும்; அக்கல்விச் சுவையைப் பெறுதல் வேண்டும்; உலகப் பொருள் களில் கலந்து கொள்ளாமலிருப்போரே கல்வி கற்றற் குரியார் என்று எண்ணுதல் பெருந்தவறு. எல்லா மனிதரும் கல்வி கற்றற்குரியார். உலகத்துப் பிறந்த ஒவ்வொருவரும் தமிழ்மொழி கற்று அதன் சுவை யறிந்து இன்புறுதல் வேண்டுமென்பது தமிழ்மொழி யின் சுவையறிந்த தக்கார் கொள்கை. எனவே தமிழ ராய்ப் பிறந்தும் தமிழ்ச்சுவை யறியா மக்கட்கு இரங் காது என் செய்வது?

*   *   *

"தமிழ் கற்றால் பிற ஏதும் செய்யமுடியாது; தமிழ் கற்றுவிட்டால் போதுமா? வாழ்க்கையை எவ் வாறு நடாத்தமுடியும்" என்று எவரும் ஐயுற வேண் டாம். பண்டைநாள் தமிழ் கற்றிருந்த பெரும் புலவரிற் பலர், தமிழைமட்டும் கற்றுக்கொண்டு உலகமே தெரியாது இக்காலம் இறுமாந்து திரியும் சிலர் போன்றிருக்கவில்லை; தமிழ்ப்பெரும் புலமை வாய்ந்திருந்ததோடு ஒவ்வொரு தொழிலினும் வல்லு நராக விருந்தனரெனத் தெரிகிறது. பண்டைப்

புலவர் பெருமக்களின் பெயர்களே இக்கூற்றை வலி யுறுத்தும். ஆதலால் தமிழ் எல்லோரும் கற்றல் வேண்டும். தமிழராய்ப் பிறந்து தமிழ் கல்லாது வாழ்தல் போன்ற தவறு வேறின்று. ஒவ்வொரு தமிழனும் தமிழ்ச்சுவை யறியுமாறு செய்யத் தமிழறிஞர்கள் பெருமுயற்சி செய்தல் வேண்டும். தமிழ் கற்றால் வயிறு வளர்க்க வழியில்லை யென்ற பேச்சு இனித் தமிழகத்தில் எங்கும் கேட்டல் ஆகாது. தமிழ்ப் படித்தோரைத் தக்கவாறு தமிழ்ச் செல்வர்கள் ஆதரித்தல் வேண்டும். தமிழ் வளர்த்தலில் தன வணிகர் பெரும் பங்கெடுத்துக்கொள்தல் வேண்டும். தனவணிகருக்குத் தமிழ் கற்கப் போதிய அவகாசமும் சாதனங்களும் உண்டு. என்றாலும் அவர்களும் தமிழ் பயில முன் வராமலே யிருக்கின்றனர். அவர்கள் நன்றாகத் தமிழைப் பயிலல் வேண்டும்; பிறரையும் பயிற்றுவித்தல் வேண்டும். தமிழணங்கு தனவணிக ராகிய தமிழ்ச் செல்வர்கள் தொண்டைப் பெரிதும் நாடிநிற்கின்றாள்.

* * *

பிற எவரையும் எவ் உத்தியோகத்தையும் எதிர் பாராமல் வாழும் தன்மை வாய்க்கப்பெற்ற தனவணி கரும் தமிழ்ச் சுவையறியா துறையும் கொடுமையை என்னென்றியம்புவது? அதன் சுவையை அவர்கள் அறிவார்களானால் அதனை ஏனையோரும் பெற வேண்டுமென்ற விழைவு அவர்கட்குத் தோன்றும்.

* * *

இந்நாள் தமிழ்ப் பழம்பெரும் பனுவல்களின் பெயர்களே தமிழருக்குப் புதுமையாகவன்றோ விருக்கின்றது? தமிழ்மொழிக்கு அரணாக இலங்கும்

ஓல்காப் பெருமைசேர் தொல்காப்பியத்தின் நீர்மையை எத்துணைபேர் அறிவர்? தொல்காப்பியம் போன்ற தொரு அரிய இலக்கண நூல் உண்டோ? அந்நூற் பொருளதிகாரத்தில் இல்லாப்பொருள் யாண்டுளது? பொருளதிகாரத்தின் அமைப்பை உரைக்க ஒருநா அமையுமா? அந்தோ! தமிழனாய்ப் பிறந்தும் தொல் காப்பியப் பொருளுணராது மாண்டுவிடுவதா? திருக் குறள் என்றபேரற நூலின் பெயரை அறியார் எவ் வுலகினும் உண்டோ? அச்சீரிய நூலை எத்துணையோ மொழிவல்லார் தங்கள் மொழிகளில் ஆக்கிக்கொண் டிருக்கின்றனரே? அதன் பெருமையை அளவிட் டுரைக்க எவரால் முடியும்? தமிழுக்கு உயிரல்லவா அந்நூல். தமிழ்மொழியை உலகம் முழுமையும் கற்றல் வேண்டுமென்பதைத் திருக்குறள் என்ற ஒரு நூல் உடைத்தாய ஒன்று கொண்டே அறிஞர் ஆமோதிப்பரன்றோ? இத்தகைய, இவ்வளவுதான் பெருமையுடையதென இயம்ப முடியாத ஒருபெரும் மெய்யற நூலைப் படித்துப் பெருமித மடைந்தார் தமிழரில் எத்துணை பேர்? அம்மம்ம! திருக்குறள் படிக்கும் பெரும்பேற்றையும் இழக்கும் தமிழரை எவ் வாறு நோவது?

* * *

இன்னும் எண்ணிலா மாபெருஞ் சிறப்புடை நூல்கள் தமிழ்மொழியில் பல உள. நந்தாப் புக ழுடைச் சிந்தாமணியை நவில்வார் எத்துணை பேர்? உலப்பிலாப் பெருமைச் சிலப்பதிகாரத்தைச் செப்பு வார் எத்துணை பேர்? அணியென விளங்கும் மணி மேகலையை அறைவார் எத்துணை பேர்? ஐம்பெருங் காப்பியங்களுள் மறைந்துகிடக்கும் எஞ்சிய இரண்

டையும் தேடுவாருளரோ? அச்சிட்டு வெளிவந்ததை அறியவிரும்புவாரையே காணுதபோது அதைப் பற்றிப் பேச என்னவிருக்கிறது? மற்றும் சங்க நூல்களாகிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை யாதியவற்றின் சுவையுணர்வார் எத்துணை பேரிருக்கின்றனர்? உம்பரும் போற்றும் கம்பர் காவியத்தை நயமுணர்ந்துரைப்பார் எத்துணை பேரிருக்கின்றனர்? தேவாரம், திருவாசகம், நாலாயிரமாதி உயர் தோத்திர நூல்களைப் பொருளுணர்ந்தோதுவார் எத்துணை பேர் இருக்கின்றனர்? பிற உயர் கருத்துடை அறநூல்களையும் இதிகாசங்களையும் புராணங்களையும் படித்துணர்வார் எத்துணை பேர் இருக்கின்றனர்? தமிழ் மொழியிலுள்ள அகப் பொருட்டுறையின் இன்பங்களை நுகர்வார் உளரா?

*          *          *

இத்துணைச் சுவையும் இன்பமும் இடையருது பயந்துகொண்டிருக்கும் பல நூல் பெற்ற அருந்தமிழ் அணங்கிற்கு மக்களாய்ப் பிறந்தும், தமிழ்ச்சுவையறியாதொழுகும் தமிழர் பலரின் நிலை பெரிதும் இரங்கத் தக்கது. இனியேனும் தமிழன்பர்கள் தமிழின் சுவையை அறிந்துகொள்தல் தமிழராகிய தங்கள் முதற்பெருங் கடமை என்பதை யுணர்ந்து முதலில் தாங்கள் அறிந்துகொள்ள முயல்வாராக. அறிந்த பின்னர் தாம் பெற்ற அவ்வின்பத்தை உலகம் பெறுமாறு செய இடைவிடாது உழைத்தல் கடமை.

## கஉ. அழகு எது?

அழகு அழகு என்று உலகத்தில் மக்கள் அறைவ தைக் கேட்கின்றோம். அழகில் மக்கள் பெரிதும் ஆசைப்படுவதையும் காண்கின்றோம். ஆனால் "அழகு எது?" என்று திட்டமாக நிச்சயிக்க முடியவில்லை. ஒவ்வொருவர் உளம் ஒவ்வொன்றை அழகாகக் கொள்கிறது. ஒருவருக்கு அழகாகத் தோன்றும் ஒன்று மற்றொருவருக்கு அழகாகத் தோன்றவில்லை.

* * *

உலகத்தை ஒவ்வொரு பகுதியாகப் பார்த்துக் கொண்டு வந்தோமானால் அழகில் மலிந்து கிடக்கும் வேறுபாடுகள் நன்றாக விளங்கும். நகைபோடுதல் ஒன்றைப் பார்க்கலாம். நகைபோடுதல் அழகிற்கு என்ற கருத்துக்கொண்டுதான் அதைப் போடுகின் றனர். அதில் எத்துணை வகை? அம்மம்ம! இத்துணை என்று அளவிட்டுரைக்க முடியுமோ? ஒவ்வொரு பகுதியில் வாழ்வோரும் ஒவ்வொரு மாதிரியான விநோதங்கள் நகையணிவதில் செய்கின்றனர். மூக் கைத் துளைத்து உருண்டையான பெரிய வளையங்களை அதில் மாட்டித் தொங்கவிடுகின்றனர் ஒரு பகுதியில். காதுகளை வரிசையாகப் பொத்து அரசிலைகளையும் மணிகளையும் குச்சிகளையும் சலசலவென்று ஆடும்படி மாட்டிக்கொள்கின்றனர் இன்னொரு பகுதியார். கையிலும் காலிலும் தூக்கமுடியாத அளவுள்ள பெரிய பெரிய வளையங்களை வரிசை வரிசையாக அணிந்துகொள்கின்றனர் வேறொரு சாரார். காது

களை வெட்டித் தசையை எடுத்து எறிந்துவிட்டு அதை ஒரு கை நுழையும்படியான பெரிய துவாரமாக்கித் தங்கத்தை முடிச்சு முடிச்சாக உருட்டி அத்துவாரங்களில் அங்கும் இங்கும் அசைந்தாடப் போட்டுக் கொள்ளுகிறார் இன்னொரு பக்கத்தார்.

* * *

கழுத்தில் வண்டிமாடுகட்குப் போடுவதுபோன்ற பெரிய தங்கச் சங்கிலிகளைக் கட்டிக்கொள்கிறார் வேறொரு சாரார். மற்றும் கழுத்தில் கொடிகளை மாட்டிக்கொள்கிறார் பிறிதொரு பக்கத்தார். இரண்டு மூக்கிற்கும் நடுவே துளைப்போட்டு மூக்குச் சிந்த முடியாமல் பில்லாக்கு என்று கூறுகின்ற ஒரு நகையை அதிற் போட்டுக்கொள்கின்றார் மற்றொரு பக்கத்தார். விரல் நிறைய மோதிரங்களைப் பல பல மாதிரியாக இட்டுக்கொள்கிறார் பல பகுதியாரும். கைகளில் சிறிய காப்புகளாகச் சில அணிந்துகொள்கிறார் ஒரு பகுதியார். பெரிய காப்பும் கொலுசும் மாட்டிக்கொள்கிறார் வேறு சில பகுதியார். மணிக்கட்டிலிருந்து முழங்கை வரையிலோ அதற்குச் சிறிது குறைவாகவோ காப்புக்களை அடுக்கிக்கொள்கிறார் வேறு பகுதியில். இவையனைத்தும் பெண்கள் நகை. பெண்களுக்குத் தாலி என்று ஒன்று கட்டப்பெறுகிறது. அத்தாலியில் எத்துணை மாதிரி! ஒவ்வொரு பகுதியில் தாலி ஒவ்வொரு மாதிரியாக இருக்கிறது.

* * *

நகை போட்டுக்கொள்வதில் ஆண்களைவிடப் பெண்களே அதிகமாதலின், பெண்கள் அணிகளே பேசப்பட்டன. ஆண்களும் நகை யணிகின்றனர். அதினும் ஒவ்வொரு பகுதிக்கும் மாறுபாடுகள் இருக்

கின்றன. ஒரு பகுதியார் காதுகளைப் பெரிதாகத் துளைத்துத் தங்கக்கம்பிகளை வளைத்துச் சுற்றிக் காதுகளில் தொங்கவிடுகின்றனர். காதுகளைச் சிறிதாகத் துளைத்து ஒரு பகுதியார் கடுக்கன் என்று சொல்கின்ற நகையைப் போட்டுக் கொள்கின்றனர். ஒரு பகுதியார் இரண்டு கைகளிலும் பெரிய காப்புகளைப் போட்டுக்கொள்கின்றனர். இன்னொரு பகுதியார் ஒரு கையில் மட்டும் காப்பையோ சங்கிலியையோ கட்டிக்கொள்கின்றனர். கழுத்தில் சில நகைகளைப் போட்டுக்கொள்கின்றனர் சில இடங்களில். பொதுவாக ஒவ்வொரு பகுதியினும் உள்ள இப்பெரிய வேறுபாடுகள் தவிர, அதற்குள்ளேயே ஆங்காங்கு சில மாறுபாடுகள் இல்லாமல் இல்லை.

* * *

ஒரே பகுதியில் கையாளப்படும் காப்புக்களில் எத்துணை மாதிரி! மணஞ் செய்துகொண்டதற்கு அடையாளமென்று கொள்ளப்படும் தாலியில் எத்துணை வகை! ஒன்றுக்கொன்று வித்தியாசம். ஆண்கள் அணிந்துகொள்ளும் சில நகைகளுக்குள் எவ்வளவு வேறுபாடு! ஒருவர் கடிகாரத்தை இடுப்பில் செருகி அதன் சங்கிலியை முன்புறத்தில் வரிந்து இன்னொருபுறத்தில் தொங்கவிடுகிறார். வேறொருவர் அதே பக்கத்தில் தொங்கவிடுகிறார். அதில் எத்துணையோ உருப்படிகள் அடுக்கடுக்காகக் தொங்குகின்றன. ஒருவர் உருத்திர அங்கத்தைச் சரட்டில் கோத்துக் கட்டிக்கொள்கிறார். இன்னொருவர் சங்கிலியில் கோத்துக் கட்டிக்கொள்கிறார். இன்னும் நகைகளையே விரித்துக்கொண்டு செல்லின் நீண்டுவிடும்.

* * *

மேற்குறித்த அனைத்தும் அழகுக்காகச் செய்து கொள்கின்றாரன்றி வேறன்று. ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்று அழகாகத் தோன்றுகிறது. ஒருவருக்கு அழகாகத் தோற்றுவது மற்றொருவருக்கு விகாரமாக வும் தோன்றுகிறது. நகையில் மட்டும்தான் அழகு வேறுபாடு என்று எண்ணவேண்டுவதில்லை. எல்லாப் பொருளையும் ஒவ்வொன்றாக எடுத்துப் பார்க்கலாம். எல்லாம் அவ்வாறே. ஒரே பொருள் எல்லோர்க்கும் அழகாகவும் ஒரேபொருள் எல்லோர்க்கும் அழகற்ற தாகவும் தோற்றுவதில்லை. அழகு அவரவர் உளங் கருதுமாறே அமைகின்றன.

* * *

ஒருவருக்குப் பெரிய பட்டைக்கரை வேட்டி அழ காகத் தோன்றுகிறது. இன்னொருவருக்குச் சன்னக் குறியே அழகுடையதாகப் படுகிறது. ஒருவருக்குச் சிகப்புக்குறி அழகாக இருக்கிறது. வேறொருவருக் குக் கறுப்புக்குறி அழகாக இருக்கிறது, மற்றொரு வருக்கு வேறு நிறம் அழகாகப்படுகிறது. ஒருவர் நான்குமுழ வேட்டி கட்டிக்கொள்ளுதல் அழகென நினைக்கிறார். இன்னொருவர் ஐந்துமுழங் கட்டுதல் அழகென எண்ணுகின்றார். மற்றொருவருக்கு எட்டு முழமே அழகெனப் படுகிறது. ஒருவர் வெள்ளை வேட்டி கட்டிக்கொள்தல் அழகென நினைக்கின்றார். இன்னொருவர் சாயவேட்டி அழகுடையதென எண்ணுகின்றார். ஒருவர் பன்னிரண்டுமுழச் சேலை அழகுடையதெனக் கட்டுகின்றார். மற்றொருவர் பதி னெட்டுமுழங் கட்டுதலே அழகெனக் கொள் கின்றார்.

* * *

ஒருவருக்குச் சாந்துப் பொட்டு அழகாகத் தோன்றுகிறது. இன்னொருவருக்குச் சவ்வாதுப் பொட்டே அழகெனப் படுகிறது. வேறொருவருக்குச் சந்தனப் பொட்டு அழகெனத் தோன்றுகிறது. மற்றொருவருக்குக் குங்குமப் பொட்டு அழகெனப் படுகிறது. ஒருவர் நெட்டுப் பொட்டு அழகென நினைக்கின்றார். மற்றொருவர் வட்டப் பொட்டு அழகென மதிக்கின்றார். பின்னொருவர் பிறைப் பொட்டு அழகுடையதெனப் பேசுகிறார். வேறொருவர் கோணல் பொட்டு அழகுடையதெனக் கொள்கின்றார்.

*　　*　　*

ஒருவர் தலையை நன்றாக எதிர்க்கட்டை போட்டு மழித்துப் பளபளவென்று கண்ணாடிபோல் வைத்துக் கொள்தல் அழகென உணர்கின்றார். இன்னொருவர் மயிர் வளர்த்துச் சீவிக்கொள்தல் அழகென மதிக்கின்றார். மயிர்ச் சீவலில் எத்துணை வகையான அழகுகள்! ஒருவர் கோணல் வகுப்பு அழகெனக் கொள்கின்றார். ஒருவர் நடு வகுப்பு அழகென நாடுகின்றார். ஒருவர் முன்னாலேயிருந்து அப்படியே திருகி மடக்கி விடுதல் அழகென எண்ணுகின்றார். ஒருவருக்குக் கொஞ்ச மயிர் அழகாகத் தோன்றுகிறது. இன்னொருவருக்கு பிடரிவரை மயிர் தொங்குதல் அழகாகப் படுகின்றது. இன்னும் பலருக்கு இதற்கிடையில் அவரவர் மனதிற்கேற்ப அழகு தோன்றுகிறது. கிராப்பில் எத்துணை வகை! குடுமியில் எத்துணை மாதிரி!

*　　*　　*

உடை உடுப்பதில் எவ்வளவு வேறுபாடு! ஒருவர் அப்படித் தூக்கிச் செருகுகிறார். இன்னொருவர்

இப்படியள்ளிச் செருகுகிருர். ஒருவருக்குச் சாதாரணமாக உடுத்துக்கொள்தல் அழகெனத் தோற்றுகிறது. மற்ருெருவருக்கு மடக்கி மடக்கிச் செருகுதல் அழகெனத் தோன்றுகிறது. ஒருவர் உள்ளம் சட்டை போட்டுக்கொள்தல் அழகெனக் கருதுகிறது. வேருெருவர் உள்ளம் அஃதில்லாதிருத்தல் அழகென விரும்புகிறது. ஒருவர் சட்டைமேற் சட்டைபோட்டு அதன் மேலே கோட்டுப் போட்டுக் கழுத்திற் சுருக்குப் போட்டு அதற்கேற்ற பிறவும் போட்டுக்கொள்தல் அழகென நினைக்கின்ருர். இன்னெருவர் அவ்வாறெல்லாம் செய்யாதிருத்தல் அழகென எண்ணுகின்ருர்.

* * *

பிற பொருள்களைப் பார்க்கலாம். ஒருவருக்கு வட்ட வடிவமான பொருள் அழகாகப் படுகிறது. இன்னெருவருக்குச் சதுரம் அழகாகத் தோன்றுகிறது. வேருெருவர் கோழி முட்டை வடிவை அழகென மதிக்கின்ருர். மற்ருெருவர் பட்டையை அழகாகப் பார்க்கின்ருர். ஒருவர் வெள்ளையை விரும்புகின்ருர். இன்னெருவர் பச்சையை எண்ணுகிருர். வேருெருவர் கறுப்பை நாடுகின்ருர். மற்ருெருவர் சிகப்பை மதிக்கின்ருர். பின்னெருவர் பிறிதைப் பேணுகின்ருர். ஒருவருக்குச் சின்னப் பொருளில் மனம் செல்கிறது. ஒருவருக்குப் பெரிய பொருளில் உளம் போகின்றது. இப்படியே பலப்பல.

* * *

எல்லோரும் விரும்புவது அழகையே. ஆனல் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றில் அழகைக் காண்கின்ருர். எனவே அழகென்ற ஒரு பொருள் உலகத்

துள்ள எல்லாப் பொருள்களிடத்தும் இருக்கின்றது; இல்லாமலுமிருக்கின்றது. கூர்ந்து நோக்கின் அழ கென்பது அவரவர் உள்ளத்திலேயே இருக்கின்றது. உள்ளந்தான் ஒன்றை அழகெனக் கொள்கின்றது; மற்றொன்றை அழகன்றென மறுக்கின்றது. அழகு பொருளிடத்து இருக்குமானால் ஒரே பொருள் எல் லோர்க்கும் அழகுடையதாகவிருத்தல் வேண்டும். அப்படிப் பொருள் ஏதும் இருக்குமானால் அது அழ குடைய பொருளென்ற தனிப் பெருமை பெறட்டும். அவ்வாறு எல்லோர்க்கும் அழகாகத் தோன்றும் ஒரு பொருள் அருமையினும் அருமை. "அழகு எது?" என்ற வினாவிற்கு இச்சிறிய ஆராய்ச்சியாற் கண்ட உண்மை விடை என்ன? "உள்ளங் கருதுவதே அழகு" என்பதாகும்.

## கந. இறைக்கு வேலை என்ன?

இறை என்பது கடவுள். இறைவன் என்ற சொல் கடவுளை ஆண்பாற்படுத்தும் சொல்லாகும். இறைவி என்பது பெண்பாற்படுத்துவதாகும். இறை என்ற சொல் இருபாலையும் பொதுவாகக் குறிக்கும் ஒன்று. பொதுப் பாலாகக் கூறும் கருத்துக் கொண்டே இறை என்று எடுக்கப்பட்டது. அவ் விறையாகிய கடவுளுக்கு வேலை என்ன என்பது ஈண்டு வினா. இவ்வினாக் கேட்டவுடன் சிலருக்கு வியப்புத் தோன்றலாம். சிறிது சென்றால் இப் பொருள் இன்றியமையாது ஆராயவேண்டிய ஒன்றே என்பது புலப்படும்.

*　　　　*　　　　*

இறையைப் பல்வேறு வகையான மொழிகளால் மக்கள் அழைக்கின்றனர். இறை என்பது உலகத்தை இயக்கும் ஒரு சக்தி. பொதுவாகக் கூறுவோர் இறை, கடவுள், சக்தி என்ற சொற்களால் அழைப்பர்; சிலர் சிவன், முருகன், கணேசன், உமை முதலிய பெயர்களிட்டு அழைப்பர்; வேறு சிலர் திருமால், திருமகள் முதலிய மொழிகளால் அழைப்பர்; மற்றுஞ் சிலர் இயற்கையென்று அறைவர். பெயர் எவ்வாறு கூறினும் பொருள் ஒன்றே. உலகத்துக்கெல்லாம் கடவுள் ஒன்றேயன்றி வேறன்று. அதில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கட்குத் தோன்றிய பெயர்களைச் சூட்டி இந்தப் பெயருடையதுதான் எல்லாவற்றிற்

கும் மேலான இறை என்று கூறுகின்றூர். அவ் விறை எந்தப் பெயரை உடையதாயினும் ஆக. அது சிவனுயினும் ஆக! நாராயணனுயினும் ஆக! பிற ஆயினும் ஆக! இயற்கையே ஆயினும் ஆக! பெயரள வில் நாம் கருத்தைப் பதித்தல் வேண்டாம்.

* * *

எல்லாவற்றிற்கும் மேலான சக்தி வாய்ந்த தொன்றுண்டு; அதுதான் உலகை இயக்குகின்றது என்பதில் ஐயமில்லை. அவ் இறைக்கு எந்தப் பெயரை எவர் இட்டழைத்தாலும் சரி. காளி கறுப்பன் முதலியவற்றைக்கூட இவ் உலகையெல்லாம் புரக் கும் கடவுள்களென்றே அவற்றை வணங்குவோர் கருதுகின்றனர். அக்கடவுளைக் கல்லென்று கழறிய போதினும் அன்றிப் புல்லென்று புகன்ற போதினும் நமக்குத் தடையில்லை. உலகத்துள்ள அத்துணை சொற்களையும் பெய்து வேண்டுமானுலும் கடவுளை அழைக்கட்டும். எல்லாப் பொருள்களின் பெயர் களையும் மொழிந்து கடவுளை அழைக்கலாம். அதிற் றவறென்றுமில்லை. எல்லாப் பொருள்களையும் இயக்குகின்ற ஒன்றை எப்பொருளின் பெயரால் அழைத்தலாகாது? எந்தப் பெயரிட்டழைத்தாலும் தகும். அவ்விவாதம் வேண்டாம் இப்பொழுது.

* * *

அவ்வொரு இறை, "எங்கும் நிறைந்தது; எல்லா மானது; யாவும் வல்லது" என்று இயம்புகின்றேம். இந்நீர்மை வாய்ந்த இறைக்கு வேலை என்ன என்று கேட்கவேண்டுவதில்லை எனச் சொல்லலாம். இத் துணைப் பெருமை வாய்ந்த இறைக்கு எல்லாம் வேலை தானே. உலகத்தில் நடப்பன யாவும் இறை வேலை

யன்றிப் பிற யார் வேலை? எல்லாப் பொருள்களிடத்தும் இறை இருக்கின்றது. எல்லார் உளத்திலும் இறை உறைகின்றது. இவ்வனைத்தும் உண்மை. ஆனால் இவைகொண்டு உலகில் பல்லோர் மதிமயங்கி இறை தனி வேலையை உணராமல் தீங்குக்குள்ளாகி விடுகிறார். இறை வேலை இதுவென்பதை மக்கள் திடமாக அறிந்துகொள்தல் வேண்டும்.

* * *

" இறைக்கு எல்லாச் சக்தியும் இருப்பதால் எவர் என்ன தீமை செய்தபோதினும் இறை பொறுத்துக் கொள்ளும்; செய்துவிட்டு ஈற்றில் இறையைக் குறையிரந்து வேண்டி நின்றால் அது ஈந்துவிடும் " என்று கருதிவிடுகிறார் சிலர். இது பெரும் தவறுடைக் கொள்கை. இக்கொள்கையைப் பெரிதும் பரப்பியது புராண உலகமேயாம். செய்த தீமைக்கு ஏற்ற கழுவாய் உண்டு என்ற உண்மையைப் பக்திவழி பாழாக்கி விட்டது. இறைமாட்டுப் பக்தி செய்து ஒழுகினால், தான் செய்யும் எவ்விதப் பாதகங்களையும் இறை களைந்துவிடும் என்று புராண உலகம் புகல்கின்றது. அவ்வாறு செய்த பல்லோர் வீடெய்தியிருப்பதாக எண்ணற்ற சரிதங்களையும் அது இயம்புகின்றது. புராண உலகத்தை ஒழுக்கம் பெற்ற அறிஞர் வெறுப்பதற்குற்ற காரணங்களுள் தலைசிறந்தது இதுவே. புராண உலகத்தார் பக்தி யொன்றையே பொருளாகக்கொண்டு அதன்பொருட்டு உயிரினும் சிறந்த ஒழுக்கத்தைத் தேய்த்துத் தொலைத்துவிட்டார். தாங்கள் எடுத்துக் கொண்ட தலமும் மூர்த்தியும் சிறந்தனவெனக் கூறுதற்கு, ஒழுக்கத்தில் உளத்தாலும் ஆலோசித்து அரிதில் எண்ணக்கூடிய பெருந்

தீய வொழுக்கங்களிலெல்லாம் பயின்ருேரையும் உய் வித்த பெருமை பேசுதலே ஏற்றதெனக் கொண்டு விட்டார். இதில் எந்தப் புராணக்காரரும் இயம்பாத புதிய தீய வொழுக்கங்களைக் கூறி அவர்களை வென்று எவ்வாறு தான் கொண்ட தலத்திற்குப் பெருமை தரலாமெனச் சிந்தித்து வாயால் நல்லோர் வழுத்தத் தகாதவற்றை யெல்லாம் கூறிப்போந்து விட்டார். அத்தகைய கதைகளெல்லாம் பொய் என்பதை மக்கள் உணர்தல் வேண்டும். தீயவொழுக்கங்கள் நிறைந்த ஒருவன் ஒரு தலமென்று சாற்றுகின்ற ஊரையடைந்த மாத்திரத்தில் அவனுடைய தீய ஒழுக்கங்கட்கு அவன் அடையவேண்டிய பயனை யடையாமல் முற்றுந்துறந்தோர் அடையும் பேரின்ப நிலையெய்தினுன் என்று இயம்புதல் யாங்ஙனம் மெய் யாக இருக்கமுடியும்?

* * *

இக்கூற்றினுல் இறைநெறி கடந்தது என்றன்ருே ஏற்படும்; அது அறங் கொன்றதாகவன்ருே ஆகும்; அது அறம் பாராது வணங்கினேரை வாழ்விப்பதென் றல்லவா ஆகிவிடும்? அத்துணைச் சிறுமையுடையதா இறை? தன்னை வாழ்த்திய ஒன்றற்காக, செய்த தீங்குகளை யெல்லாம் பாங்காகக் கொள்ளும் ஒன்று யாங்ஙனம் பெருமையுடைத்தாகும்? இறையை அவ் வளவு இழிந்த ஒன்ருக நான் கொள்ளவில்லை. தன்னின் மிக்கதொரு பொருளில்லாத மேலான மெய்ப் பொருளாக இறையைக் கொள்ளவேண்டுமானுல் இச்சிறுமையை அதன்பால் ஏற்றுதல் சாலுமோ? கேவலம் தன் பொருட்டு ஒன்றைச் செய்தல் கீழோர் செயலன்ருே? அப்பெருங் குற்றத்தை இறைபால்

ஏற்றுவது மூடத்தனம் என்று உரக்கக் கூற என்ன தடையிருக்கிறது? தங்கள் நீர்மைக்கேற்பவே உயர்ந்த பொருள்களையும் இழிந்த நிலையில் ஈர்த்தல் பாபம். பெற்ற தாயை மருவி ஈன்ற தந்தையை வெட்டி வீழ்த்திய கொடும் பாதகனை ஒரு உயர்பொருள் உய் வித்திருக்குமோ? அவ்வாறு செய்திருக்குமேல் அது இறையாகுமா? அங்ஙனம் மாறான வினையை இறை எவ்வாறு செய்யும்? இயல்புக்கு முரணைச் செய்ய யாங்ஙனம் சாலும்? இறைக்கு உயர்வு தரக்கூறும் இந்நீர்மை வாய்ந்த அனைத்தும் பொய்! பொய்!! பெரும் பொய்!!! இவ்வாறு கூறினோர் இறைக்குப் பெருமைதரும் கருத்துக்கொண்டு பேசினாரெனினும் இதனால் இறைக்கு ஆராய்ச்சியில் சிறுமையே நேரும் என்பதை அறியாது செய்துவிட்டார்.

* * *

எள்ளு விதைத்தால் எள்ளு விளையுமேயன்றிக் கொள்ளு விளையாது. தினையிட்டவர் தினையை அறுக்க முடியுமன்றிப் பிறிதை அறுக்க முடியாது. நல்வினை செய்வோர் நல்வினைப் பயனை நுகருவர்; தீவினை செய்வோர் அவ்வினைப் பயனை யடைவர். நல்வினை செய்தவர் இறையை வணங்காதொழிகின்றா ரென்று வைத்துக்கொள்வோம். தன்னை வணங் காமைக்காக அவ்விறை அவர்கள் நல்வினையை எல் லாம் கொன்று தீவினைப் பயனை அவர்கட்கு நல்கி அவர்களை இடர்ப்படுத்த முடியாது. அதுபோலவே தீவினை செய்தோர்க்கு நல்வினைப் பயனைத் தருதலும் இல்லை. செய்வினைக்கேற்றதே பயன் என்பதில் இம் மியும் தடையில்லை.

* * *

எவரெவர் எவ்வெவ்வினை யாற்றுகின்றாரோ அவற்றை யெல்லாம் சீர்தூக்கி அவ்வவ் வினைக் கேற்ற பயனை நல்கிக்கொண்டிருப்பதே இறை வேலை. அவ்வாறு செய்யும் ஒன்றே இறை என இயம்பப்படு கிறது. அல்லாமல் செய் வினைக்கு மாறான பயனை இறை தருமென்று நம்புதல் மூடத்தனம். அங்ஙனம் தர இறை என்ற ஒரு பெரும் பொருளால் முடியாது. இதனால் இறையின் ஆற்றலை நான் குறைப்பதாக யாரும் கொண்டு மருளுதல் வேண்டாம். பெரியவர் களால் ஏற்ற காரியங்கள்—செய்யத்தக்க காரியங்கள் செய்யவே முடியும்.

*   *   *

செயத் தகாத காரியங்களை ஒருவர் செய்தால் அவர் முன்னே பெருமையுடையவராயினும் அக்கெடு வினை செய்த அன்றே அவர் சிறியவராகிவிடுகிறார். "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்" லன்றோ? நிலையிற்றிரிந்தபின் பெருமையேது? எனவே இயற்கைக்கு மாறாக நல் வினையாற்றினோரை நரகத்தும் தீவினையாற்றினோ ரைத் துறக்கத்துங்கூடச் சேர்ப்பிக்கும் ஆற்றல் இறைக்கு உளவென்று கூறினாற்றான் இறை பெருமையுடையது என்று கூறுதல் இழுக்கு. அவ் வாறு ஆமேல் அது தீய செயல்.

*   *   *

எல்லா மக்கள் உளத்தும் உறைந்து எல்லாப் பொருள்களிடத்தும் துன்னி யாவற்றையும் இயக்கும் இறை, அவரவர் செய்வினைக்கேற்ற பயனை அளிக் காது தன் விருப்பப்படி வகைதொகையின்றிக் காரி யங்களை ஆற்றிச் செல்லுமானால் அவ்விறை நடு

நிலைமையுளதென்று யாங்ஙனம் இயம்புதல் ஏற்கும்? எனவே எவ்வாற்றானும் மாறிய பயனை இறை நல்காதென்பது தேற்றம். இவ்வுண்மையை நன்கு ஓர்ந்தால்தான் மக்கள் நல்வினையாற்றுவதிலேயே கருத்துச் செலுத்துவர். புராண உலகத்தார் கூற்றால் தீவினை செய்துங்கூட நல்வினைப் பயனை நுகரலாம் என்ற கொள்கை கொண்டார் இன்னே அப் பாழுங் கொள்கையை விட்டொழித்து நல்வினையில் முயல்வாராக.

*　　　　*　　　　*

அவரவர் வினைக்கேற்ற பயன் என்ற முடிவு உண்மையானால் "இறைக்கு வேலை என்ன?" என்ற வினாவெழலாம். அதனையே தலைப்பாகவும் பொறிக்கப் பெற்றது. இறை இருந்தாலும் இல்லாதுபோனாலும் அவரவர் வினைப் பயனை அவரவர் அடைவது இயல்பன்றோ என்று கூறலாம். அவ்வாறடையச் செய்யும் ஓர் சக்தியைத்தான் இறை என்று வழுத்துகின்றோமன்றி வேறன்று. இறை என்பது நம்மைப் போல் உருவம் பெற்று விளங்குகின்ற ஒரு சிறு பொருளா? இறை உண்மை உணர்ந்தோரே இதனையறிவர். "இறை எங்கும் நிறைந்தது; எல்லாம் ஆனது; யாவும் வல்லது" என்பதைத் திரும்பவும் வலியுறுத்துவேன். இறைக்கு என்ன வேலை? அவரவர் வினைக்கேற்ற பயனை நல்குவதே. எனவே நாம் செய்யவேண்டுவதென்னை? நல்வினை! நல்வினை!! நல்வினை!!!

## கச. அன்றும் இன்றும் என்றும்

இவ்வுலகில் மக்கள் கருதுவனவற்றுள் தவருன பல கருத்துக்களைக் காண்கின்ரும். அவற்றுள் ஈண்டெடுத்துக் கொண்டிருக்கும் பொருள்பற்றியதும் ஒன்று. அன்று, அதாவது பண்டைநாள் மக்கள் அனைவரும் பேரறிவுபடைத்து வாழ்ந்தார்கள் என்றும், பெருங் குணங்களெல்லாம் நிரம்பப் பெற்றிருந்தன ரென்றும், அவர்கள் ஆற்றிய கருமங்களெல்லாம் ஒழுங்கு தவருதன வென்றும், அவர்கள் செய்த அனைத்தும் ஏற்றுக்கொள்ளத் தக்கன வென்றும்; இன்று, அதாவது இந்நாள் மக்கள் அவர்களைக் காட்டினும் அறிவு பெரிதும் குறைந்தவர்க ளென்றும், குணத்தால் - ஆற்றலால் - வினையால் அவர்களினின்றும் தாழ்ந்தவர்களென்றும், ஒழுக்கத்தால் அவர்களை நிகரார் என்றும்: கருதுவது நம் நாட்டில் பெரும்பாலோர்க்கு இயல்பாகி விட்டது. இது பெருந்தவருன ஒரு கருத்து.

* * *

இவ்வாறு கருதுதற்குத் தக்க சான்று எதுவுமின்று. ஆனல் ஏன் கருதுகின்ருர்களென்ருல் அறிவுப் பயிற்சிக் குறைவினுலும் தொன்மையிற்கொண்ட காதலாலுமே என்றே கருத வேண்டுவதாகிறது. தொன்மையிற் காதல் கொள்ளவேண்டுவதே. எப்பொழுது? அது நன்ருமானல். தீதாமானல் தொன்

மைக்காகச் சிறப்புத்தர முடியாது. உயர்வும் இழிவும் பொருளைப்பற்றியதே. அதில் உயர்வொடு தொன்மையும் பொருந்துமானால் பெருமதிப்பிற்குரியதே. தொன்மை ஒன்றிற்காக மட்டும் சிறப்பு வாராது தொன்மையவாம் அனைத்தும் நன்றாகவும் மாட்டா; இன்று தோன்றும் யாவும் தீதாகவும் மாட்டா. முன்பிருந்தாருள் மூடர் பலருளர். அது உலக இயல்பு. உலகத்தில் எல்லாவகையான மக்களும் அன்றுமிருந்தனர்; இன்று மிருக்கின்றனர்; என்று மிருப்பர். எனவே, தொன்மையிற்கொண்ட நற்கருத்தினால் அன்றிருந்தாரை யாவும் கைவந்தவராகவும் இன்றிருப்பாரை எல்லாம் இழந்தவராகவும் இனிவருவாரை இன்னும் தாழ்பவராகவும் கொள்தல் தவறுடைத்தாகும்.

*　　*　　*

அறிவுப்பயிற்சி பெற்றால் இன்னோரன்ன கருத்துக்களை எவரும் கூறாமலே எல்லோரும் மாற்றிக் கொண்டுவிடுவர். இத்தவறான கருத்தினால் உலக வளர்ச்சி பெரிதும் தடைப்படும். முன்னையோரைப் போல் பின்னையோர் ஆதல் முடியாதென்ற நம்பிக்கை உளத்தில் பதிந்துவிடுமானால் நாளுக்கு நாள் தேய்வே என்ற அவர்கள் கருத்துப்படியே நடைமுறையும் நிகழும். இக்கூற்று உலக இயற்கைக்கு முற்றும் மாறுபட்டதாகும். உலகத்தில் நாளுக்குநாள் வளர்ச்சியையும் பிறவற்றையும் கண்கூடாகக் காண்கின்றோம். மனிதர்கட்குள் பேரறிவு படைத்தவர் அன்றுமிருந்தனர்; இன்றுமிருக்கின்றனர்; என்றுமிருப்பர். உயர்குணம் படைத்தோரும் ஒழுக்கங்காத்தோரும் அவ்வாறே. இவை யாவும் கால வேறுபாட்டால் எல்

லோர்க்கும் ஒரேபடித்தாக நிகழ்வது என்று கூறு தற்கில்லை.

* * *

அன்றிருந்தாரெல்லாம் உயர்ந்தாரென்றும் இன்றிருப்பாரெல்லாம் இழிந்தாரென்றும் எண்ணுவதால் இயையும் இன்னல்கள் எண்ணில. அன்றிருந்தாராயினும் அன்றி இன்றிருப்பாராயினும் அவர் எவரையும் பற்றிக் கவலை கொள்ளாது அறிவுப் பெருந்துணை கொண்டு அறமாற்றுதல் கடனெனக் கோடல் வேண்டும். அன்றிருந்தாரில் அறமுரைத்த அறிஞரையெல்லாம் தலைமேற்றாங்கி அவருரைத்த அறத்தை ஏற்கலாம். ஆனால் இன்றிருப்பார் கூறும் அறத்தைத் தள்ள வேண்டுமோ? அன்றை அறத்தைக்காட்டினும் மிக்க அறத்தை இன்றிருப்போர் உரைத்தால் அதை ஏன் அதனினும் மிக்கதாகக் கொள்தல் ஆகாது? இனறிருப்பாரைக் காட்டினும் அன்றிருந்தார் உயர்ந்தார் என்ற பொருளற்ற எண்ணம் போய் மாண்டாலன்றிப் பொருளிற் கருத்துப் பதியா. முன்னாள் இருந்த எவருக்குந் தோன்றாத கருத்து ஏன் இந்நாள் ஒருவருக்கு உதயமாகாதென்று நினைத்தல் வேண்டும்? இவ்வாறே உலகத்தில் எல்லோரும் கருதி வந்திருப்பாரானால் புதுக்கருத்து ஒன்றேனும் தோன்றியிருக்குமோ? இக்கூற்றுப்படி பார்ப்பின் உலகம் தோன்றியகாலத்து இந்நாள் உலகத்து எத்துணைக் கருத்துக்கள் உளவோ இவை அத்தனையும் தோன்றியிருத்தல் வேண்டும். இது நடைமுறைக்கு ஒத்ததோ?

* * *

படைப்புக்காலந் தொட்டு உலகத்து அறிஞரும் இருந்தார்; மற்றவரும் இருந்தார். அவரவர் தத்தம்

3467

அறிவுக்கேற்ப வாழ்க்கை நடாத்தி யிருப்பாரென்று வழுத்தவேண்டுவதின்று. குறைந்த அறிவினர் அவர் அறிவுக்கியன்ற வாழ்வை நடாத்தியிருப்பர். முன்னோரனைவரும் உயர்ந்தவரெனக் கொள்தலால் ஒருபேரிடர் நேர்வது ஈண்டுக் கவனிக்கற்பாற்று. உலகத்தில் அன்றும் இன்றும் என்றும் பேரறிஞர் சிலர் என்பதும் சிற்றறிஞர் பலரென்பதும் ஆராய்ச்சி யுலகம் மறுக்கமுடியாத தொன்று. பண்டைப் பேரறிஞர் ஆக்கிய அறங்கள் இன்னும் பேரறமாகப் பிறங்குதல் உண்மை. பண்டை மக்களுள் பலராகிய சிற்றறிஞர் (இதனால் பண்டை மக்களை நான் இழித்துரைப்பதாக யாரும் கருதுவார்களாயின் அதற்கு நான் பொறுப்பாளியன்று; உலக இயல்பை நான் நவில்கின்றேன்; என்றும் உலகம் சிற்றறிஞர் பலரும் பேரறிஞர் சிலரும் கொண்டதே என்ற கூற்றை ஒல்லுமாறு தக்க சான்றுடன் மறுத்தால் அங்கீகரிக்கத் தடையில்லை.) செயல்களைப் பரம்பரையாக அறிந்த தன்மைகொண்டும் அவர் ஒழுகிய நெறி கொண்டும் முன்னோர் செயலெல்லாம் உயர்ந்தது என்று கொள்ளும் கருத்தினால் வினையாற்றுவது மக்கட்கு மரபாகிவிட்டது. இதனால் மக்கட்குச் சிறப்புத் தரும் ஆராய்ச்சி யறிவு பயனிலதாக்கப் பட்டுவிடுகிறது. மக்களாவார் ஒவ்வொன்றையும் அறிவுகொண்டு ஆராய்ந்து செய்பவரே என்பது அன்றும் இன்றும் பெரியார் பலரும் கொண்ட கருத்து. எந்தப் பெரியவர் கூறினும் அதை ஆராயாமல் அப்படியே கொள்தல் என்பது மக்கட்டன்மைக்கு மாறானதாகும்.

* * *

ஒவ்வொருவருக்கும் கடவுள் அறிவு தனித் தனியே தந்திருக்கின்றார். ஆராயாமல் அவ்வறிவைப் பயனிலதாக்க வேண்டுவதில்லை. ஆராய்வதனால் எவ் விதத் தீங்குமில்லை. தமது அறிவுக்கு எட்டாதவற் றைத் தாம் மிகவும் நம்பிக்கை கொண்டுள்ள நடுநிலை யான உளம் வாய்ந்த ஒருவரால் அறிந்து கொள்ள லாம். எதனையும் ஆயாமலே கொள்தல் நலமன்று. ஆய்தல் வழியிற் சென்றுவிட்டால் நன்றெல்லாம் நின்றுவிடும்; தீதெல்லாம் சென்றுவிடும். முன்னவர் செய்தவற்றை யெல்லாம் செய்வது என்ற தீயவழக் கம் ஆராய்ச்சியால் ஓடிவிடும். முன்னவர் செய்ததாயி னும் இல்லாததாயினும் நன்றானால் செய்ய வேண்டு வது; அன்றானால் அகற்ற வேண்டுவதே. இந்நிலை வந்தாலன்றித் தீமைகள் ஒழியா.

* * *

தாங்களாகவே செய்யும் தீமைகள் பல. தீமை செய்வதில் கருத்துப் பதிவதுபோல நன்மை செய்வதில் பதிவதில்லை. அதில் முன்னையோர் பெயரை வைத்து வேறு தீமைகளைச் செய்ய ஆராய்ச்சியின்மை பெருங் காரணமாகின்றது. தீமை புரியவேண்டுமானால் அதற்கு அன்றிருந்தோரைக் காரணராகக் கூற வேண்டுவதில்லை. யாதொன்றையும் அன்றிருந்தோர் செய்தார்; ஆதலினாலே செய்கின்றேன் என்ற பேச்சு இருத்தல் ஆகாது. எவர் செய்தபோதினும் சரியா, தவறா என்று ஆராய ஒவ்வொருவருக்கும் உரிமை யுண்டு. ஆராயாமல் செய்து முன்னோரையும் துணைக்கு இழுப்பது அறிவீனம். என்னே இம் மனி தர் நீர்மை! அன்றிருந்த நம் மனைய மக்களெல்லாம் நம்மினும் மேம்பட்டவர்கள் என்று எண்ணிக் கொள்

தல் வெட்ககரமாக இல்லையா? அஃதுண்மையேல் எண்ணத் தடையில்லை.

*     *     *

அன்று என்பதற்குப் பெருமையும் இன்று என்பதற்குச் சிறுமையும் கூறுதல் எவ்வாற்றானும் பொருந்தாது. இக் கூற்றை மறுக்கச் சில கட்டுக் கதைகளை யெல்லாம் சிலர் சான்று காட்டக்கூடும். அவைகள் ஆராய்ச்சி யறிவு உலகம் ஏலாதன. "ஒரு காலத்தில் எல்லோரும் கற்றவர்கள்; அதினும் ஒருவருக்கொருவர் ஏற்றத்தாழ்வு கூறமுடியாமற்படி அவ்வளவு சமமாகக் கற்றவர்கள்; கல்லாதார் அந்நாள் இல்லை" என்று ஒரு நூலில் கூறப்பட்டிருக்குமானால் அது உண்மையென்று எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்? "அழகில் ஒரு காலத்தில் எல்லோரும் மன்மதனைவென்றவர்கள்" என்றால், அதனை ஒப்புதல் யாங்ஙனம்? ஒரு காலத்தில் "வறிஞரில்லை எல்லோரும் செல்வர்கள்" என்றால், அது எங்ஙனம் உண்மையாக விருக்கமுடியும்? எல்லாக் காலத்தினும் எல்லாரும் உளர். நிற்க.

*     *     *

அன்றிருந்தாரெல்லாம் உயர்ந்தவரெனக் கொள்வதனால் தங்கள் செயலுக்கு அன்றிருந்தவர் வாக்காகச் சில பல சான்றுகள் காட்டப்படுகின்றன. சான்று எல்லோர்க்கும் அகப்படுகின்றது. எந்தப் பொருளுக்குச் சான்று வேண்டுமானாலும் உலகத்தில் இருப்பது இயல்பு. ஏன்? உலகத்தில் என்றும் எல்லா வகையினரும் இருந்திருக்கின்றனர். எவர்க்கு வேண்டுமானாலும் தங்கொள்கைக்கு ஏதேனும் பழமொழி அகப்படாது போகாது. இன்றேல் எதையேனும்

சொல்லிப் பழமொழி என்று பகர்ந்து விடலாம். செய்வது சரியா அன்று என்பதைப்பற்றிக் கேள்வி யில்லை. சான்று இருந்தால் போதுமென்றாகிவிட்டது. சான்றே மிகவும் முக்கியமாகக் கொள்ளப்படுகிறது.

* * *

சான்றைப் பற்றிக் கவலை யில்லை. பொருளை நன்றாக அலசி ஆராய்தல் வேண்டும். கொள்ளுதலும் தள்ளுதலும் பொருளைப்பற்றியதாக விருத்தல் வேண்டும். இதனால் எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தக்க பேரறிவு படைத்த பெரியோர்களைச் சான்று காட்டுவதை நான் மறுக்கவில்லை. அதுவுங்கூடச் சான்றொன்றே முக்கியமாகக் கொள்ளப்படுதல் ஆகாது. திருவள்ளுவரேயாகட்டும். அவர் சொன்னார், ஆகையினாலே செய்யுங்கள் என்று மட்டும் கூறிவிடுதல் பொருந்தாது. செய்தற்குரிய காரணங்களை எடுத்து விளக்குதலே சிறப்புடைத்து. காரணங்கள் தக்கவாறு கூறுவதோடு பெரியோர்கள் அருங்கருத்துக்களையும் அதில் வலியுறுத்துதல் சிறப்புடைத்தே. அதுபோல இன்று ஒருவர் கூறும் நல்ல கருத்தையும் எடுத்துச் சான்று கூறப் பின்வாங்க வேண்டுவதில்லை.

* * *

அன்று என்ற ஒன்றிற்கு மதிப்புண்டென எண்ணியே அநேகம் பொய்களைப் புனைந்துவிட்டார்கள். பழமை அதிகப்பட அதிகப்படப் பெருமை அதிகம் என்ற ஒரே காரணத்தால் பொய்மை வழியே பழமை கூறவும் பலர் முன்வந்துவிட்டார். பழமையில் சிறப்புக்கு ஒரு மதிப்புண்டு. ஆனால் பொருளின் பாகுபாட்டிற்குப் பின்னரே பிறயாவும். அன்றும் இன்றும் என்றும் நல்லது நல்லதே ; மற்றது மற்றதே.

## கரு. உண்மை—வாய்மை—மெய்ம்மை

"உண்மை - வாய்மை - மெய்ம்மை" என்ற இம் மூன்றும் ஒரு பொருட் சொற்கள். இவற்றின் பொருள் "பொய்யாமை" யாகும். இம் மூன்றும் சிறந்த தனித் தமிழ்ச் சொற்கள். இச் சொற்களி னின்றும் தமிழர் பொய்யாமையை எவ்வாறு கொண்டார் என்பது நன்கு அறியலாகும். இம் மூன்று சொற்களையும் தமிழ்க்கடலுள் தலையாய மூன்று பெரிய மணிகள் என்று வழுத்தலாம். இம் மூன்றும் பொய்யாமை குறிக்கும் சொற்கள் எனி னும் உள் நுணுகி நோக்கினுல் ஒவ்வொன்றும் தனித் தனியே அரும் பொருள் பலவற்றை அடக்கிக் கொண்டிருப்பதைக் காணலாம். இம் மூன்று சொற் களின் பெருமையையும் ஆராய வேண்டியே இக்கட் டுரைத் தலைப்பில் மூன்றும் பொறிக்கப்பட்டன. இம் மூன்றும் பொருளில் ஒன்று பட்டது. நுணுகி ஆயுங் கால் ஒன்றுக் கொன்று தன்மையில் சிறிது வேறு பட்டு ஈற்றில் இம் மூன்றும் பொருள் ஒன்றையே குறிக்கும். இவை குறிக்கும் பொருளின் நீர்மை அள விட்டுரைக்குந் தகையுடையதன்று. பெருந்தகை பொருந்திய ஒரு பொருள் குறிக்கும் நுட்பமார்ந்த மும்மணிச் சொற்களின் அழகை அன்பர்கள் பருக அளிக்கின்றேன்.

* * *

பொய்யாமை என்ற மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையா இவ்வரும் பொருளைத் தமிழர்

கொண்ட இந்நீர்மையில் கொண்டார் பிறமொழியில் இருந்தால் அவரும் தொன்மை நாகரிகம் வாய்ந்தவர் என்று கொள்ளத் தக்காரே. பொய்யாமையின் பெருமையை உண்மைத் தமிழர்க்குப் பல பட விரித்துக் கூற வேண்டிய அவசியம் இன்று. பொய்யாமையை வள்ளுவனரும் பிற அறிஞரும் போற்றிய தன்மை தமிழறிஞர் அறியாத தன்று. "பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம் பிற செய்யாமை செய்யாமை நன்று" என்ற ஒன்று போதாதோ? பொய்யாமையை ஆற்றிக்கொண்டு வந்தால் வேறு அறஞ்செய்யவேண்டுவதின்று என அறம்வகுத்த வள்ளுவனர் அறைவாராளுல் பொய்யாமையில் எத்துணை கருத்தைச் செலுத்தியிருக்கின்ருர் அப் பெருமானர் என்பது நோக்கத்தக்க தன்ரே? பொய்யாமையை ஆற்றிக்கொண்டு வந்தால் பிற அறமே ஆற்ற வேண்டாம் என்று அவர் கூறுகிருர். அம்மட்டோ? "யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத் தொன்றும் வாய்மையினல்ல பிற" என்றருளினர். நாம் உண்மையாகக் கண்ட அறங்களுள் எல்லாம் வாய்மையைக் காட்டினும் நல்ல எவையுமில" என்று கூறுவதைக் காட்டினும் இனி எவ்வாறு ஒன்றை வலியுறுத்த முடியும்? உலகிற்கு அறம் உரைத்தருளிய ஒரு பெரியார், தாம் ஆடித்திளைத்த அறக்கடலுள் தலை சிறந்த அறமாக் கண்டது வாய்மை என அநுபவித்துக் கூறுவாராளுல் வாய்மையின் மாண்பு மதிப்பிடுந் தரத்ததோ? வாய்மை கொண்டவனுக்கு என்ன சிறப்பு என்ற விளுவிற்கு, "உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார் உள்ளத்துளெல்லாம் உளன்" என்று

விடையிறுக்கின்ருர். "மனமார ஒருவன் பொய் யாது ஒழுகுவானுனல் அவன் உலகத்திலுள்ள ஒவ் வொருவர் உளத்திலும் வீற்றிருப்பான்." இதைவிட ஒருவன் சிறப்புப் பெறுவதெப்படி? எல்லோருடைய இதயத்தினும் என்றும் தங்கியிருக்கின்ற பெருமை மிக்க பெரும் புகழைக்காட்டினும் சிறந்தது மக்கட்கு எதுவுமில்லை. "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்ருமை நன்று" என்ற படி தோன்றினுற் புகழொடு தோன்றல்வேண்டும். எல்லோர் உளத்தினும் இருப்பதைக் காட்டினும் புகழ் வேறு என்ன இருக்கிறது? "பொய்யாமை யன்ன புகழில்லை" என்ருரன்ருே தேவர்? பொய்யா தொழுகி அதனுல் புவியோர் உள்ளத்திலெல்லாம் உறையும் ஒருவர் உளரோ வென்ருல் முன்னே இருந்தவரைப்பற்றிப் பேசுதல்வேண்டாம்; இன்று இருக்கின்ருர் காந்தியடிகள். எல்லோர் உளத்தினும் நீங்காது வீற்றிருப்பவர் இறைவர் என்று நாம் அறி கின்ருேம். அந்நிலையைப் பொய்யாமையால் மக்கள் உறுவதாயின் பொய்யாமையின் மேற்பட்டது புவி யில் உண்டோ?

* * *

இக்கட்டுரை "உண்மை-வாய்மை - மெய்ம்மை" என்ற சீரிய சொற்களை நோக்குதலையே பெரிதும் கொண்டு எழுந்ததாதலால் பொய்யாமைப் பொரு ளையே பல பட வற்புறுத்திக் கட்டுரையை நிரப்பாமல் அச் சொற்கள்மீது கருத்தைச் செலுத்தலாம். அச் சொற்களின் பொருளை நன்கு சிந்திப்போமானுல் பொய்யாமை பற்றி வேறு பல சொற்களில் விரித்துப் பேச வேண்டுவது இல்லை யென்று கூடத் தோன்றும்.

பொய்யாமை குறிக்கக் காணப்பெற்ற சொற்களே பொய்யாமையை ஆணித்தரமாக நிலை நாட்டுகின்றன.

*  *  *

இக்கட்டுரையின் முதற் சொல் "உண்மை" என்பது. உண்மை என்றால் பொய் சொல்லாமை என்ற அளவில் உலகத்தார் கொள்கின்றனர். உண்மை யென்பதற்குப் பொய்யை மனத்தினாலும் நினையாமை என்பதுபொருள். மனம், உளம் என்று ஏன் பெயர் பெற்றது? உள்ளுதல் உடைமையினாலேயே. உள்ளுதல் நினைத்தல். பொய்யை உளத்தினாலும் கருதாமை உண்மை. நிற்க, உண்மையென்பது உளத்தின் தன்மை என விரியும். உளத்தின் தன்மை எது? உண்மைதான். உண்மையற்றதெல்லாம் உளத்தின் தன்மையன்று. ஒருவன் உளம் ஒன்றைக் கருதிற்றென்றால் அது உண்மையாகவேயிருத்தல் வேண்டும். உண்மையற்றதைக் கருதுவது உளமாகாது. உண்மையற்றதைக் கருதும் உளங்களும் இருக்கின்றனவே என்றால், அவை உளங்களல்ல; கண்ணிருந்தும் கண்ணுடையோரல்லர் கல்லாதார் முகத்திரண்டு புண்ணுடையோர் என்று கூறிய வாறே உண்மையல்லா உளம்பெற்றார் உளமுடையாரல்லர்! பிற எது உடையாரோ? இது என் சொந்தக் கருத்தல்ல; உண்மை யென்ற பழந்தமிழ்ச் சொல்லின் கருத்து இது. இதனை உண்மைச் சொல்லின் செம்பொருள் அறிந்த எந்தப் புலவரும் மறுக்க மாட்டார்; மறுக்க முடியாது.

*  *  *

இரண்டாவது சொல் "வாய்மை" என்பது. வாய்மை என்றாலும் பொய்யாமை என்றுதான் கொள்ளப்படுகிறது. ஆனால் உண்மை யென்ற முன்னையது உளத்தினால் பொய் நினைத்தல் ஆகாது என்பதை உணர்த்திற்று. இவ் வாய்மை வாயினால் பொய்யுரைத்தல் ஆகாது என்பதை உணர்த்து கின்றது. வாய்மை என்பது வாயின் தன்மை என விரியும். இதனால் கிடைப்பதென்னை? வாயின் நீர்மை பொய்யாமையாகவே இருத்தல் வேண்டும். பொய்யாமைதான் வாயின் தன்மை. வாய்மைக்கும் வாய்க்கும் தொடர்புண்டேயன்றிப் பொய்மைக்கும் வாய்க்கும் தொடர்பு சிறிதும் இல்லை. வாய்மை யுடையதுதான் வாய். பொய்மையுடையது வாயல்ல. அது எதுவாயினும் ஆகுக. பொய்மையுடைய ஒன்றை வாய் என்று நாங்கள் எந்நாளும்—எந்தமிழ் மொழி யுள்ளளவும் ஏற்றுக்கொள்ள மாட்டோ மென்று எந்தமிழ்ப் பெருமக்கள் வாய்மை என்ற சொல்லினால் வரைந்துவிட்டார்.

* * *

மூன்றாவது "மெய்ம்மை" என்பது. மெய்ம்மை என்பதும் பொய்யாமையே எனினும் அது மெய் பற்றி வந்தது; மெய் என்பது உடல். உடம்பினால் பொய்மை புரிதல் ஆகாது என்பதை மெய்ம்மை உணர்த்துகின்றது. முன்னைய இரண்டைப்போலவே மெய்யின் நீர்மை மெய்ம்மை என விரியும். உடலின் நீர்மை மெய்ம்மையே யாகும். மெய் கூறார் மெய் யிருந்தும் அதாவது உடலிருந்தும் அது இல்லாதவ ராகவே ஆவர் என்பது மெய்ம்மையாற் கிடைக்கின் றது. எனவே, இம் மூன்று சொற்களும் உளத்தினு

லும் வாயினாலும் மெய்யினாலும் பொய்த்தல் தகாது என்பதை நன்கு சாற்றுகின்றன.

*　　　*　　　*

பொய்யாமைக்கு அமைக்கப் பெற்றிருக்கும் இம் மூன்று சொற்களையும் உன்னுந்தோறும் உன்னுந் தோறும் என் மனத்தில் கரையிலா மகிழ்ச்சிக் கடல் பொங்குகின்றது. உண்மையை — வாய்மையை — மெய்ம்மையை — பொய்யாமையை —இவ்வாறு அளவிட்டார் அறிவு என்னே! என்னே!! உள்ளக் கருத்தைப் பிறர் அறிந்துகொள்தற்கு நுண்பொருளடக்கம் பொதியாச் சொற்களை நுவல்தலோ அழகு? சொற்கள் என்றால் இவ்வாறன்றோ சீர்பெற்றிருத்தல் வேண்டும்? பொய்யாமையைக் குறிக்கப் பொய்ம்மையின் புன்மையை மக்கள் நன்கு உணர இம் மொழிகளைத் தவிர வேறு எம்மொழிகளை ஆக்கியிருக்க முடியும்? உளத்தால் பொய்த்தல் ஆகாது! உரையால் பொய்த்தல் ஆகாது!! உடலால் பொய்த்தல் ஆகாது!!! இவற்றைத் தவிர வேறு எவற்றினால் பொய்க்க முடியும்? மனம், வாக்கு, காயம் என்பர் பிறர். அவற்றை உளம், மொழி, மெய் என்போம் நாம். பொய்யாமைக்கு இம் மூன்றினடியாகவும் உண்மை—வாய்மை—மெய்ம்மை என்ற அழகு பெற்ற சொற்கள் அமைந்து கிடக்கின்றன. அச்சொற்களே இதைக்காட்டினும் பொய்யாமைப் பெருமையை வலியுறுத்த வேறு சொற்களால் சாலா நிலையில் நிற்கின்றன. உளத்தின் நீர்மை பொய்யாமைதான்; வாயின் தன்மையும் பொய்யாமைதான்; மெய்யின் நீர்மையும் அதுதான்: என்று கூறுவதைவிட வேறு எப்படித் தான் இடித்துக் கூற இயலும்?

*　　　*　　　*

உளம் உடையவரென்றால்—வாய் உடையவரென்றால்—உடல் உடையவரென்றால், அவர் பொய்யாமை மேற்கொண்டொழுகுபவராகவே இருத்தல் வேண்டும்.

பொய்யாமையாவது வாயினாற் பொய்பேசாதிருத்தல் மட்டும் அன்று. அஃதுமட்டும் உடையார்கூட இந்நாள் அரியரினும் அரியராகவே இருக்கின்றார். ஆனால் அதுமட்டும் பொய்யாமையல்ல. பொய் புகலலாமென்று உளத்தில் நினைத்தலும் தவறு. உள்ளம், உரை, செயல் மூன்றும் ஒன்றி யிருத்தல் வேண்டும். பொய்யை நினைத்தல் ஆகாது; சொல்தல் ஆகாது; செய்தலும் ஆகாது. நினைத்தால் அது சொல்லுக்கு வந்துவிடும்; பிறகு செயலுக்கு வந்துவிடும். ஆதலால் பொய்யை அறவே கொல்லவேண்டுமானால் உண்மை—வாய்மை—மெய்ம்மை என்ற மூன்று அரிய சொற்களின் மெய்ப்பொருள் அறிந்து நடத்தல்வேண்டும்.

* * *

ஆனால், உலகத்தார்க்கு உளத்தினாலும் பொய் நினைத்தல் தகாது என்று மொழிதல் வியப்பாகவிருக்கும். ஏன்? இது பொய்யுலகம்! பொய்யாமையுலகமன்று. பொய் மலிந்த உலகில் பொய்யாமை பேசுதல் புதுமையாகத்தானே இருக்கும்? பொய்யாமையை இத்துணை சிறப்பாகக்கொண்ட தமிழ்நாடும் பிற பொய்யுலகோடு விரவிப் பெரும் பொய்க்கு நிலைக்களமாகிவிட்டமையாற்றான் பொய்யாமை பற்றிய பழந் தமிழர் கொள்கையை ஈண்டு விளக்க வேண்டுவதாயிற்று. பொய்யாமை பற்றி அருந்தமிழ் மொழியிலுள்ள உயர் சொற்கள் பிற எம்மொழியிலும்

இராவென்று இயம்பலாம். ஆனால் தமிழர் அதனை அறிந்துகொள்ளாதது ஓர் பெருங் குறையேயாகும். சத்தியம் என்ற வடசொல்லைப் பெருமையுடையதாக வும் உண்மை வாய்மை மெய்ம்மை யாதிய அருந் தமிழ்ச் சொற்களை அதனினும் சிறுமையுடையனவாக வும் தமிழ்மக்கள் எண்ணுகின்றார். அது தவறு! தவறு!! தவறு!!! இச் சீரிய உண்மை, வாய்மை, மெய்ம்மை என்ற சொற்களுக்கிணை எச்சொல்லு மில்லை. நுண்பொருள் பலவற்றை அடக்கிக்கொண் டிருக்கும் இச் சொற்களின் பொருளுக்கேற்ப மக்கள் நடக்கும் நாளைக் கடவுள் என்று நல்குவரோ?

## ௧௬. யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்

இப்பேரற உரையை அருளிய பெரியாரின் பெருந்தகையை என்னென்றியம்புவது! எம் மொழி கொண்டு அலங்கரிப்பது!! இவ்வெண்ணம் மக்கட்குத் தோன்றுமானுல் வையகம் இன்றே அறவாழ்வு வாழ்ந்துவிடுமல்லவா? 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்று ஓயாது கூறி, ஓயாது எழுதி, ஓயாது செயலிற் காட்டுதலன்றே அறவோர் கடன். இக் கருத்துப்படவே "தாமின்புறுவ துலகின் புறக்கண்டு, காமுறுவர் கற்றறிந்தார்" என்றருளினுர் வள்ளுவனுரும்.

* * *

சிறியதாயினுஞ் சரி; பெரியதாயினுஞ் சரி; தாமனுபவிக்கும் இன்பத்தை மற்றையோரும் நுகரல் வேண்டும். இவ்வெண்ணம் கொண்டு மக்கள் கருமமாற்றுவார்களானுல் உலகெலாம் துன்பின்றி இன்புற்று வாழும்; அறம் வளரும்; மறந் தேயும், இவ்வெண்ணங் கைவரப்பட்டவிடத்து அடிமை வாழ்வு இடம் பெறுதன்றே? இந்நாள் உலகில் மக்கள் தாம் இன்புற்று வாழ்தற்கன்றே பிறரைத் துன்புறுத்துகின்றனர்? மக்கள் செய்யும் எல்லாச் செயலும் தமது இன்ப வாழ்வை முன்னிட்டேயன்றே? "தாம் பெற்ற இன்பத்தை மற்றவரும் பெற வேண்டும்; உலகெலாம் ஒரேபடித்தான இன்பத்தை நுகரல்

வேண்டும்" என்று கருதுமிடத்து உயர்வு தாழ்வு ஏது?

*　　　　*　　　　*

ஒவ்வொருவரும் தாம் பெற்ற இன்பத்தை உலகம் பெறச் செய்தல் வேண்டும் என்ற கருத்துக் கொண்டு கரும மாற்றவேண்டுமென்பதுகொண்டே இவ்வறவுரை எழுந்தது. இவ்வறவுரை வழி, மக்கள் முனைந்துவிடுவாரானால் அழுக்காறு, அவா, வெகுளி முதலாயின இவ்வுலகில் இடமின்றி வேறுலகம் நாட நேர்ந்துவிடும். வேறு ஒன்றும் செய்தல் வேண்டாம். எல்லோரும் தங்களைப்போல மற்றவரும் இருக்க வேண்டுமென்று எண்ணினால்-நடத்தினால் போதும். யாவும் இதில் அடங்கிவிடும். உலகம் இன்னே முன்னேறிவிடும். சான்றுகளாகப் பல கூறுதும்! நல்லறமறிந்த ஒருவன், தானறிந்தவற்றை யெல்லாம் பிறர் அறியவேண்டுமென்று எண்ணுதல் வேண்டும்; அறிவித்தல் வேண்டும்; அவ்வறமறிந்ததால் தாம் பெற்ற இன்பத்தைப் பிறரும் நுகர்வதைக் கண்டு மகிழல் வேண்டும். ஒரு நல்ல நூல் கற்ற ஒருவன், தாம் அந்த நூலைப் பயில்தொறும் உறும் இன்பத்தை ஏனையோரும் பெறச் செய்தல் வேண்டும்; அவ்வாறு செய்து அவ்வின்பத்தை ஏனோரும் துய்த்தலைக் கண்டால், நல்லறிஞனுக்கு மேலும் அதிக இன்பமே தோன்றும். நாம் கற்றதைப் பிறரும் கற்றுக் கொண்டுவிட்டால் நமக்குப் புகழ் இறங்கிவிடுமே என்று கருதுதல் சிறியோர் செயல்; அவ்வெண்ணமுள்ளோர் ஒருநாளும் ஈடேறமாட்டார்; அவர் நிலைத்த இன்பம் பெறமாட்டார். ஒரு பத்திராசிரியனாக உள்ள ஒருவன், பத்திராசிரியனாகவிருந்து தான்

பெறும் இன்பத்தை ஏனேரும் பெற விரும்பவேண்டும்; எல்லோரும் பத்திராசிரியராக வேண்டுமென்று விரும்பினுல் முடியுமா? என்று எண்ணலாம். அவ்வாறு பார்ப்போமாஞல் எல்லாப் பொருள்களும் இவ்வாறே முட்டுப்படும். நாம் முயன்ருல் ஆவது ஆகட்டும். அவ்விழைவு தோன்றுதல் வேண்டும். அது தோன்றுமேல் தக்க நிலையில் உள்ளவரை எல்லாம் அவ்வின்பம் நுகரச் செய்யலாம்.

*   *   *

ஒரு தொழில் வல்லோன், தான் வல்ல தொழிலில் எல்லோரும் வல்லவராக வேண்டும் என்ற நசையுறல்வேண்டும்; அதற்காவன செய்தல் வேண்டும். ஒரு சமய அன்புள்ள ஒருவன், எல்லோரையும் சமய அன்புள்ளவராகச் செய்தல் வேண்டும். தெய்வ பக்தியுள்ள ஒருவன், அனைவரையும் தெய்வ பக்தியுள்ளாராக்குதல்வேண்டும். கருணையே கடனுகக்கொண்ட ஒருவன், எல்லோரையும் அதில் வல்லவராக்க முயல்தல் வேண்டும். ஒரு கற்புக்கரசி, எல்லோரையும் கற்புடையராக்கக் கருதவேண்டும். காதலற் பேணும் ஒருத்தி, தன்னைப்போலவே அனைவரும் கொழுநற் பேண ஆவன செய்தல் வேண்டும். பெண்களை இழிவு படுத்தலாகாதென்ற பெருங்கொள்கை கொண்டு அவர்களை இழிவுபடுத்தாமல் தன்னேடு ஒப்ப நோக்கி அதனுல் நல்லின்பம் துய்க்கும் ஒருவன், அவ்வின்பத்தை உலகம் நுகர அல்லும் பகலும் அகலாதுழைத்தல் வேண்டும். தான் மனைவி மக்களோடு மாளிகையிலமர்ந்து உலக இன்பங்களை அநுபவிக்கும் ஒருவன், மனைவியின்றி மக்களின்றி வாழ்வின்றி மற்றவர் மயங்குவதைப் பார்த்துக்கொண்டிருத்தல்

ஆகாது. தான் நுகரும் இன்பங்களை யெல்லாம் அவர்களும் நுகர இம்மியும் தாழாது பணி செய்ய எழுதல் வேண்டும். தான் அரசனுயிருக்கும் ஒருவன், அனைவரும் அரசனுகவேண்டுமென்று கருதுதல்வேண்டும். தன்னரசு நாட்டில் வாழும் ஒருவன், தன்னுட்டைப் போல எல்லா நாட்டையும் தன்னரசு நாடாக்கத் தாழாது ஞற்றல்வேண்டும். இவ்வாறே ஏனைப் பலரும் தாம் தாம் பெற்ற இன்பத்தைத் தரணி முழுதும் பெற விழையவேண்டும். தன்னைப்போலவே மற்றையோரும் ஆகவேண்டுமென்ற இப்பெரு நோக்கங் கொள்ள வேண்டுமென்று கூறும்பொழுது மற்றவரைத் தன்னினும் தாழ்வுபடுத்தலாகாதென்பது கூருமலே கிடைக்கும்.

* * *

மற்றையோரைத் தாழ்த்திப் பெறும் இன்பத்தை விரும்பும் மக்களன்றோ பலர் மல்கிவிட்டனர். தாம் பெற்ற இன்பத்தை வையகம் பெறக் காண்பதே பேரின்பமெனக் கூறிஞல் அது பலருக்கு வியப்பாகவிருக்கும். எல்லோரும் தன்னிலை அடைந்துவிட்டால் தனக்கு இன்பமில்லை யென்றன்றோ கருதுகின்றனர்? ஒரு நாட்டை மற்ருெரு நாட்டார் அடக்கி யாள்வதையே தங்கள் பிறப்பின் பயனுகிய பேரின்பமெனச் சில நாட்டார் கொள்கின்றன ரன்ருே? பிற நாடு கொள்ள வெறி கொண்டு அலைந்து திரிகின்றனரல்லவா, சில நாட்டார்? 'யாம்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்ற அறவுரைக்கும் இவர்கட்கும் என்ன சம்பந்தம்?

* * *

மற்ற வகுப்பாரை எல்லாம் அடிமையாக்கி வாழ்வதே இன்பமெனச் சில வகுப்பார் கொள்கின்றன ரன்றோ? தாம் ஏற்றமுடையார்; மற்றவர் தாழ்வுடையார் என்று கூசாமல் கூறித் திரிகின்றன ரன்றோ? உண்மையில் அவர் பிறரை இழித்துக் கூறுதலே இன்பமாகவே கொள்கின்றனர். இவர்கள் 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற நல்லுரையைக் காதில் கேட்டுக்கூடவிருக்கமாட்டாரோ? கேட்டிருப்பினும் பயனென்? செய்கைக்கு வராத வரைச் சிறப்பேது? செல்வர் வறியரைத் துன்புறுத்துதலையே இன்பமாகக்கொள்கின்றனர். அவ்வாறு கருதும் அவர், தாம் பெற்ற இன்பத்தை வையம் பெறுமாறு செய்ய யாங்ஙனம் சாலும்? வையமெல்லாம் ஒரே படித்தான இன்பம் பெறவேண்டுமானால் ஏற்றத் தாழ்வு ஒழிந்தாலன்றி அமையுமோ? செல்வர் ஏழையரைத் தங்கள் நலனின் பொருட்டுப் படைக்கப் பட்டதாகவன்றோ கருதுகின்றனர்?

* * *

இவ்வுலகம் பெரிய வேடிக்கையுடையதாக வன்றோ விருக்கிறது! ஒவ்வொரு சாராரும் சில சாராரைத் தாழ்வுடையாராகக் கருதி, தங்களின் பொருட்டே கடவுள் அவர்களை ஆக்கினரென்று வாய்கூசாது வழங்குகின்றனர். செல்வர் தம் பொருட்டு வறியர் படைக்கப்பட்டதாகக் கருதிக் கருமமாற்றுகிறார். உடல் வலியுள்ளோர், வலியினால் வென்றவர்க்கே வையகம் எனக் கருதுகின்றார். படை வலியுள்ளார், அதன் கீழ்ப்பட்டதே அவனி என்றறைகிறார். ஊன் நசையினர், தம்பொருட்டாகவே உயிர்ப் பிராணிகளெல்லாம் படைக்கப்பட்டதாக

உரைக்கின்றார். ஆண் மக்கள் தாங்கள் நலந்துய்த்தற் காகவே பெண் மக்கள் படைக்கப்பட்டதாகப் பேசு கிறார். கருவி வலியுள்ள நாட்டார், தாம் ஆள்தற் காகவே கடவுள் பிற நாடுகளையும் படைத்துக் கொலைக் கருவிகளையும் நம்மிடம் தந்திருக்கிறாரென எண்ணிக்கொண்டிருக்கிறார். மக்கள் இவ்வாறன்றோ தங்கள் தங்கள் பலத்திற்கேற்றவாறு எண்ணங்கொள் கின்றனர். இம் மக்கட்கும் அன்பு நெறிக்கும் என்ன சம்பந்தம்? "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வைய கம்" என்று இவர்கள் எங்கு சிந்திக்கப்போகின்ற னர்? என்றாலும் இவர்களையும் விடக்கூடாது. 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று எண் ணுங்கால் இவர்களும் வையகத்துள் அடங்கியவ ரன்றோ? வையகம் முழுதும் இன்பம் பெறவேண்டு மானால் எல்லோரும் முன் குறித்தனபோன்ற தீமை களை அகற்றல் வேண்டும். 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்றபடி பொறாமை கொண்டோ பிறகொண்டோ இன்பம் நுகரவெண் ணுவோர் அவ்வாறே வையகமும் இன்பம் பெற வேண்டுமென்று கூற முந்துவரோ என்ற வினாவெழ லாம். பொறாமைபோன்றவையால் விளைவது இன்ப மாகுமலன்றோ இவ்வினா வேண்டும். தீயனவற்றால் நிலைபெறும் இன்பமேது? நூல்கள் எதை இன்ப மென விதித்தனவோ, அறவோர் எதை இன்பமென அறைந்தனரோ அதுவே இன்பம். அவ்வின்பம் நல்லனவற்றினின்றும் பிறக்கமுடியுமே தவிரத் தீயன வற்றினின்றும் தோன்றமுடியாது. அந்நல்லின்பமே வேண்டத்தக்கது. அவ்வின்பமே எல்லோரும் பெற வேண்டுவது; அவ்வின்பம் பெறும் அனைவரும்

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்று வழங்குதல்வேண்டும்; எண்ணுதல் வேண்டும்; எழுதுதல்வேண்டும்; செய்திடல்வேண்டும்.

* * *

இந்நாள் "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என எண்ணுவோர் இருக்கின்றனரா வென்றால் ஏன் இல்லை? ஆங்காங்கு இலைமறை காய் போல் இருக்கின்றனர். ஒருவரைக் குறிப்பிடலாம். அவர் யாரென்று கூறவும் வேண்டுமோ? அவர்தாம் உலகிற் பெரியார்; காந்தியடிகள். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என எண்ணி இன்ப வாழ்வு வாழ்தலே அறவோர் கடன்.

# சக்தி மலர்கள்

## அ க ண் ட இ ந் தி ய ா

ஆசிரியர் — மொழிபெயர்த்தவர்

கே. எம். முன்ஷி — கொடுமுடி ராஜகோபாலன்

விலை ரூ. 1—0—0

---

### அச்சில் உள்ளவை

10. டால்ஸ்டாய் சிறு கதைகள்—மூன்றும் பாகம்
சுப. நாராயணன் மொழிபெயர்ப்பு

20. பிரயாண நினைவுகள்
ஏ. கே. செட்டியார்

22. இருளின் வலிமை
ஆசிரியர்: லியோ டால்ஸ்டாய்
மொழிபெயர்த்தவர்: நா. வானமாமலை, பி.ஏ.

23. கட்டுரைகள்
மு. அருணசலம், எம்.ஏ.

24. டால்ஸ்டாய் கட்டுரைகள்
கா. ராமனுதன் செட்டியார்
மொழிபெயர்ப்பு

25. நவரசம்
பல அறிஞர்களின் பேச்சுத் தொகுதி

# சக்தி மலர்

3467

சக்தி மலர்ப் பதிப்பு நூல்கள் தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் ஏற்ற உயரிய நற்கருத்துக்களைத் தெளிவான எளிய நடையில் வெளியிட எழுந்தனவாகும்

'இன்பம் எப்பொருளினும் இல்லை; உளத்தின் உணர்ச்சியே இன்பம் என்பது. இன்பம் என எண்ணித் தீமை செய்தலாகாது. இன்பம் உள்ள உணர்ச்சியே என்பதை உளம்பொருந்த உணர்ந்துவிடுவார்களானல், பின்னர் இன்பம் என எண்ணிச் செய்யும் தீமைகளை யெல்லாம் போக்கிவிடுதல் கூடுமன்றோ ?'

சக்தி காரியாலயம்

காரைக்குடி — மதுரை